MASTER NEGATIVE NUMBER

6152.73

ஊழியன்
மலர் 6, இதழ் 44
July 06, 1926

Record no. 148

Ū*ḻ*iyaṉ

Malar 6, itaḻ 44

July 06, 1926

Record no. 148

சென்னைப் பதிவு எண் கஉ௦கூ

தனி இதழ் விலை அணு ஒன்றரை

தந்தி விலாசம்:—"OOLIAN"

ஊழியன்

சந்தா விபரம்.

வருடச் சந்தா ...	௩—0—0
ஆறுமாதச் சந்தா ...	௲—0—0
வெளிநாடு வருடச் சந்தா	௬—0—0

செவ்வாய்தோறும் திகழ்வது.

ஆசிரியன்—ராய. சொக்கலிங்கன்.

விளம்பர விகிதம்.

அங்குலம் ௧-க்கு வாரம் ௧-க்கு 0—௮—0.
நீடிமன்ற விளம்பரம் அங். ௧ ௧—0—0.
ஒப்பந்த விளம்பரவிகிதத்திற்குக்காரியஸ்தருக்கு எழுதவும்.

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. —திருக்குறள்.

நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல். —திருக்குறள்.

மலர் ௬. காரைக்குடி. அட்சய-ஹு ஆனி-மீ ௨௨-உ (௬—௭—௨௬) இதழ் ௪௪.

மலர் மணம்.

இயற்கை இன்பம்.

இயற்கை இன்பம் என்பது எது என்று அறிந்துகொள்வோர் தொகை மிகக் குறைவு இந்நாள் நமது நாட்டில். பொதுவாக இன்பத்தையே இதுகாலை நமது நாட்டார் மறந்துவிட்டார் என்று வழுத்துதல் தவறுகாது. இன்பம் நுகர்ந்துகொண்டிருந்தாலன்றே அதனை மறவாதிருப்பர். நாடு துறந்த அன்றே இன்பத்தை முற்றும் துறந்தாய்விட்டது. உண்டியும் உடையும் உறையுள்ளுங் கூட ஒல்லுமாறு பெறு நிலையில் இன்பம் துய்த்தல் யாங்ஙனம்? செல்வமும் பிறவும் குறைவின்றிப் பெற்றார்க்கன்றிப் பிறர்க்கு இன்பப்பேறு கிட்டுவதில்லை. இது பொது வீதி. மாறுபாடும் உண்டு.

* * *

இயற்கை இன்பம், செயற்கை இன்பம் என இன்பத்தை இரண்டாகப் பிரிக்கலாம். இன்பம் கொள்ளத்தக்க ஒரு பொருள் என்பதை எவரும் மறுக்கமாட்டார். அவ் இரண்டு இன்பங்களுள் ஈண்டெடுத்துக்கொள்ளப்பட்டது முன்னையதாகிய இயற்கை இன்பத்தையே. இரண்டு இன்பங்களும் வேண்டற்பாலனவேயெனினும், இரண்டனுள்ளும் சிறப்புப் பொருந்தியது இயற்கை இன்பமேயாம். பேரறிஞர்க்கு இயற்கை இன்பமே பெரு விருந்தளிப்பது. இயற்கை இன்பத்தைக் கண்டன்றே கவிகளாகிய அறிஞர்கள் தாங்கள் திளைத்த அந்நல் இன்பத்தைச் சொற்களால் தொகுத்து அழகுபடத் தொகுத்திருக்கின்றனர்? அன்றியும் இயற்கை இன்பம் எல்லோரும் நுகரத்தக்கவாறு இயல்பாகவே அமைந்துகிடப்பது. மக்கட்கும் பிற உயிர்கட்கும் இன்பம் தருவதற்கென்று எவராலும் ஆக்கப்பட்டதன்று இயற்கை இன்பம்.

* * *

இயற்கை இன்பம் செல்வர்க்கும் வறிஞர்க்கும் மாறுபட்ட இன்பம் தருவதன்று. எத்துணைப் பெருஞ் செல்வராயினும் எவ்வளவு வறிஞராயினும் அவர் செல்வத்திற்கேற்ற அளவு இன்பப் பெருக்கமும் மற்றவர் நல்கூர்வுக்கேற்றபடியாக இன்பச் சுருக்கமும் இயற்கை இன்பத்தில் இல்லை. இயற்கை இன்பம் அப்பொருளைப் பொறுத்தவரையில் எவர் பொருட்டாகவும் எவ்விதச் சிறு மாறுபாட்டோடும் தோன்றும் இயல்பினதன்று. ஆனால் அவ் இன்பம் துய்ப்பதில் மக்கள் மாறுபட்டு நிற்பதுண்டு. அதற்குக் காரணம் கருத்து மாற்றமின்றி, இயற்கை இன்பத்தில் மாற்றமின்று என்பது ஒருதலை.

* * *

இயற்கை இன்பம் யாண்டிருக்கின்றது? அது எல்லா இடத்தும் உண்டு. ஆனால் அவ் இன்பம் மிகுதியாக இடம்பெற்று நிற்பது மலையினும் கடலினும் காட்டினும் யாற்றினும் அன்ன பிற இடங்களினுமேயாகும். இயற்கை இல்லாத இடம் கிடையாது. செயற்கையில்லாத இடம் உண்டு. இயற்கையினின்றும் செயற்கை தோன்றவேண்டுமேயன்றி இயற்கை இன்றிச் செயற்கை உண்டாதல் இல்லை. இயற்கை யாண்டுமிருந்தபோதினும் இயற்கை இன்பம் திறம்பட யாண்டும் அமைவதில்லை. இயற்கையில் இன்பம் தரும் பொருள்கள் குறித்த சில்லிடத்திலேயே உள. செயற்கை இன்பம் செல்வத்திற்கும் பிற சாதனங்கட்கும் தக்கவாறு அமைத்துக்கொள்ளும் தகுதி வாய்ந்தது. அது எங்கிருந்தும் நுகரத்தக்கது. இயற்கை இன்பம் அவ்வாறல்ல. இயற்கை இன்பத்தை விலைக்கு வாங்கமுடியாது. எத்துணைப் பெரும் பொருள் செலவிடினும் இயற்கை இன்பத்தை நாம் இருக்கும் இடங்கொணர்ந்து திளைக்க வொண்ணாது. இயற்கை இன்பம் வேண்டுமானால் கடலையும் மலையையும் காட்டையும் யாற்றையும் பிறவற்றையும் நாடி அவை இருக்குமிடம் தேடி ஓடவேண்டுவதே.

* * *

இயற்கை இன்பத்தை தம்முள் அடக்கிக் கொண்டிருக்கும் இப்பொருள்கள், தம்மை நாடி இன்பந் திளைக்க வரும் எவர்க்கும் ஒளியாமல் தம்மிடமுள்ளவற்றை நடுநிலையிற் சிறிதும் பிறழாது தருவன கண்கூடு. ஆனால் மக்கள் அவ் இன்ப நீர்மையை அறிந்து நுகர்வதில் மாறுபடுகின்றார். பொழுது விடிகின்றது. விடியும் அளவில் வேறுபாடு இல்லை. செல்வர்க்கு முன்னும் வறிஞர்க்குப் பின்னும் விடிகின்றதோ? அறிஞர்க்கு முன்னும் ஏழையர்க்குப் பின்னும் புலர்கின்றதோ? இல்லை; இல்லை. பொழுது விடிவில் வேறுபாடு இம்மியும் இல்லை. அதனை நுகர்வார் பலபடியாக இருக்கின்றனர். இருள் கிழித்து, ஒளி நல்க விடியும் பொழுதை அதற்கு முன்னே அன்போடு வரவேற்று விடிபொழுதின் இயற்கை இன்பம் கண்டு திளைத்து மகிழ்கின்றார் ஒரு சாரார். அவ்வின்பம் நுகர அறியாது கண்மூடிப் பாயலிற்கிடந்து வெய்யோன் தனது ஒளியை நிரப்பி முதுகில் அடித்த பின்னர் விழித்துப் பார்க்கின்றார் வேறொரு சாரார். விடிவது ஒரே சமயத்திலேனும் அவ்விடிவு காண்பது பல சமயத்தில் இருக்கிறது. அவ்விடிபொழுதாகிய இயற்கை நடுநிலை தவறவில்லை. அது எல்லோர்க்கும் ஒரே வடித்தாகவே இன்பம் ஈகின்றது. சூரியன் உதிக்கும் இயற்கையும் சந்திரன் முளைக்கும் இயற்கையும் எல்லோர்க்கும் ஒரே அளவான இன்பம் ஈவனவே.

* * *

இயற்கை இன்பம் ஈயும் எவ்வியற்கைப் பொருளையும் எடுத்துப் பார்க்கலாம். அவை யாவும் தத்தம் நீர்மைகளில் எல்லோர்க்கும் ஒரே தன்மையான நிறைவையே நல்குவதன்றி, முறை பிறழ்ந்து இவ்வுலகம் பேதையார்போல்—செயற்கை இன்பம்போல்—செல்வம் படைத்தார்க்குப் பேரின்பத்தையும் அது படையாதார்க்குச் சிற்றின்பத்தையும் தரும் சிறிய தன்மை பொருந்தியன வன்று. ஆனால், இயற்கைப்பொருள்கள் நடுநிலையோடு இன்பம் தருகின்றன வெனினும், அப்பொருள்களால் நுகரும் இன்பத்தை நுகர ஏழைகட்கு வாய்ப்பதில்லை. அப்பொருள்கள் இருக்குமிடந்தேடி அவ்வின்பம் நுகரப்பொருள் வேண்டியதாகவே இருக்கின்றது. சுற்றிச் சுற்றி இறுதியில் எல்லாம் பொருளிலேயே வந்து முடிகிறது. ஆகையினாற்றான் "பொருளிலார்க் கிவ்வுலகமில்லை" என ஆசிரியர் வள்ளுவனார் அறைந்தார் போலும்! நாம் மேலே குறித்தவாறு இன்பம் தரும் நல்இயற்கையாண்டும் அமைந்திருப்பதில்லை. அது மேலி வனத்திலும் குன்றிலும் ஆழியிலும் ஆற்றிலுமே மண்டிக்கிடக்கின்றது. குறித்த இப்பொருள்கள் எல்லாவிடத்தும் இருக்கின்றனவோ? இவை எங்கும் இருப்பின் எல்லோரும் இவை தரும் இன்பம் திளைக்க முடியும். இவை இருப்பது சில இடத்திலேயே. எனவே இவ் இயற்கைப் பேரின்பம் நுகர விழைவோர் ஆண்டுச் செல்ல வேண்டியவராகிறார். தம் இருக்கை விடுத்து—வேலைவிடுத்து, வேற்றிடஞ் சென்று இவ்வின்பம் நுகர ஏழையர்க்கு யாங்ஙனம் சாலும்? நம் இந்தியா நாட்டில் வயிற்றுக்கு போட்டுத் தொலைக்கத் தொழில் புரிந்து விட்டுச் செத்துத் தொலைவோரன்றே எண்ணற்றாராக விடுகின்றனர்? அதற்கும் வகையின்றித் தவிப்பார் பலர். அந்நிலையில் எவ்வாறு இன்பம் நுகர வேற்றிடம் நண்ணுவது?

* * *

இயற்கை இன்பம் பொதுவாக யாவரும் நுகரும் நிலையிலிருப்பினும் நுகரும் தகுதி சிலருக்கே அமைந்து கிடக்கின்றது. அது செல்வத்தைப்பற்றி நிற்கவில்லையேல் நன்றாகவிருக்கும். அவ்வுலகை எப்பொழுது காணப் போகிறோம்? அது ஒரு சில அறிஞரின் பேச்சளவில் எழுத்தளவில் காணக்கிடக்கின்றதன்றிச் செயலளவில் யாண்டும் கிடைக்கவில்லை. ஏன்? இப்பொழுது இதனை எழுதுகின்றவரிடம்கூட அதைக்காண முடியவில்லை. அவ்வாறு எல்லோரும் இவ்வின்பத்தைத் துய்க்கச் செய்ய வழியுந் தெரியவில்லை. உலகை நன்றாகச் சீர்தூக்கி அகத்தால் நிர்வகித்துப் பார்க்கும் எவரும் சட்டென்று இதில் ஒரு முடிவுக்கு வரமுடியாது. எனவே, எல்லாருக்கும் பொதுவில் எல்லா வழியும் தானே திறக்கின்றதில்லை. ஒவ்வொருவரும் எதற்கும் ஆற்றல் கொண்டுதான் போட்டிபோட்டு முன்னேறவேண்டியதிருக்கின்றது. ஆகலின் அவ்வழியில் கட்டுரையை நீட்டிக்கொண்டு செல்லாது, இயற்கை இன்பத்தில் சிறிது நுழைந்து கட்டுரையை முடிப்போம்.

* * *

இயற்கை இன்பத்திற்கு இணை எதுவுமில்லை. எத்துணை கோடி கோடி செலவிட்டு ஆக்கப்பெறும் செயற்கையிற்றோன்றும் இன்பமும் இயற்கை இன்பத்திற்கு ஈடாகாது. நாம் செயற்கை இன்பத்தையும் நன்குதிளைத்திருக்கிறோம். இயற்கை இன்பத்தையும் நுகர்ந்திருக்கின்றோம். இயற்கை இன்பத்தை நோக்கும் பொழுது செயற்கை இன்பம் எம்மாத்திரம்? இயற்கை இன்பம் அகவொழுக்கம் போன்றது. செயற்கை இன்பம் புறவொழுக்கம் போன்றது. புறவொழுக்கத்திற்கும் அகவொழுக்கத்திற்கும் எத்துணை வேறுபாடுண்டோ, அவ்வளவு வேற்றுமையுண்டு செயற்கை இன்பத்திற்கும், இயற்கை இன்பத்திற்கும். ஆ! ஹா! இயற்கை தரும் இன்பம் என்னே! என்னே!! பெண் இன்பும் இயற்கை இன்பம் எனச் சிலர் கூறுவர். நாம் அவ்வாறு அறைந்து அமைய விரும்பவில்லை. பெண்ணின்பம் இயற்கை இன்பம் எனப்பேசி முடித்துவிட்டால் பெண் ஆணுக்கு இன்பம் நுகரப்படைக்கப்பட்ட ஒரு பொருள் என்று ஆகிவிடுகிறது. அது தவறு. மற்றப் பொருள்களின் இன்பத்தை நுகர ஆணுக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அவ்வளவு உரிமை பெண்ணுக்கும் உண்டு. மற்றப்பொருள்களின் இன்பத்தை நுகரவேண்டிய பெண்ணைத் தாழ்த்தித்தான் பிறர்க்கு ஓர் இன்பப் பொருளெனக் கூறுதல் பேதைமை. ஆகையினாலே பெண்ணின்பம் இயற்கை இன்பம் என்பதை நாம் மறுக்கின்றோமென்று கருதற்க. பெண்ணின்பம் ஆணுக்கு இயற்கை இன்பமே. அதுபோலப் பெண்ணுக்கு ஆணின்பம் இயற்கை இன்பமாகும். பெண்ணுக்கு ஆணின்பமும் ஆணுக்குப் பெண்ணின்பமும் இயற்கை இன்பம் என்று இயம்புதல் பொருந்தும். பெண் இன்பம் ஒன்றுமட்டும் பேச

Roja Muthiah Research Library
3rd Cross Road, C P T Campus
Taramani, Chennai 600 113.

Best copy available

தல், "மன்னுசை, பேன்னுசை, பொன்னுசை" என்று பெண்ணைமட்டும் சேர்த்துக் கூறிய பிழைபட்ட கொள்கையோடு சேர்த்தெண்ணத்தக்கது. இன்ன கொள்கைகள் பெண்மையிற் பொறாமை கொண்டு பெண்மைக்குத் தாழ்வுகற்பித்த பேதைகளுடையன.

இயற்கைஇன்பத்தள் பெண்ணுக்கு ஆணும் ஆணுக்குப் பெண்ணும் நல்கும் இன்பம் தலைமை வகிப்பதோடு, பிற பொருள்களிடத்து நுகரும் இயற்கை இன்பத்தையும் பெண்ணும் ஆணும் சேர்ந்து காதல்படத் துய்த்தலே சிறப்புடைத்தாதலின் காதலர் கூடி நுகரும் இன்பமே யாண்டும் சிறப்புடைத்தாகின்றது. இயற்கை இன்பத்தை இருபாலரும் கலந்து நுகர்தல் வேண்டும். இயற்கை என்பது எவராலும் ஆக்கப்படாது தானே இருப்பது. அது தரும் இன்பமே இயற்கை இன்பம். இயற்கை இன்பம் மண்டிக்கிடக்கும் இடங்களுள் நமது மங்கலப் பாண்டிவள நாட்டிலுள்ள குற்றாலப்பதி ஒன்றாகும். அடுத்த கிழமை வரையப்போகும் "குற்றால வளம்" என்ற கட்டுரையில் இயற்கையின் வளமும் அவ் இன்பமும் விரிந்து விளங்கும். இன்று இதனோடு அமைவோம்.

தொழிலாளர்.

பண்டிதர் திரு. அ. கிருஷ்ணசாமி நாயுடு எழுதியது.

(நாகைப்பட்டினம் ரெயில்வேத் தொழிலாளர் சங்கம், எட்டாவது ஆண்டு நிறைவு விழா, ௧௯௨௬-ம் ஜூன்மீ ௧௯, ௨௦ நாட்களில் நடந்தபொழுது திரு. நாயுடு அவர்கள் எழுதியனுப்பி வாசிக்கப்பெற்ற கட்டுரை.) [ப-ர்]

மாண்புமிக்க அக்கிராசனரே!
தொழில் ஆறையில் தேர்ந்தவர்களே!!
சகோதரரே!!!

உயரிய உள்ளங்கொண்ட உங்கள் முன்னிலையில் எனது தூல உடலங்காட்டிச் சொற்பொழிவு நிகழ்த்தும் நற்பேறு வாய்க்காதவனானேன். உங்கள் திரு முன்னர் வர இயலாமற் போனதற்குப் பெரிதும் மன்னிக்க வேண்டுகின்றேன்.

தொழிலாளர் யார்? யாரென்றுரைப்பது? ஒவ்வோர் குழுவாய் ஒவ்வோரிடத்தமர்ந்து தொழில் செய்பவரையே தொழிலாளர் என்கின்றனர். அவ்விடத்தையே தொழிற்கூடம் என்கின்றனர். அத்தனித் தொதுக்கிய ஓரிடமோ தொழிற்கூடம்? அன்று; அன்று; இவ்வுலகமே ஓர் தொழிற்கூடம். இக்கூடத்தின் தொழிலாளர் யாவர்? இறைவன் உலகத்தை ஆக்குகின்றான்; அளிக்கின்றான்; அழிக்கின்றான். இம் முத்தொழிலையும் இறைவன் இடையறாது நடாத்துகின்றனன். இமைப்பொழுது இறைவன் தன் தொழிலைச் செய்யா தொழிவனேல், உலகம் எங்கே? நாம் எங்கே? இக்கூட்டம் எங்கே? இச் சொற்பொழி வெங்கே? ஓய்தலில்லா ஒரு பெருந்தொழிலாளர் இறைவன் தொழிலாண்மையின்றே உலகமும் உண்டு; உயிர்களும் உண்டு. நமது நிலைபெற்ற இருப்பும், உலகம் இடையறா ஒழுக்கமும், ஒப்புயர்வற்ற ஒரு பெருந்தொழிலாளியாம் ஆண்டவன் கையகத்தன்றோ அமைந்துள்ளது? இங்ஙனம் முத்தொழில் கொண்ட இறைவனே தொழிலாளியாயின், மற்றையோர் தொழிலாளர் என்பதில் ஐயம் என்னை? அச்சம் என்னை?

உலகின்கண் முதலாலிகள் தொழிலாளிகள் என்பதற்கு நாணுகின்றனர், நடுங்குகின்றனர். என்? இதுகாறும் இன்னோரைத் தொழிலாளர் எனச் சொல்லாமையே காரணமாகும். முதலாளிகளையும தொழிலாளர் குழுவினுள்ளே சேர்க்கின்றோம். பெரும் பணத்தை—முதலை—ஆளும் தொழிலாளிகள் முதலாளிகள் எனப்படுவர். முதலை ஆக்கும் தொழிலாளிகள் மற்றையோர் தொழிலாளிகள் எனப்படுவர். முதலை ஆளுதலும் நற்கைத் தொழிலே. முதலை ஆக்குவதும் நற்கைத் தொழிலே. முதலை ஆளுவதற்குப் பெரும்பணம் கூலியாகப் பெறுதலினாலோ, வேறு காரணத்தாலோ, ஒருவரை முதலாளி என்றும், பின்னொருவரைக் கூலியாளென்றும் உலகம் உரைக்கின்றது. பெரும்பணம் பெறுவது பெருங்கூலி; சிறுபணம் பெறுவது சிறு கூலி. முதலாளிபெருங்கூலிக்காரன். தொழிலாளி சிறு கூலிக்காரன்.

முதலாளியேயன்றி இன்னும் உலகில் பலதிறப்பட்ட தொழிலாளிகள் உளர். அவர்களைப் பருப்பொருளாகப் பார்க்கின் டலன் உழுது உண்மார், நிலன் உழுது உண்மார் என இருவகையுள் அடக்கலாம். அஃதாவது ஒரு கூட்டத்தார் அறிவால் தொழில் செய்து வாழ்பவர். ஒரு கூட்டத்தார் உழவால் தொழில்செய்து வாழ்பவர். இன்னொருவர் இவ்விரண்டானும் தொழில் செய்து வாழ்பவர். அறிவால் தொழில் செய்து வாழ்பவர் அனைவரும் உடம்பால் தொழில் செய்கின்றவரையே தொழிலாளரெனச் சொன்னமையான், அறிவுத்தொழிலாளர், தொழிலாளர் குழுவினின்றும் பிரிந்து மேன்மையுற்றவர்களாக எண்ணப்பட்டனர் போலும்! இப்புலன் உழுதுண்மாரினும் சிறு கூலி பெறுகின்றவர்களும் ஓர் முறையில் தொழிலாளர் என ஒப்பினும் ஒப்புவர். அப்பெருங் கூலிபெறுபவர் ஒருக்காலும் ஒப்பவே ஒப்பார். பெருங்கூலியின் பெருமை என்னே! அத்துணை என்? கம்பர் யார்? காளிதாசர் யார்? இளங்கோவடிகள் யார்? ஷேக்ஸ்பியர் யார்? இவரனைவரும் தொழிலாளிகளே, புலமைத் தொழிலாளிகளே! கம்பர் என்னும் கவிதைத் தொழிலாளி இல்லாதிருப்பனேல் இது காலே, "கம்பராமாயணம்" என்னும் கவியுலகத்தைக்காண்போமா? கம்பநாடரென்னும் பெரும்புகழ் படைத்த கவிதைச் சித்திரக்காரனால் தீட்டப்பட்டதன்றோ ஸ்ரீராமபிரானின் திருவிளையாடற் சித்திரங்கள்? கம்பநாடர் என்னும் கவிதைத் தொழிலாளர் தமது அறிவென்னும் எழுதுகோலினால், ஆராய்ச்சி என்னும் மையில் தோய்த்து, மனம் என்னும் படத்தில் வரையப்பட்ட சித்திரங்களன்றோ ஒவ்வோர் கவியும்? இக் கம்பநாடர் ஒலி வடிவச் சித்திரக்காரர்; ஓவியம் வரைவோர் வரி வடிவச் சித்திரக்காரர். கவிகள் சித்திரம் செவிகளுக்கு இன்பூட்டுகின்றன; ஓவியர் சித்திரம் கண்களுக்குக் களிப்பூட்டுகின்றது. நமது கண் முன்னர் இலங்கியிருந்த பாரதியார் ஒலி வடிவச் சித்திரக்காரர்; இரவிவர்மா வரி வடிவ சித்திரக்காரர். இவ்விருவகைச் சித்திரத் தொழில்களும் நம் கண் முன்னர் இலங்குகின்றனவன்றோ? இன்பூட்டுகின்றனவன்றோ?

இன்னும் உயரிய மன்றத்தில் நீதிபுரியும் உயர்ந்த நீதிபதியும் தொழிலாளியன்றோ? அந்நீதிமன்றத்தில் இல்லதையும் உள்ளதையும் புனைந்து உரைக்கும் வழக்கறிஞர்—வக்கீல்—ஒரு வகை தொழிலாளியே. முன்னவர் மாதக்கூலி பெறுகின்றார்; பின்னவர் நாட்கூலி பெறுகின்றார் கூலி பெரிதாயினும் தொழிலாளரன்றோ? மாதமொன்றுக்கு ஐந்நூறு ரூபாய் கூலி கிடைக்கும் தொழிலாளி, வழக்கறிஞன் அன்றோ? இல்லதும் உள்ளதும் புனைந்துரைத்து பணம் பறிப்பதே பெருநோக்கமாகக்கொண்ட வழக்கறிஞர் பெறும் கூலியினும், மற்றையோர் பெறும் கூலி எத்துணையோ மாண்புடைத்து! பொய்யை மெய்யாகவும் மெய்யைப் பொய்யாகவும் புனைந்துரைத்து பெருங் கூலிபெறும் வக்கீலைக் காட்டிலும் சிறு கூலி பெறும் தொழிலாளர்—பெண் தொழிலாளர்—எத்துணையோ பெருமை வாய்ந்தவர். இவ்வாடம்பர உலகம்—பெருமித உலகம்—வக்கீலின் வருவாயைப் பெரிதாக மதிக்கும், பேசும். ஆனால், அறிவுலகத்தில், ஆராய்ச்சியுலகத்தில், ஆண்டவன் உலகத்தில், நன்னெறியில் நின்று இயன்ற தொழில் புரிந்து சிறு கூலி பெறும் வாயில் காவலோரைச் சிறப்பாக மதிக்கப்பெறும்; செப்பப்பெறும். ஆகையால், கூலியைப் பற்றிக் கூறவேண்டா. தொழில் ஆற்றுவதில் ஆண்டியும் ஒன்றே. அரசனும் ஒன்றே. அனைவரும் தத்தமக்கு இயன்ற தொழில்களைப் புரிகின்றனர். நல்வழியில் செருப்பு விற்று வாணிகம் செய்யும் தொழிலாளியினும், தீய வழியில் பொன் குவித்து வாணிகம் செய்வோன் எத்துணையோ இழிந்தவனாவான்.

ஆகையால், அன்பர்களே! பெருங்கூலியோ பெரும்பணமோ பெறுவோனை முதலாளியென்றோ பெரியவனென்றோ மதித்தல் வேண்டாம். கூலி வேற்றுமையேயன்றித் தொழில் வேற்றுமை இன்று; எனினும் கூலியிலாயினும் உயர்வு தாழ்வுகள் உண்டெனலாம். தொழிலில் உயர்வேது? தாழ்வேது? நல்வழியில் ஆற்றும் ஒவ்வொரு தொழிலும் ஓர் வகையில் உயர்வே. அனைத்தையும் ஆக்கிய ஆண்டவன் திருமுன்னர் தொழிலில் வேற்றுமை காண்போர் யாவர்? இறைச்சியை விற்ற தர்ம வியாதன் என்னும் வேடன் தொழில் உபநிடதத்தில் உயர்வாகவன்றோ உரைக்கப்பெற்றுள்ளது? இறைச்சி விற்பது உயர்வோ இழிவோ அதைப்பற்றிய ஆராய்ச்சி வேண்டா. அஃதெங்ஙனமாயினும் ஆகுக. நல்வழியில் நின்று எத்தொழில் புரியினும், அஃது உலகில் நற்றொழிலே; அல்லவை தீத்தொழிலே. பொதுவாக எவையும் தொழிலே.

இங்ஙனம் எத்தொழில் புரிபவரையும் தொழிலாளர் குழுவினுள்ளே சேர்த்தல் வேண்டும். இனி வருங்கால உலகம் தொழிலாளர் உலகமாகவே பரிணமிக்கப் போகின்றது. அது காலே, முதலாளி என்போரும் தொழிலாளர்களே யாவர். நாம் முதலாளிகளின் பேரிலாவது, முதலின் பேரிலாவது குறை கூறவில்லை, முதலாளியும் நல்லவரே; முதலும் நல்லதே. முதலை ஆளும் முறை மட்டும் தீயது. எங்ஙனமெனின், முதலை ஆக்கும் தொழிலாளர்க்குக் கூலி குறைவு, மிகக்குறைவு. முதலை ஆளும் தொழிலாளிகட்கோ கூலி பெரிது, மிகப்பெரிது. இம் முறையை அடியோடே அகற்ற வேண்டுமென் று இதுகாலை இயம்பவில்லை. முதலாளிகள் பெரும்பாகம் ஊதியமாகப் பெறுவதை விடுத்துச் சிறுபாகம் ஊதியமாகப் பெறல் வேண்டுமென்றே வேண்டுகின்றோம். உணவு சமைப்போருக்கு உணவு இல்லை; ஆடை ஆக்குவோருக்கு ஆடையில்லை; வீடு தருவோருக்கு வீடு இல்லை; வாகனம் வகுப்போருக்கு வாகனம் இல்லை. எல்லாவற்றையும் இயற்றியும் என்? ஒன்றுமில்லாவெற்றுடலாக உறைகின்றனரே! இக் கொடுமையைக்கூறி என்? முதலாளியோ உறுமுகின்றான்; உறுத்துகின்றான்; சீறுகின்றான்; சிரிக்கின்றான். அம்முதலாளிகளின் உள்ளத்திலும் உரைகளிலும் உரைந்து கிடப்பதொன்றுண்டு. என்னே? நாங்கள் பெருமுதல் வைத்துத் தொழில் நடத்துகின்றோம். அதற்குப் பெரும் பகுதி ஊதியம் வேண்டாமா, தற்காப்புநிதி வேண்டாமா என்கின்றனர். அவ்வூதியம் எத்துணை என்பதும், தற்காப்பு நிதி எத்துணை என்பதும் அவர்களே வகுத்துக் கொண்டனர். அவ்வூதியத்தையும் நிதியையும் சிறிது குறைத்துக் கொண்டு தொழிலாளருக்கு நலம் செய்யவேண்டுமெனின், குறைப்பதென்னும் பொருளே—தங்கள்—முதலாளியின் அகராதியில் இல்லை என இயம்புகின்றனர்.

இம்முதலாளிகள், இறுமாப்பில் இங்ஙனமே இயம்புவர். இவ்விறுமாப்பிற்கு நாம் நடுங்கோம். இங்கிலாந்தினும் இம்முதலாளிகள் இங்ஙனமே அச்சுறுத்தினர், அடக்கினர், அகங்கரித்தனர், அங்கு அம் முதலாளிகளின் இறுமாப்பிற்கு இறுதி வந்துள்ளது. இம்முதலாளிகளின் இறுமாப்பில் வேர் வீழ்த்திருந்த பிரபுக்கள்—முதலாளிகளின் ஆட்சியைத் தகர்த்தன்றோ தொழிலாளரின் ஆட்சி அரும்பித் தலைகாட்டிற்று? ராம்சே மெக்டானல்டு என்னும் தொழிலாளர் தலைவர் ஆற்றலினாலும் முயற்சியினாலும் ஒன்பது திங்கள் இங்கிலாண்டில் தொழிலாளர் ஆட்சி இலங்கிற்று. இப்பொழுது நிகழ்ந்த கனித் தொழிலாளர்களுக்குள்ளே ஓர் கட்டுப்பாடும் உறுதியும் உண்டென்பதும், முயன்றால் எத்துணைக்காரியத்தையும் நிலை நிறுத்தலாம் என்பதையும் காட்டுகின்றதன்றோ? இங்ஙனம் ஒற்றுமையும் உறுதியும் வாய்ந்த தொழிலாளர் ஆளுகையில் உலகம் ஆளப்படும் என்பதில் ஐயம் இல்லை. உலகில் ஒவ்வோர் தொழிலாளர் உள்ளத்திலும் "நாம் உழைத்து ஊறுபட்டுத் தொழில் செய்கின்றோம். நம் உழைப்பினும் உறுதியினும் வரும் பெரும் பயனை இன்னொருவன் நுகர்கின்றான்" எனும் எண்ணம் ஆழ்ந்து பதிந்துள்ளது. இவ் எண்ணங்களை அகற்றவல்லோர் யாவர்? உள்ளத்திலுள்ளது உரையாகும்; உரையிலுள்ளது செய்கையாகும். இச்செய்கையைத் தடுக்க வல்லார் ஒருவரும் இலர்.

இது காலே, கண்காணும் கடவுள்—தெய்வத் தொழிலாளர்—மகாத்மா காந்தியடிகள் திருவருளினால் உலகமேதொழிலாளர் என்ற உணர்ச்சி பரவி வருகின்றது. முதலாளி என்பதன் மூலதத்துவம் மூடப்படுகின்றது. வருங்கால உலகம் தொழிலாளர் உலகம் ஆதல் வேண்டுமென்பதே ஆண்டவன் திருவுருள். இதுபோழ்து நடைபெறும் அரசியல் வாணிக அரசியல், இவ்வாணிக அரசியல் பகுதியும் 200 ஆண்டுகளாயின. இனித் தொழிலாளர் அரசியல் தொடக்கப் பெறல்வேண்டும். அவ்வரசியலில் பெரும்பான்மையும் தொழிலாளர் அரசராயும், அமைச்சராயும், தண்டத் தலைவராகவும், பிற அரசியல் நிருவாகிகளாகவும் வீற்றிருப்பர். இங்ஙனம், வருங்காலத்தில் வாழ்வு பெறும் தொழிலாளர் வாழ்க; சங்கங்கள் வாழ்க; வாழ்க.

வந்தேமாதரம்.

ஆங்கில வேலை நிறுத்தம்.

(ஆங்கில நாட்டில் நிலக்கரிக்கனித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினால், தொழிலாளர்களுக்கு நன்மை ஏற்படவில்லை. வேலை நிறுத்தம் தோற்றுப்போன தற்குச் சில காரணங்களைக் குறிப்பிட்டு, "மாடர்ன் ரிவியூ" பத்திரிகை எழுதுகின்றது. வேலைநிறுத்தத்தின் மூலமாய் ஜர்மனி நாட்டில் அரசியல் புரட்சி உண்டாயிற்று. எனினும் சுமார் பத்துஇலட்சத்துக்கு அதிகமான தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தும், பயன் படாமல் போனதன் காரணத்தை இந்தியர்கள் தெரிந்து கொள்வது நலம். எனவே அவைகளை மேற்கூறிய பத்திரிகையினின்றும் எடுத்து இங்கு பிரசுரிக்கிறோம். ப. ர்.)

கூலித்தகராறினாலும் வேலை நேரத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதாலும், ஆங்கில நாட்டில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் மனத்தாங்கல் உண்டாகி, அதனால் விளைந்த வேலை நிறுத்தம் நின்று விட்டபோதிலும், மேற்கூறிய இரண்டு கட்சிக்காரர்களுக்குமிடையே, நல்லுறவு ஏற்பட்டபாடில்லை. இந்தியத் தொழிலாளர்களைக் காட்டிலும், ஆங்கில நாட்டுத் தொழிலாளர்கள் தங்கள் சக்தியை நன்றாக அரண் செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களைக்காட்டிலும், ஆங்கில நாட்டு முதலாளி அரசாங்கத்தார் தங்கள் சக்தியை செவ்வனே வலுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த சங்கதியே, வேலை நிறுத்தம் தோற்றுப்போனதற்கு முக்கியமான காரணம் எனக் கூறலாம். தவிரவும், தொழிலாளர்களுக்குள்ளாகவே, அபிப்பிராயபேதம் இருந்ததாகத் தெரிகிறது. தொழிற் கூலியைச் சார்ந்து பிழைத்த பெரும்பான்மையான பெண் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் கூடாது என்று ஆட்சேபித்தார்கள்.

இடையே ஒன்று சொல்லவேண்டும். வேலை நிறுத்தக் காலத்தில் ஆங்கில நாட்டில் கலவரங்கள் நிகழ்ந்தன. புகை வண்டிகள் உடைக்கப்பட்டன. இத்தகைய கொடுமைகள் இந்தியாவில் நேரப் பெறின், இந்தியர்கள் சுயராஜ்யத்துக்குத் தகுதிபெறுதவர்கள் என்று (அதிகாரவருக்கத்தார்கள்) கூசாமல் சொல்லிவிடுவார்கள். இவைகள் ஆங்கில நாட்டில் நேர்ந்தமையினால், ஜனநாயக தத்துவத்தைத் தழுவி, அரசாங்க அமைப்பையும் தொழில்களையும் இன்னும் அதிகமாகச் சீர்திருத்தம் செய்யவேண்டிய தேவை தோன்றியது போலும்!

ஸ்ரீ சுப்பிரமண்ய ஜோஸ்யம்.

இனி வரும் 1-வருஷ திசாபுக்தி அந்திர பலனுக்கு ரூ. 1. ஷை பலன் 5-வருஷத்துக்கு ரூ. 2½. அஷ்டவர்க்க பிந்து விபரத்துடன் பலனறிய ரூ. 2½ ஜீவன பலன் திசா புக்தியாக 5-வருஷத்துக்கு ரூ. 1½. பூரா ஜாதக பலனறிய நேரில் எழுதியறியவும். பிரியமுள்ளவர்கள் 'பிறந்த வருஷம் மீ தேதி மணி மினிட் இரவு பகல் ஊர் முதலிய விபரமாயனுப்பினால் வி. பி. மூலமனுப்புவோம். வி. பி. சார்ஜ் பிரத்யேகம். வெளிநாட்டிற்கு ஒவ்வொன்றிலும் அணா 8 ஜாஸ்தியாகும்.

ஸ்ரீ சுப்பிரமண்ய ஜோதிஷாலயம்,
நெ. 1, மணக்கப்பன் தெரு,
ஆனைவெளி மதராஸ்.

"காளிதாஸன்"

(ஒருகதை.)

வ. ரா. எழுதியது.

கூளிப்பட்டிக் காலாற்றின் கரையில் இருக்கிறது. காலாறு என்றும் ஒரு ஆறும் இருக்குமா எனக் கேட்கலாம். சுத்த ஜலம் ஓடும் ஆற்றைப் பாலாறு என்று அழைக்கின்றார்கள். பாலாறு செங்கற்பட்டு ஜில்லாவில் ஓடுகின்றது. (வை) கையாறு மதுரைக்குப் பக்கத்தில் ஓடுகின்றது. பாலாறும் (வை) கையாறும் உண்மையிலேயே ஓடும் பொழுது, காலாறு கதையில்கூட ஓடமுடியாதா, ஓடக்கூடாதா? கதைக்குக் கால் இல்லை என்பார்கள். ஆனால் இந்தக் கதையில் காலும் ஆறும் கலந்து, சேர்ந்து நிற்கின்றன. எனவே, இந்தக் கதை ஏனைய கதைகளைவிட சிறப்பு வாய்ந்தது எனக்கூறலாம். இந்தத் தீர்ப்பு படிப்பவர்களின் அதிகார எல்லைக்குட்பட்டதாகும். அந்த எல்லையை நான் ஏன் தாண்டவேண்டும் அல்லது தீர்ப்பை எதிர்பார்க்க வேண்டும்?

கூளிப்பட்டிக்கு பட்டி என்ற பட்டம் கிடைத்ததே யொழிய, அது பட்டியல்ல. கூளிப்பட்டி, பட்டினத்தின் அளவையும் தன்மையையும் எட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறது. கூளிப்பட்டி நாட்டைச் சேர்ந்தது மல்ல; நகரத்தைத் தழுவியதுமல்ல. கிராமத்தின் இயற்கை வனப்பு கூளிப்பட்டியில் சிறிது சிறிதாக அழிந்து கொண்டு வருகிறது. நாகரிகத்தின் செயற்கை வளமும் இன்னும் செழுமை கொண்டு எழவுமில்லை. எனவே கிராமத்துக்கும் நகரத்துக்கும் இடையே நின்று, கூளிப்பட்டி இரண்டுக்கும் பஞ்சாயத்துச்செய்து கொண்டிருக்கின்றது. பஞ்சாயத்து எந்தப் பக்கம் சாயுமோ, அதைத் தீர்மானித்து, இப்பொழுது கூறமுடியாது. காந்திக்குப் பெருமை ஏற்பட்டால், கூளிப்பட்டி, கிராமத்துக்குச் சாதகமாகத் தீர்ப்பு சொல்லும். மோட்டார் அரசன் போர்டு அவர்களின் கீர்த்தி ஓங்குமாகில், கூளிப்பட்டி நகராமாகி விடும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆனால் காந்திக்கும் போர்டுக்கும் ஏற்பட்டிருக்கும் போட்டியைத் தீர்ப்பது எனது வேலையல்ல.

ஆறு காலாயிருந்தாலும், அதுகூளிப்பட்டியின் முக்கால் பகுதியைச் சுற்றி ஓடுகின்றது. கூளிப்பட்டியில் வளைந்தோடும் ஆற்றின் தோற்றம் மிகவும் அழகானது. "என்றைக்கிருந்தாலும், கூளிப்பட்டிக் காலாற்றோடு தான்" என்று ஜோதிடமோ, ஆரூடமோ, அந்த ஊரில் இன்னும், இன்றும் முழங்கி வருகின்றது. ஆனால் அந்தக் கூளிப்பட்டிக்குள்ளேன்றைக்கும் கோது என்பதைப் போய்ப் பார்த்தவர்கள் தெரிந்து கொள்ளுவார்கள்.

காலாற்றினால், கூளிப்பட்டி தேசு பெற்று விளங்குகின்றது எனச் சொல்லலாம். கூளிப்பட்டியின் நில வளத்துக் காரணம் காலாற்றின் நீர்வளம் என்று அந்த ஊரில் சொல்லிக் கொள்ளுகிறார்கள். நீர் வளமும், நில வளமும் ஒருங்கே சேர்ந்து கொண்டால், ஊர்க்காரர்கள் சோம்பேறிகளாக—இல்லை, தவறாகக் கூறிவிட்டேன்; சுகவாசிகள் என்று சொல்லியிருக்கவேண்டும்—வாழ்வது எளிதல்லவா? நிலங்களில் எருப்போட்டுப் பயிர் செய்தால், தழை மண்டிவிடும் என்று இறுமாப்புடன் பேசும் கூளிப்பட்டி வாசிகளின் பயிர்த் தொழில் திறமை எவ்வாறு இருக்க வேண்டும் என ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

கூளிப்பட்டிக்கு மரகதப் பச்சை எனக் கூசாமல் பெயரிட்டு அழைக்கலாம். எங்கு பார்த்தாலும் பீரங்கிகள் என்று போர்வீரர்கள் சொல்லுவது போல, கூளிப்பட்டியில் எங்கு பார்த்தாலும் பச்சை ஒன்றே காணப்படும். பசும்புல் தரைகள் இயற்கையின் இரத்தின கம்பளங்களல்லவா? இயற்கையின் செல்வ குழந்தைகளான சிறு குருவி, சிட்டுக்குருவி, முதலிய புள்ளினங்கள் பசும்புல் தரையில் கூடிக்கொண்டு ஆடுவதையும் பாடுவதையும் தங்கள் இனத்தாரை இங்கிதமாய் அன்பு கொண்டு கூவியழைப்பதையும் பார்த்தவர்களுக்கு, அந்த இடத்தை விட்டு, பெயர்த்து அடி வைக்கத் தோன்றுமா? கல்வியும் கலையும் கவலையைத் தணிக்கமாட்டா, ஒழிக்கமாட்டா. கவலையை ஒழிப்பது காட்சி ஒன்றே யாகும். அகக்காட்சி என்ற தத்துவ தரிசனத்தால், சாசுவதமாக சாந்தியடையலாம். வெளிக்காட்சி என்ற இயற்கையின் விசித்திரச் சித்திரத்தைக்கண்டு, சிறுபொழுதிற்கேனும் கவலையை ஒழித்துக் கொள்ளலாம்.

கொல்லைப்பச்சிலைமருந்துக்குதவாது என்பதுபோல, கூளிப்பட்டியின் பசுமையினால், கூளிப்பட்டி வாசிகள் இன்பப் பயன் பெற்றதாகத் தெரியவில்லை. மலிந்த பொருளுக்கு மதிப்புண்டா? எங்கும் நிறைந்து நிற்குங் கடவுளை மனிதர்கள் மனதில் கொள்ளுகின்றார்களா? பசுமை என்பது கூளிப்பட்டிக்கு பழமையாதலின், அதை அவர்கள் மதிப்பதில்லை போலும்! பசுமை ஒருபுறமிருக்க, ஆற்றில் படர்ந்து, விரிந்து, பாய்விரித்தது போல ஓடும் நீரைக் கண்டு, இயற்கையின் பெருமையைப் புகழாமலிருக்க முடியுமா? ஆயிரம் இயந்திரங்கள் எத்தனையோ ஆயிரம் குதிரைப் பலத்தைக்கொண்டு இயங்கினாலும், ஆற்றில் வற்றாமல் நீரை ஓடச்செய்ய முடியுமா? சிறு சிறு நீர்த்துளிகள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து, கட்டித் தழுவி, கலந்து கொண்டு, நிலப்பரப்பின் வழியே, கடலை நோக்கிப் பிரயாணம் செய்யும் விந்தையை எத்தகைய எழுத்தைக் கொண்டு எழுதுவது? இந்த நிகழ்ச்சியும் கூளிப்பட்டிக்கு மிகச் சாதாரணமாகும். எனவே கூளிப்பட்டியார்களுக்கு ஆற்றைப்பற்றியும் ஒரு அக்கறை இல்லை.

கூளிப்பட்டியில் தரையில் மட்டும் பசுமை என்பதல்ல. ஆகாயத்திலும் பசுமைதான். கூளிப்பட்டியைப் பூஞ்சோலை என்றே சொல்லலாம். தென்னை, மா, வாழை முதலிய கனி மரங்களைக் கணக்கின்றிக் காணலாம். இவைகளிடமிருந்து வாழ்க்கை இன்பத்தை அனுபவிக்க இயலாத கூளிப்பட்டியார், இவைகளைப்பற்றிய வம்பு வழக்குகளை நீதிஸ்தலங்களில் தொடர்ந்துவந்தார்கள். மரங்கள் வளர்ந்த வகை நுண்ணிய ஆராய்ச்சியாளர்களாலும் அறியமுடியாததாகும். என்றாலும் "என் பாட்டன் வளர்த்தது, என் மாமன் பயிரிட்டது" என்று அவைகளைப்பற்றி கோர்ட்டுகளில் வாதாடும் வழக்கத்தை மட்டும் கூளிப்பட்டியார் கைக்கொண்டிருந்தார்கள்.

கூளிப்பட்டியின் அமைப்பு வெகு நேர்த்தியானதாகும். கட்டிடங்களின் ஒழுங்கும், தெருக்களின் நேர்மையும் கண்களைக் கவரத்தக்கவை. சில வீதிகளின் நடுவே, வாய்க்கால்கள் இருக்கின்றன. நல்ல "அருந்தல்" காலத்திலும், தண்ணீர்த் தட்டு என்பது சிறிதுமில்லை. கால்வாய்களின் இரு பக்கங்களிலும் பாக்கு மரங்கள், மயில்கள் தங்கள் தோகைகளை விரித்தாடுவதைப்போல, காற்றில் அசைந்து ஆடுகின்றன. பாக்கு மரங்களில் சல்லாபம் செய்துகொண்டிருக்கும் பறவைகளைக் கண்டு, பரவசமாகாதவர்களும் இருப்பார்களா?

கூளிப்பட்டியில் ஏழை எளியவர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன. எத்தனையோ மடங்கள் உண்டு. விடுதிகள் உண்டு. எத்தனையோ பெயர்கள் மடங்களிலும் விடுதிகளிலும் வந்து தங்கி உறங்குவார்கள். ஆனால் அசுத்தத்தை அங்கு காணமுடியாது. சம்பளம் வாங்கி உழைக்கும் காவலாளிகளின் கட்டுப்பாட்டின் பயனா இது? அல்லது வழிப்போக்கர்கள் அவ்வளவு கவனத்துடனும் கவலையுடனும் இந்த விடுதிகளைக் கவனித்து வருகிறார்களா? பண்டைக் காலங்களில் தேவர்கள் இராக்காலங்களில் பூமியிலிறங்கி, விடிவதற்கு முன் கோயில்களைக் கட்டி முடிப்பார்கள்எனச் சொல்லுவதுண்டு. அவ்வாறு, இந்த விடுதிகளைத் தேவர்கள் சுத்தம் செய்கிறார்களா? இல்லை. மேற்கூறிய காரணங்களில் ஒன்றாயினும் சரியானதல்ல. இது தற்போது இரகசியமானதாகும். பின்னர் இதைப் பற்றிய முழு விபரங்களும் கூறப்படும். இது ஜாலவித்தையல்ல வென்றும் மனித முயற்சி என்றும் மட்டும் சொல்லக்கூடிய அளவாகும்.

கூளிப்பட்டியில் சற்றேறக்குறைய ஆயிரம் வீடுகள் இருக்கும். மாடமாளிகைகள் முதல் குச்சுவீடுகள் வரையில் உள்ள பலவகையான வீடுகளையும் கூளிப்பட்டியில் காணலாம். மிராசுதாரர்கள், லேவாதேவி செய்பவர்கள், வேளாளர்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள் முதலியவர்கள் இருக்கிறார்கள். பலவகைக் கம்மாளர்கள் இருக்கின்றார்கள். இது தொழில் முறைபற்றி உண்டான பாகுபாடு. ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள், முதலிய ஜாதி பாகுபாடுகளைத் தாங்கிய வகுப்பார்களும் இருக்கின்றனர். ஹிந்துக்களுக்குள் பிராமணர்கள், பிராமணரல்லாதார், பஞ்சமர் முதலிய வகுப்பார்களும் வசித்து வருகிறார்கள். சுருங்கக் கூறுமிடத்து, கூளிப்பட்டியை இந்தியாவின் சுருக்கம் என்று சொல்லுவது பொருந்தும்.

பண்டைக்காலந் தொட்டு, கூளிப்பட்டியில் பஞ்சாயத்து முறை மாறாமல் நடந்துவந்தது. ஆனால் இப்பொழுது அது சரிவர நடைபெறவில்லை. இருவிதமான பஞ்சாயத்துக்கள் கூளிப்பட்டியில் நடைபெற்றன. வீதிப்பஞ்சாயத்து, ஜாதிப் பஞ்சாயத்து. ஜாதிப் பஞ்சாயத்துகள், ஜாதி சம்பந்தமான வழக்குகளைத் தீர்த்துவந்தன. வீதிப் பஞ்சாயத்து வீதிசம்பந்தமான பொது விஷயங்களைக் கவனித்து வந்தது. பொதுவாக நடைபெற்றுவந்த ஊர்ப் பஞ்சாயத்து, எக்காரணம் பற்றியோ அழிந்து போயிற்று. இந்தப் பஞ்சாயத்து என் அழிந்தது எனக் கூளிப்பட்டியில் யாரையேனும் கேட்டால், மற்றவை யழிந்ததுபோல, இதுவும் போயிற்று என்பார் அவர். மற்றவை யாவை எனக்கேட்பின், ஒருபெரியஜாப்தாவைப் படிப்பார். படிப்பவர்களுக்கு இனிக்காது என்று கொண்டு, அது விடப்பட்டிருக்கிறது.

ஊரில் பல கோயில்கள் இருக்கின்றன. சிவன் கோயில், விஷ்ணு கோயில், காளி கோயில், மாரியம்மன் கோயில் அய்யனார், பிடாரி, கறுப்பு, முனியாண்டி முதலிய கோயில்கள் மலிந்து கிடக்கின்றன. வீதிக்கொன்று இல்லாவிட்டாலும், தனித்துப் பத்துப் பன்னிரண்டு பிள்ளையார் கோயில்கள் இருக்கின்றன. இவைகளைத் தவிர, வைரவன் சன்னதி என்று ஒரு மேடையிருக்கின்றது. அந்த மேடையில் சூலம் ஒன்று நாட்டப் பெற்றிருக்கின்றது. அந்த மேடையில் தினம் உடைபடுகிற தேங்காய்களை எண்ண முடியாது. எடுத்த காரியத்தில் வெற்றி தோன்றத் தீர்மானம் தேவையில்லை, தேங்காய்களே போதுமென்பது கூளிப்பட்டியார்களின் துணிபு போலும்!

காலாற்றிலே ஸ்னானம் செய்தவர் கூறியது அவ்வளவு உண்மையல்ல. கூளிப்பட்டியில் வசிப்பவர்கள் ஏழைகளுமல்ல; கொழித்த செல்வம் படைத்தவர்களுமல்ல. ஏழைத்தொழிலாளிகளும் வயிறார உண்ணவல்ல நிலவளம் உண்டு; ஆனால் அதற்கேற்ற வசதியில்லை. கள்ளுசாராயக் கடைகளும் காப்பிக்கடைகளும் இருக்கின்றன. ஆனால் யாரிட்ட சாபமோ, தெரியவில்லை. கள்ளுககடைகளுக்குப்போகிறவர்கள் காப்பிக்கடைக்குப் போவதில்லை. காப்பிக்கடைக்குப் போகிறவர்கள் கள்ளுக்கடைக்குப் போவதில்லை. ஒன்றிலே காலையில் கூட்டமதிகம்; மற்றொன்றில் மாலையில். இவ்விருவிதக் கடைகளுக்குள்ளும் தீராப் பகைமையும் போட்டியும் வந்ததற்கு என்ன காரணமோ, அது தெரியாது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், ஜனக்கணக்கு எடுத்த பொழுது, கூளிப்பட்டியில் சுமார் பதினாயிரத்துக்கு அதிகமான ஜனங்கள் இருந்தார்கள் எனத் தெரிகிறது. இப்பொழுது, அந்தத் தொகை இரட்டித்திருக்கும் எனத் தோன்றுகிறது. ஆள் அதிகரித்தால், பணமும் அதிகரிக்கும் எனச் சொல்லுவதுண்டு. ஆனால் பொதுவாக இந்தியாவில் இருப்பது போல கூளிப்பட்டியிலும் இருந்துவருகிறது. ஜனத்தொகை அதிகரித்த கூளிப்பட்டியில், பணம் மட்டும் பெருக்கடையவில்லை. முப்பதினாயிரத்துக்கு அதிகமாக வசித்துவரும்கூளிப்பட்டிவாசிகளில், பாதிக்குவெகு அதிகம்ஹிந்துக்கள். முஸ்லீம்கள் இரண்டாயிரம் பேர்கள் இருப்பார்கள். கிருஸ்தவர்கள் சுமார் ஆயிரம் பேர்கள் இருக்கும். கிருஸ்தவர்களிற் பெரும்பான்மையார், "பஞ்சம" ஹிந்துக்களாயிருந்தவர்கள். முஸ்லீம்களுக்கு இரண்டு மசூதிகளும் கிருஸ்தவர்களுக்கு ஒரு மாதா கோயிலும் இருக்கின்றன. மாதா கோயில் கம்பவுண்டுக்குள்ளிருக்கும் பங்களாவில் ஒரு பாதிரியார் வசித்து வருகிறார். அவர் சீமையிலிருந்து வந்தவர்.

கூளிப்பட்டியில் உயர்தரப் பள்ளிகள் இரண்டு இருக்கின்றன. ஒன்று கிருஸ்தவப் பாதிரிமார்களின் ஆதீனத்துக்கடங்கிய பள்ளிக்கூடம். மற்றொன்று, சில தனவந்தர்களால் அமைக்கப்பெற்ற பள்ளி. பெண்பாடசாலை ஒன்றிருக்கிறது. இது மாதா கோயில் பாதிரியாரைச் சேர்ந்தது. ஹிந்துக்களுக்காவது, முஸ்லீம்களுக்காவது, தனித்த பள்ளிகள் இல்லை; பெண்பாடசாலைகளும் இல்லை.

கூளிப்பட்டியில் இரண்டு நீதிஸ்தலங்கள் இருக்கின்றன. ஒரு ஆஸ்பத்திரி உண்டு. சிறிய சிறையும் போலீஸ் ஸ்டேஷனும் இருக்கின்றன. போலீஸ் நிலயத்துக்கெதிரே, வாரத்துக்கு இருமுறை, போலீஸ்க்காரர்கள் கவாத்துப் பழகுவார்கள்; பலர் அதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டு நிற்பார்கள், மற்றும் பலர் அச்சம் கொண்டு, அந்த விடத்தில் நிற்காமலே போய்விடுவார்கள். ஆனால் இதனால் கவாத்து நின்று போய்விடுமா? அது நடந்தே தீரும்.

"சமத்துவ" அமெரிக்காவில்

"நாளையுலகம்" என்ற பத்திரிகையில் காணப்படுவது

வெள்ளையாகள அமெரிக்கா நாட்டில் நீகிரோவக் கறுப்பர்களை எவ்வாறு மதித்து நடத்துகிறார்கள் என்பது கீழ்க்காணும் குறிப்புகளினின்றும் நன்கு தெரியும். என்றாலும் அந்த நாட்டில் சமத்துவம் பாராட்டப்படுகிறது என்று கூறிவருவதை நண்பர்கள் அறிவார்கள்...... (ப—ர் ஊழியன்)

சமீபத்தில், "கிருஸ்தவ ஹெரால்டு" என்ற பத்திரிகையில், ஜெருஸலத்துக்கு (கிருஸ்தவர்களின் புண்ணிய பூமி)ப்போகப் பாதிரிமார்கள் தேவை என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. இந்தப் பத்திரிகையை பல வருஷங்களாக வாங்கிவந்த ஒரு பாதிரியார், தமது கட்டணத்தைச் செலுத்தி, பிரயாணச் சீட்டும் பெற்றார். ஆனால் அவருடைய பிரயாணச் சீட்டை அதிகாரிகள் பார்த்ததும், பாதிரியார் கறுப்பு நீகிரோவர் என அவர்களுக்குத் தெரியவந்தது. நியூயார்க் நகரத்துக்கு வந்து சேர்ந்த பாதிரியார், கப்பலில் பிரயாணம் செய்யலாகாது என்று தடுக்கப்பட்டார். அவருடைய பணம் திருப்பிக்கொடுக்கப் பெற்றது. அவர் செலவுசெய்த பணத்துக்கு அதிகமாக கடுO டாலர்கள் கொடுக்கப்பட்டன.

"பாக்டரி ஆட்கள் தேவை; பழக்கமுள்ளவர்கள் மட்டும்; வெள்ளையருக்கு உச டாலர் சம்பளம்; கறுப்பாகளுக்கு உ௦ டாலர்!!"

தென்கரோலினா என்ற பிராந்தியத்தில் வெள்ளையனொருவன் ஒரு மோட்டார் காரைத் திருடிவிட்டான். அவனுக்கு முப்பதுநாட் காவல். நீகிரோவன் ஒருவன் ஒரு துவிச்சக்கரவண்டியைத் திருடிய குற்றத்துக்காக, அதே நீதிபதியால், அதே நாளில் மூன்று வருஷக் காவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக, சென்ற ஐரோப்பியப்போர் நடந்ததாகக் கூறப்படுகிறது. அந்தப் போரில், கல்விகற்ற ஒரு கறுப்பு கனவான் பிரான்சு நாட்டில், கலந்துகொண்டார். அவர் திரும்பி தமது வீட்டுக்கு வந்தார். கடற்சுங்கன் இலாகாவில் ஒரு வேலை காலிவிழுந்தது. அதற்காக ஏற்பட்ட போட்டிப் பரீட்சையில் தேறினார். அதுவும் முதலில் தேறினார் என்றும் க௦௦க்கு கூகு மார்க் வாங்கினார் என்றும் அறிவிக்கப்பெற்றது. தமது வேலையை நாடி, ஆபீசுக்குச் சென்றார். இவர் கறுப்பர் என்று கண்டதும் அந்த ஆபீசில் இருந்த சீமாட்டி திகைத்துப் போனாள். "அதனால் ஒன்றும் பாதகமில்லையே" என்றார் கனவான். "பாதகமில்லையா! உண்டு. பத்து வெள்ளைப் பெண்களை அதிகாரம் செய்யும்படியான உத்தியோகமிது" என்று முடித்துவிட்டாள். க௦௦க்கு எகு வாங்கின வெள்ளையன் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டான்.

"கறுப்பு"ப் பெண் ஒருவள் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தாள். கல்லூரிக்குப் பக்கத்தில் சில மைல்களுக்கப்பால் வசித்த தனது சகோதரனுடன் இரவில் தங்குவதற்காகச் சென்றாள். அவர் பெயர்பெற்ற விவசாயி. அந்தப் பக்கத்திலிருந்த வெள்ளை விவசாயிகளுக்கு மேற்கூறியவருடைய பருத்திப்பயிரைக் கண்டு பொறாமை. அவருடைய பருத்தி தீக்கு இரையாகும் என்ற வதந்தி இருந்துவந்தது. நடுநிசியில், குடிசைக்கு வெளியில் சத்தம் கேட்டது. சகோதரன் வெளியே சென்றார். சகோதரி காதில் வேட்டுச்சத்தம் விழுந்தது. அவள் வெளியே வந்ததும், தனது சகோதரன் செத்துக்கிடப்பதைப் பார்த்தாள். அவருடைய சவத்துக்குப் பக்கத்தில் அவள் நின்றுகொண்டிருக்கையில், "நாம் அவளையும் கொன்றுவிடுவோமே" என்றார்கள் சில வெள்ளையர்கள். கூடாது என்று கூட்டத்துத் தலைவர் கட்டளையிட்டார். யாருடைய உதவியுமின்றி, சவத்தை வண்டியிலேற்றி, சகோதரி பட்டினத்துக்குக் கொண்டு வந்து சேர்த்தாள்.

டிலாவேர் என்ற நகரில், ஒரு வெள்ளைப் பெண்ணைத் தாக்கிய குற்றத்துக்காக, கறுப்பன் ஒருவன் மரணதண்டனை அடைந்தான். கறுப்புப் பெண்களைத் தாக்கிய குற்றத்துக்காக அலபாமா என்ற விடத்தில் வெள்ளையர்கள் ஆளுக்கு உகு௦ டாலர்கள் அபராதம் விதிக்கப்பெற்றார்கள்.

தியாகம். உண்மைக் குரு.

மகாத்மா காந்தி "இளமை இந்தியா" வில் எழுதியது.

தங்களுக்குக் குடும்பச்சுமைகள் பல இருக்கின்றனவென்றும் பொதுஜன ஊழியத்துக்காக தங்களுக்குக் கிடைக்கும் ஊதியம் தங்கள் தேவைகளுக்கு போதுமானதல்லவென்றும் முறையிட்டு எனக்கு எழுதிய இளைஞர்களின் கடிதங்கள் என்னிடம் இருக்கின்றன. எனவே, கடன் வாங்கியோ அல்லது இனமாகப் பெற்றோ, பணம் சேகரித்துக்கொண்டு, பொதுஜன ஊழியத்தைச் சிறிது காலம் நிறுத்திவைத்து, ஐரோப்பாவுக்குச் சென்று, வருவாய் வழியைக்கண்டு கற்றுக்கொண்டுவரவேண்டும் என ஒருவர் எழுதுகிறார். நல்ல சம்பளம் கிடைக்கும் வேலையைத் தேடியலைகின்றார் மற்றவர். தொழில் நடத்தத்தக்க முதல் வேண்டுமென்கிறார் மூன்றாமவர். இவர்களில் ஒவ்வொருவரும் யோக்கியர், உழைப்பாளி, உறுதி கொண்டவர். ஆனால் சோர்வு ஏற்பட்டுவிட்டது. குடும்பத் தேவைகள் அதிகரித்துவிட்டன. கதர் வேலையிலும் தேசியக் கல்வி மூலமாயும் அவர்களுக்குத் திருப்தி உண்டாகவில்லை. அதிகமான வருவாய்க்கேட்டு, பொதுஜன ஊழியத்தின்பேரில் சுமையாகவிருக்க, அவர்கள் மனம் ஒருப்படவில்லை. இத்தகைய மனநிலையின் முடிவு என்ன? இந்த மனோபாவம் பொதுவாகிவிட்டால், இத்தகைய ஊழியர்களைச் சார்ந்து நிற்கும் பொதுஜன வேலை அடியோடு நின்றுவிடும். இந்த மனோபாவம் சாதாரண நிகழ்ச்சியாகாவிட்டாலும், கால அளவில் பொதுவாகி, முதலில் கூறப்பட்ட விளைவே தோன்றும்.

காலதேச வர்த்தமானங்களுக்கு மீறிய தேவைகள் நம்முள் பெருக்கடைந்து வருகின்றன என்று கண்டமையினாலே தான், ஒத்துழையாமை தோற்றுவிக்கப்பட்டது. எதன்பேரில் ஒத்துழையாமை? மனிதர்களின் பேரில் அல்ல. ஒருவகை மனோபாவத்தோடு ஒத்துழையாமையைத் துவக்கினோம். அந்த மனோபாவமே, நம்மைப் பொடியாக்கிவரும் அரசியல் அமைப்புக்குக் காரணமாயுள்ளது. அந்த அமைப்பின் விளைவு என்ன? நாட்டின் பொது நிலைக்குத் தகாத அளவு, நமது வாழ்க்கைத் தேவைகளைப் பெருக்கிவிட்டது. பிற நாடுகளின் விருந்து பொருள் சுரண்டி, இந்தியா வாழவில்லை. எனவே நமது ஜனசமூகத்தின் நடுத்தர மனிதர்கள்—அவர்களே தரகர்களாகும்—தங்கள் வாழ்வை விரித்துக் கொள்ளவே, ஜனசமூகத்தின் அடிப்படையானவர்கள் நசித்து வருகின்றார்கள். எனவே, சோர்வின் மூலமாய், சிறிய கிராமங்கள் யாவும் அழிந்து வருகின்றன. கூஉ௦-ம் ஆண்டில் இந்த உண்மை நம்மில் பலருக்குத் தெரியும். இந்தக் கொடுமையைத் தடுக்கும் இயக்கம் இன்னும் இளமைப்பருவத்திலேயே இருக்கின்றது. நம்மில் எவரும் அவசரப்பட்டுக் காரியம் செய்து, அதற்கு இடையூறு விளைக்கவேண்டாம்.

இவ்வாறு பொருளின்றிப் பெருக்கடையும் தேவைகளின் கொடுமையை, நமது பொதுக்குடும்ப வாழ்க்கை முறையினால், இன்னும் அதிகமாக உணர்ந்து வருகின்றோம். மேல்நாட்டார் வாழ்க்கை முறை நமது பொதுக்குடும்பத்துக்குச் சிறிதும் ஏற்றதல்ல. நமது பொதுக்குடும்ப வாழ்க்கை, உயிரின்றி மரக்கட்டைபோலாகி விட்டது; எனவே அதன் இனிப்பும் வனப்பும் அற்றுப்போய், அதன் தீமைகளே நன்கு வெளித்தோன்றியிருக்கின்றன. எனவே, தீமை தீமையோடு சேர்ந்து கொண்டது.

நம்முடைய தியாகம் எத்தன்மைத்தாகவிருக்கவேண்டும்? நமது நாட்டின் தேவைகளுக்கு ஏற்ற தியாகத்தை நாம் கைக்கொள்ள வேண்டும். சீர்திருத்தங்கள் மிகுதியும் அகத்திலிருந்து வளரவேண்டும்; புறத்திலிருந்து அவ்வளவாகத் தோன்ற வேண்டியதில்லை. அழுகிப்போன [illegible] பேரில் தாக்கி [illegible] அமைப்பு, சமாதிக் கட்டிடத்துக்கு ஒப்பாகும்.

ஆன்மசுத்தியிக் போக்கு முற்றுப்பெற வேண்டும்; தியாக உணர்ச்சியை விரிவாக்க வேண்டும், நாட்டார்செய்த தியாகம் மகத்தானதுதான்; ஆனால் அது, நாடு நம்மிடமிருந்து வேண்டும் அளவுக்குச் சிறிதும் போதுமானதல்ல. வேலைசெய்யாத, நம்வீட்டில் வசிக்கும், உடல் வலிமை பொருந்திய ஆணையும் பெண்ணையும் நாம் போஷிக்கலாகாது. பணச் செலவுபிடிக்கும் கலியாணங்கள், ஜாதிவிருந்து முதலிய மூடபக்திகொண்ட வழக்கங்களுக்காக, நாம் ஒரு பைசா அளவுகூடச் செலவு செய்யலாகாது. ஒரு கலியாணமோ, சாவோ நேரின், அதனால் குடும்பத்தலைவருக்கு, அனுவசியமான பளு உண்டாகின்றது. இத்தகைய இனங்களில் செலவுசெய்யும்பொருட்டு, நம்மை ஒடுக்கி, ஒடித்துக்கொள்ளுதல் தியாகமாகாது என்று நாம் உறுதியாக மனதிற்கொள்ளவேண்டும். இந்தத்தீமைகளை தைரியத்துடனும் உறுதியுடனும் களைந்தெறிய, நாம் முயற்சிசெய்ய வேண்டும்.

தவிர, பணம் விழுங்கும் படிப்பு முறை நம்முள் இருந்துவருகின்றது. நம்மில் இலட்சக்கணக்கானவர்களுக்கு குடும்பம் நடத்த இயலாமலிருக்கையில், இலட்சக்கணக்கானவர்கள் பசியால்வருந்தி இறக்கையில், நமது சுற்றத்தார்களுக்கு பணம் விழுங்கும் படிப்புக்கொடுக்கப் பார்ப்பது தகாது. மனம் அனுபவ மூலமாய் விசாலப்படும்; பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விரிவடையும் என்று சொல்லுவதற்கில்லை. உயர்தரப்படிப்பு நம்மில் பலருக்கு இல்லாமற்போயினும், உண்மையான கல்வியைப்பெற, நேரான சாதனங்கள் நமக்குக் கிடைக்கப்பெறும். ஒவ்வொரு பையனும் தனது படிப்பின் பொருட்டுத் தானே செலவுசெய்யக்கூடிய வழி இல்லையா, இருக்க முடியாதா? வழியில்லாமலிருக்கலாம். வழி உண்டோ, இல்லையோ; அது பொருத்தமில்லாத விஷயம். பணச்செலவு பிடிக்கும் படிப்புமுறை நமக்கு ஏற்காது என நாம் கண்டபிறகும், உயர்தரக்கல்வி நமக்கு வேண்டும் என்ற தூண்டுதல் நம்மிடம் இருக்கப்பெறின், நமது சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வழிகளைக்கொண்டு, நாம் கல்விகற்க முடியும் என்பது உறுதியானதாகும். இலட்சக்கணக்கானவர்களுக்கு எந்த முறை சாத்தியமில்லையோ, அதை ஏற்கலாகாது என்ற உறுதிதாங்கிய உண்மை விதியைத்தான் அங்கீகாரம் செய்வது, இத்தகைய சந்தர்ப்பங்களில் நன்மை பயப்பதாகும். இத்தகைய உறுதி நமக்கு விரைவிலே வராது. இலட்சக்கணக்கானவர்களுக்குக் கிடைக்கக்கூடாத வசதியை நாம் கொள்ளலாகாது என்ற மனோபாவத்தைப்பெறுவது முதற்படியாகும். அந்த மனோபாவத்துக்கு இணங்க, நமது வாழ்க்கையையும் செயல்களையும் கூடுமான விரைவில் திருத்திக்கொள்ளுவது அடுத்தபடியாகும்.

உறுதிகொண்ட, தன்னலமறுத்த தியாகத்தை மேற்கொண்ட ஊழியர்களிற் பல்லாயிரக்கணக்கானவர்கள் இருந்தலொழிய, பொதுஜன முற்போக்கு சாத்தியமாகாது என்று நான் நம்புகிறேன். அந்தமுற்போக்கு இல்லையாயின், சுயராஜ்யம் என்ற பொருளும் இல்லை. ஏழைகளுக்காக உழைக்க எத்தனைபேர்கள் முன்னுக்கு வருகின்றார்களோ, அந்தத்தொகைக்கு ஏற்றாற்போல, சுயராஜ்யவழியில் நமக்கு முற்போக்குஏற்படும்.

உண்மைக் குரு.

குருவின் இலட்சணங்கள் யாவை என நான் வகுத்துக்கூறிய பின்னர், கிருபர் ஒருவர் பின்வரும் இனிப்புள்ள செய்தியை எனக்கு அனுப்பியுள்ளார்:—

தாங்கள் குருவைப்பற்றி எழுதுகையில், ராம்தாஸ் சுவாமி அவர்களின் அழகுவாய்ந்த கவிதை, எனக்கு ஞாபகத்துக்கு வருகின்றது. "தீயதினின்றும் நன்மையைப் பிரிக்கும், பொய்யினின்றும் மெய்யைப் பிரிக்கும் சக்தியான விவேகத்தை விட உயர்ந்த குரு, உனக்குக் கிடைக்கமுடியாது. மனதை (சித்தத்தை) விட மேலான சீடன் இல்லை. ஜீவனைவிட அருமைத் தோழனுமில்லை." உண்மையிலேயே, மனிதன் குருவுக்காக தனக்கு வெளியே நாடவேண்டியதில்லை என்பது சுவாமிகளின் குறிப்பாகும். "ஆண்டவனிடம் கொண்ட நம்பிக்கையினின்றும் எழும் விவேகமே உனக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். மனதை இந்த சக்தியின் ஆளுகைக்குக் கொண்டுவந்து, தாரானமாக "தான்" என்பதைக் கொல்லுவாயாக." இதுதான் மகாராஷ்டிர சாதுவின் உபதேசத்தின் சாரமாகும்.

கொடிது, கோரமானது.

"பீபின்" என்ற பத்திரிகையில் எழுதப்பெற்றது.

ஒரு பக்கத்தில் சீமான் ஜே. எம். ஸென் குப்தா அவர்கள் அறிக்கைகளை விடுக்கிறார். அதற்கு மாறாக, மற்றைய பக்கத்தில், சீமான்கள் கோஸ்வாமி, நிர்மலசந்திர சந்தர், நளினிரஞ்சன ஸர்க்கார், சரத்சந்திரவசு—இவர்கள் அறிக்கைகளை விடுக்கின்றார்கள். இவைகள் வருந்துதற்குரிய காட்சிகளாகும். "வெட்டு" வேலை இனியும் தேவையில்லை. வெட்டு வேலை மிகவும் எளிது. அரசியல் வைத்தியர்களுக்கு இந்த வேலை [illegible] எனத் தோற்றுகிறது. ஒற்றுமைக் குறைவு என்ற பேயைத் திறமையுடனும் அறிவுடனும் ஓட்டும் தலைவர்கள் தாம் நமக்குத் தேவையாகும். பழியைப் பங்குபோட்டுத் தீர்ப்புச் சொல்ல நாம் முன் வரவில்லை. "போதும், நிறுத்துங்கள்" என்றுமட்டும் நாம் கூறுவோம்.

(தேசபந்து தாஸ் அவர்களால் ஏற்பட்ட) ஹிந்து மூஸ்லீம் ஒப்பந்தத்தை உயிருள்ள சங்கதியாகக் கருதவேண்டாம், என நாம் வேண்டிக்கொள்ளுவோம். அதைப்பற்றி எவரிடத்தும் உற்சாகம் காணப்படவில்லை. ஒப்பந்தத்தை காங்கிரஸ் உறுதி செய்யவில்லை. இரண்டு சமூகத்தார்களும் ஏற்கவில்லை. அதனால் ஹிந்து மூஸ்லீம் ஒற்றுமையும் உண்டாகவில்லை. ஒற்றுமையைக் கொணரத்தக்க வேறு சாதனத்தை நாம் காண முயலவேண்டும். காங்கிரசுக்குப் பிளவை வளர்க்கலாகாது. ஒப்பந்தத்தைப் பற்றி மீண்டும் யோசனைகள் எழப்பெறின் அதைப் பின்பு கவனித்துக்கொள்ளலாம். இப்பொழுதிருக்கும் ஒப்பந்தப் பத்திரத்தை அடிப்படையாக ஏற்று, அதைத் திருத்தவோ, மாற்றவோ, உறுதி செய்யவோ—சமயமும் தேவையும் வரின் பின்னர் யோசித்துக்கொள்ளலாம்.

சுயராஜ்யம் வந்த பின்னர், அது அமுலுக்கு வரவேண்டும் என்பது முடிவாயின் ஒப்பந்தத்தைப் பற்றி இப்பொழுது ஏன் மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டும்? மருந்திக்குமுன் ஸாத்தியம் என்பனவற்றைப் பற்றி சிந்தனை செய்து, ஏன் காங்கிரசுக்குள் பிளவுகளை உண்டாக்கிக்கொள்ளவேண்டும்? ஒப்பந்தம் அமுலில் இப்பொழுது இல்லை என்பது உண்மையாயின், அதை அண்மையில் காங்கிரசிலோ, இப்பொழுதேயோ, ஏற்க வேண்டும் என்று ஏன் தொல்லைப்படவேண்டும்?

வங்காள காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாக சபையை சீமான் ஸேன்குப்தா அவர்கள் நியமன மூலமாய்த் திருத்தியமைத்தது, காங்கிரஸ் விதிக்கு இணங்கியதா, பிணங்கியதா என்பதை நாம் கவனிக்கவில்லை. திருத்தியமைத்ததைப் பற்றி மீண்டும் குப்தா அவர்கள் யோசிக்கவேண்டுமென வேண்டிக் கொள்ளுகிறோம். குப்தா அவர்களின் செய்கையினால், அனேகருக்கு மனத்தாங்கல் ஏற்பட்டுவிட்டது. எனவே, நிர்வாகசபையின் வேலை சரிவர நடக்காது. சிறிது விட்டுக் கொடுத்தால், மனத்தாங்கல் இல்லாமல் சரிவர வேலை செய்யக்கூடிய நிர்வாக சபையை அமைத்துக்கொள்ளலாம்.

பரஸ்பர தூஷணையினால், நிலைமை மிகவும் கேவலமாகி வருகின்றது என்பதை வங்காளத் தலைவர்கள் உணர்வார்கள் என நாம் நம்புகின்றோம். கழுத்தை வெட்டும் கைக்கோடரியை, அவர்கள் பரஸ்பரம் புதைத்து வைக்கவேண்டும். காங்கிரசின் தலைவியும் சுயராஜ்யக்கட்சியின் தலைவரும் இது சங்கதியில் பிரவேசித்து, ஒற்றுமையையும் நல்லுறவையும் நாட்டுவார்கள் என நாம் பெரிதும் எதிர்பார்க்கிறோம்.

தனவணிகர் உலகம்.

சாமிக்குப் படைப்பு.

சமூகத் தோண்டன் சாற்றுவது.

தனவணிகர் உலகத்தில் நடக்கும் அநாகரிகங்களுள் சாமிக்குப் படைப்பும் ஒன்று. சாமிக்குப் படைப்பு என்பது செத்தவர்கள் நினைவுக் குறியாகச் செய்யப்படும் ஒரு வகையான வழிபாடாகும். இது திதிபோன்ற ஒன்றே. இங்கு சாமி என்ற சொல் செத்துப்போன மனிதர்களையே குறிக்கின்றது. இருக்கும்பொழுது மனிதர்களாகக்கூட எண்ணத்தகாத தீயொழுக்கம் பூண்டொழுகியவரெல்லாம் இச்சாமிக் கூட்டத்துள் நுழைந்துவிடுகிறார் செத்த பிறகு! செத்துவிட்டால் அவருக்குச் சாமிப்படைப்பு. இது நமது நாட்டில் பல நாட்களாக நடந்துவரும் ஒன்று என அறிய மெய்ச் சான்று இருக்கின்றது. சில படைப்புக்களில் நூற்றுக்கணக்கான புள்ளிகள் இருக்கின்றனர். இவரனைவருக்கும் முன்னே இருந்த வழிமுதல் மனிதருக்குச் சாமிக்குப் படைப்பு நடக்கின்றது. அவர் இறந்தது முதலே அப்படைப்பு ஆரம்பித்திருக்கவேண்டும். அப்பொழுது விட்டுப்போய் பிறகு ஆரம்பித்திருப்பாரென்று எண்ண இடமில்லை. நாட்பல சென்று அவர் சந்ததியார் பெருகிய பின்னர் அவர் பலரும் கூடி ஆரம்பிப்பதாயின் அது சிரம சாத்தியம். எனவே இப்பொழுதிருக்கின்ற ஒரு படைப்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான புள்ளிகட்கும் ஆதியாக விருந்த ஒருவருக்கு நடக்கும் படைப்பு அவர் இறந்தவுடனேயே தொடங்கப்பட்டிருக்கவேண்டும். இத்தனை புள்ளிகட்கும் தோற்றக்காரணமாக இருந்த அவர் பன்னாட்கள் முந்தியவர் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே, சாமிக்குப் படைப்பு என்ற முறை நமது சமூகத்தில் ஏற்பட்டும் பல நாட்கள் ஆகியிருத்தல் வேண்டும் என்பது கிடைக்கின்றது.

எத்தனையோ ஆண்டுகட்கு முன்னர் தொடங்கப்பட்ட சாமிக்குப் படைப்பை அவர் வழிவந்தோர் விடாது செய்து கொண்டு போகின்றார். புதிது புதிதாக வேறு சாமிக்குப் படைப்புகள் தோன்றுகின்றன. ஆனால் பழையதுக்கு அழிவில்லை. தொட்டதை எவ்வளவு ஆண்டு ஆனாலும் விடுவதில்லை. மேல்வேறு சேர்த்துக்கொண்டே செல்வது என்றால் அது எவ்வளவாகப் பெருகும் என்று சொல்லவும் வேண்டுமோ? ஒரு காரியத்திற்கு நாம் சந்தோஷப்படவேண்டியதிருக்கிறது, பிறந்து செத்தவர் எல்லோர்க்கும் சாமிக்குப் படைப்பு என்று வைத்தார்களில்லையன்றோ? அவ்வாறானால், தனவணிகர் நாடு சாமிக்குப் படைப்பு மயமாகவே இருந்துவிடும்; சாமிக்குப் படைப்புக் கணக்கைக்கொண்டு இறந்தாரை எண்ணி வள்ளுவனார் வாய்மொழியைக் கூட நாம் பொய்யாக்கிவிட முடியும். வையத்து இறந்தாரை எண்ணிக்கொள்ள முடியாதென்றார் வள்ளுவர் பெருமான். இறந்தவர் கணக்குச் சாமிக்குப் படைப்புக்குள் இருக்குமானால் ஏன் அது முடியாது? தவிர, சாமிக்குப் படைப்பு வேலைக்கே வாணாள் போதாது. நல்ல வேளையாக அவ்வாறு வைக்கவில்லை. வைத்திருந்தால் அதனை அப்படியே பின்பற்றி நடத்திச் செல்ல நம்மவர் பின்வாங்கப் போவதில்லை.

இந்தச் சாமிக்குப் படைப்பில் ஆத்தாள் படைப்பு என்று கூறுகின்ற பெண்பாற் படைப்பே அதிகம் என்று கூறலாம். அய்யாக்கள் படைப்புக்களும் இருக்கின்றன. தொடக்கத்தில் இப் படைப்பு ஆரம்பிக்கப் பட்டதற்கு ஒரு நல்ல நோக்கம் இருக்கலாமென்று ஊகிக்க இடமுண்டு. இறந்துபோன ஒருவர் செயலை நினைத்து அவர் ஞாபகமாக ஆண்டிற்கொருமுறையோ பலமுறையோ அவரை வழிபட்டிருக்கலாம். இறந்துபோன தம் முன்னோரைத் தெய்வமாக எண்ணிப் போற்றியிருக்கலாம். அவர் வழிபாட்டைச் சாமிக்குப் படைப்பு என்ற பெயரிட்டு அழைத்திருக்கலாம். அவ்வாறு சாமிக்குப் படைப்பு எல்லோர்க்கும் இன்றிச் சிலருக்கு மட்டும் இருக்கின்றமையின் அவர் எவ்வழியிலேனும் சிறப்புப் பொருந்தியவராக இருந்திருப்பர். அவர் இவ்வுலகில் வாழ்ந்திருந்த காலத்தில் கட்டியிருந்த ஆடைகளையும் அவர் அணிந்திருந்த அணிகளையும் அவர் ஞாபக தினத்தன்று எடுத்துப் போற்றியிருக்கலாம். அவர் பிரியமாக உண்ட உணவை அவரை நினைந்து அன்று உண்டிருக்கலாம். இவையே சாமிக்குப் படைப்புக்குரிய காரணங்களாக இருக்கலாமன்றி வேறு இருக்க நியாயமில்லை.

இதுகாலை அவர் செயல் முதலிய ஒன்றும் தெரியாவாறு மறக்கப்பட்டுப் போன பின்னை பொருளற்ற அச்சாமிக்குப் படைப்பு எதற்காக? நற்செயலுடையாரைப் போல் மற்றையோர் ஆகவேண்டுமென்பதற்காகவே அவர்களைப் பல்லாற்றானும் கொண்டாடுவது என்பதை உணரவேண்டும். அவர் செயலுக்குச் சரிதங்கள் பொறித்துவைக்கப் பெற்றிருக்குமானால், அச்செயலை நினைந்து அவரை வழிபடலாம். ஒன்றுமின்றி சாமிக்குப் படைப்பு எனச் சாமிக்குப் படைப்பதால் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை.

பிரயோஜனம் வேண்டாம்; தீங்கேனும் இல்லையா என்று பார்ப்போமானால் சாமிக்குப் படைப்பு முறையில் பல தீங்குகள் இருக்கின்றன. சாமிக்குப் படைப்புகளில் சாதாரணமானவை சில இருக்கின்றன. அவையும் கொள்ளத்தக்கவன்று. ஆனால் அவற்றில் கொலை முதலிய தீங்குகள் இல்லாவிடினும் அநாகரிகம் தாண்டவம் ஆடாமல் இல்லை. பெரும்பாலான படைப்புக்களில் கொலை நிகழும். சிறு படைப்புக்களில் கோழிவதையும் பெரும் படைப்புக்களில் ஆட்டுக் கொலையும் மலிவு. பழைய ஓலைப் பெட்டிகளில் வேட்டிகளையும் சேலைகளையும் வைத்து அமுக்கி நடுவீட்டில் உத்தரத்தில் கட்டித்தொங்க விடப்படுகின்றன. அதற்குப் பேழை என்று பெயர் சொல்லப்படுகிறது. பேழை என்றால் பெட்டி யென்பதுதான் பொருள். அப்பேழையைச் சாமிக்குப் படைப்பு அன்று எடுத்து ஊருணிக்குத் தோளில் தூக்கிக் கொண்டுபோய் துவைத்துக் காயவைத்து நடுவீட்டில் பரப்பி அதற்கு முன்னே உணவுப் பொருள்களை யெல்லாம் கொட்டிப் படைக்கின்றனர். எல்லோரும் அவ் இரவில் எண்ணை தேய்த்துக் குளிக்கின்றனர். குளித்து இப்படைப்பை நடத்திவிட்டு அவைகளை உண்டு பெட்டியைக்கட்டித் தூக்கிவிடுகின்றனர். மறுநாள் காலையில் கஞ்சியை வைத்து நீர்ச்சோறு என்று படைத்துவிட்டுக் கஞ்சியைக் குடித்துவிட்டுப் பெட்டியைத் தூக்கவிடுவதும் உண்டு. பிறகு சாமிக்குப் படைக்கும் பொழுதுதான் அப்பெட்டிக் கயிறு அவிழ்க்கப்படும். இப்பெட்டிகளைத் துவைப்பது கூட எந்த ஊருணியில் முன்னே துவைக்கப்பட்டதோ அதே ஊருணியில்தான் துவைக்கவேண்டும். வீட்டுக் கேணியிலோ வேறொரு ஊருணியிலோ துவைத்தால் மோசம் வந்துவிடும். என்ன மூடமதி!

சில பெயர்பெற்ற படைப்புக்களுண்டு. அப்படைப்புக் காலங்களில் சிலர் சாமியாக வந்து நடிப்பர். ஆவேசம் வந்துவிடும். இச்சாமிக்குப் படைப்பில் எவ்வளவு அருவருக்கத்தக்க முறைகள்! நடுச்சாமத்தில் கோவணத்தை மட்டும் கட்டிக்கொண்டு நிறைய எண்ணெயைத் தேய்த்துக்கொண்டு அரிவாள் தடி முதலிய ஆயுதங்களைத் தோளில் ஏந்திக்கொண்டு கூட்டமாகப் பலர் வீதி வழியே சென்று ஊருணியில் குளித்து வந்து கிடாய்வெட்டிப் படைத்தல் ஒரு முறையாகக் கொள்ளப்படுமானால் இதைவிடக் கோரச்செயல் என்னவேண்டும்? இதுபோன்ற அரக்கர் செயலெல்லாம் தொலையவேண்டாமோ? சாமிக்குப் படைப்பு என்ற அநாகரிகப் படைப்பை அன்பர்கள் தொலைக்க முந்துவாராக! அதில் கலந்து கொள்ளாவிட்டால் அதற்குப் பணந்தராவிட்டால் தள்ளிவைத்து விடுவதாகப் பங்காளிகள் பயங்காட்டுவர். அதற்கெல்லாம் பயந்தால் சீர்திருத்தம் நடவாது. பயந்தவரிடம்தான் அவரும் பூச்சாண்டி காட்டுவர். அச்சந் தொலைத்துத் தைரியமாக முன்வருவோரை எவரும் எதுவும் செய்யமுடியாதென்பது நிச்சயம். தள்ளிவைத்தற் பூச்சாண்டிக்குப் பயந்தால் எந்தக் காரியம் ஆகும்? தனவணிக வாலிப சகோதரர்கள் ஒவ்வொன்றையும் முன்வந்து செயலிற் காட்ட வேண்டும். சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தால் எதுவும் சீர்திருந்தப் போவதில்லை.

காதற் கடிதம்.

காதலி காதலனுக்கு எழுதியது.

கடிதம் ரு.

துந்துபி—ஆடி—கூ

கண்ணுள் நிறைந்த காதலரே!

என்னுடைச் சென்ற திங்கள் உகூ, இத்திங்கள் உ-ம் நாட் கடிதங்கள் கிடைத்திருக்கலாம். உங்கள் சென்ற மதி உகூ-ம் நாட் கடிதம் கண்டேன். அக்கடிதத்தில் என்னைப்பற்றிப் புகழ்ந்து புகல்கின்றீர்கள். அப்புகழ்ச்சியை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. அதற்குத் தகுதியுடையவள் நானன்று. நான் என்ன கடமையைச் செய்துவிட்டேன்? முதற்கண் செய்ய வேண்டிய கடமையை மறந்துவிட்டேன். காதலியைப் பிரிந்து செல்ல விடாது காதலனை எப்பாடுபட்டேனும் பின் தொடர்ந்து செல்தலல்லவா காதலியின் முதற்கடமை? அக்கடமையை யான் செய்தேனோ? அதில் பெரிதும் அறிவற்ற பேதையானேன்.

"கணவனைப் பிரிந்து தனிவாழும் மங்கையர் வாழ்க்கை நடத்தவேண்டிய முறைக்கு நீ ஒரு நல்ல வழிகாட்டியாக இருப்பது மெச்சத்தக்கது" என்று இயம்புகின்றீர்கள். நான் என்ன வழிகாட்டியாக இருக்கிறேன்? கணவனைப் பிரிதல் என்ற சனியனையே தொலைக்க நான் வழிகாட்டியாக இருப்பேனானால் அது சிறப்புடைத்தாகும். இதில் என்ன பயன்? இவ்வருவருக்கத் தக்க முறையில் வழிகாட்டி வேறு என்ன வேண்டியதிருக்கின்றது? இக்கெட்ட வழக்கத்தை அறவே சல்லிவேரோடு கல்லி யெறிய வேண்டும். அதன்பொருட்டு நான் என்ன செய்கின்றேன்? ஒன்றுமில்லை. என்னுடை ஆருயிர் நாதனைக் கடலுக்கு அப்பால் தள்ளிவிட்டு உயிர் சுமந்து இங்கு காலங் கழிக்கின்றேன் பாவியேன். என்னைவிடக் கொடும்பாதகர் யாண்டிருக்கின்றார்? நான் கடமையைச் செய்கின்றேனாம்! வழிகாட்டுகின்றேனாம்! பேஷ்! நன்றாக இருக்கின்றது என் செயல்! இதற்குப் புகழ் வேறு வேண்டுவதுதான். இது இருக்கட்டும். மேலே செல்கிறேன்.

கணவனைப் பிரிந்து தனிவாழும் மங்கையர் தாய்நாட்டில் நடந்துகொள்ளும் முறை கண்டிக்கத்தக்கது என்று நீங்கள் கூறுகின்றீர்கள். அது முற்றும் உண்மையே. அக்கொடுமையைப்பற்றிச் சென்ற கடிதத்தில் கூடச் சிறியேன் எழுதியிருக்கின்றேன். எனினும் குற்றத்தை முற்றும் அவ் ஏழைப் பெண்மக்கள்பால் ஏற்ற நான் விரும்பவில்லை. உண்மையும் அதுவன்று. "நமது சமூகத்திற்கு இத்தனி யாத்திரை செய்யும் பெண்கள் பேரிழிவையன்றோ தேடுகின்றார்கள்" என நீங்கள் நவலுகின்றீர்கள். ஆம்! தனி யாத்திரை செய்வோர் பேரிழிவு தேடுவது உண்மைதான். இப்பொழுது நான் அப்பெண்கள் சார்பாக வாதிக்கின்றேன். இல்லக்கிழத்தியை ஈண்டிருத்தி ஆண்டுச் சென்று பொருளீட்டும் ஆண்மக்கள் சமூகத்திற்கு ஆற்றும் பேரும் பேரிழிவைவிட இது பெரியதா? மூலகாரணம் அதுவன்றோ? இவர்களைத் தனியே போட்டு அவர்கள் சென்றுவிடுவதன்றோ இவர்கள் தனியாத்திரைக்குப் பெருந்துணை புரிகின்றது! நான் இவ்வாறு கூறுதல் தவறென நீங்கள் கொள்ளமாட்டீர்கள். உங்கட்கு உடன்பட்ட கொள்கைதான் நான் ஈண்டுக் கூறுவது என்பதை அறியேனோ? அன்றி ஒன்றுமறியாத—வாதிக்கத் திறமையில்லாத—ஆராய்ச்சியறிவில்லாத சோம்பேறிகளென்றோ சினங்கொள்வீர்? அது நிற்க,

என் அன்பிற் இனியீரே!

ஈண்டு ஒரு பொருள் ஞாபகத்திற்கு வருகின்றது. நமது பெண் சகோதரிகட்குக் கல்வியறிவு சிறிதுமில்லையென்பதில் இரண்டு அபிப்பிராயங் கிடையவே கிடையாது. அது எல்லோரும் ஒப்ப முடிந்தது. அதனால் அவர்கள் அறியாமையால் அக்கிரமங்கள் செய்தல் இயல்பு. அவர்களை நல்வழியிற் திருப்ப வேண்டுவது ஆண்மக்கள் செயலல்லவா? அதில் இயன்றவரைக் கருமமாற்ற வேண்டுமென்றோ? அதை விடுத்துப் பெண்மக்கள் புரியும் எல்லாவற்றிற்கும் உடன்பட்டு விட்டுப் பிறகு அவர்களைக் குறைகூறும் ஆண்மக்கள் என்போர் மல்கிவிட்டார் நமது சமூகத்தில். மூடத்தனமான காரியங்களை யெல்லாம் பெண்மக்களோடு சேர்ந்து களிப்போடு செய்வதில் ஆண்மக்கள் சிறிதும் பின்வாங்குகின்றாரில்லை. பிறகு குற்றத்தைப் பெண்மக்கள் மீது தூக்கிப் போடுகிறார். "எவ்வளவு சொன்னாலும் பெண்கள் கேட்கின்றாரில்லை; அவர்கட்காகவே செய்யவேண்டியதிருக்கின்றது" என்று தங்களைச் சாற்றிக்கொள்வோர் கூறக் கேட்கின்றோம். இது எவ்வளவு பேதைமை! பெண்மக்கள் கூறினால் ஆண்மக்கட்குப் புத்தி எங்கு போய்விட்டது? ஆண்மக்கள் நிலை இதுவானால் பெண்மக்களைப் பற்றிப் பேசவாவேண்டும்? ஒன்றைச் செய்தல் ஆகாது என்ற எண்ணம் இருக்குமானால் தங்கருத்துக்கு மாறாக நியாயமற்ற அதைச் செய்யவேண்டுமென்று பெண்கள் கட்டாயப்படுத்துவதைத் தடுத்துக் கூறிவிட முடியவில்லையேல் அவ் ஆண்மக்கள் பெண்மக்களை எவ்வாறு சீர்திருத்தப் போகிறார் என்பதுதான் விளங்கவில்லை. ஆனால் ஆண்மக்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் மட்டும் அவர்களை விட்டுப் போகவில்லை. உயர்வு இருக்குமானால் உயர்ந்தவர் என்றாவது கூறிக்கொள்ளட்டும். "எப்படியிருந்தாலும் ஆண்மக்களல்லவா?" என்று கூறும்பொழுது எனக்கு அவர்கள் அறியாமையைக் கண்டு மிகவும் இரக்கம் உண்டாகின்றது! எல்லாம் இப்படியே இருக்கின்றது இது காலை இந்தியநாட்டில்.

தகுதிக்கேற்ற பெருமை என்பதில்லை. பொருளின்றி ஏதேதோ கொண்டு பெருமை பேசப்படுகிறது. ஆண்மக்கள் பெண்மக்களை விடத் தாங்கள் உயர்ந்தவர் என்கிறார். பஞ்சமர் என்போரைவிட வண்ணார் என்போர் உயர்ந்தவரென்று இயம்புகிறார். அவரைவிட வேளாளர் என்பவர் உயர்ந்தவரென விளம்பிக்கொள்கிறார். வேளாளரை விட வணிகர் என்பவர் உயர்வென வழுத்திக்கொள்கிறார். அவருக்கு அரசில் வந்தோர் உயர்ந்தோரென்று அறைந்துகொள்கிறார். சைவரென்று ஒரு சாரார் சாற்றிக்கொண்டு அவர் இவர் எல்லோர்க்கும் மேலானவர் என்று சொல்லிக்கொள்கிறார். உலகத்திலுள்ள எல்லோரும் தாழ்ந்தவரென்றும் தாங்களே எல்லோரையும் விட மிகமிக உயர்ந்தவர்களென்றும் பார்ப்பார் என்போர் பகர்ந்துகொள்கிறார். இப்படியே உயர்வு எல்லையின்றிப் போய்க்கொண்டிருக்கிறது. செயலைப்பார்த்தால் உயர்ந்தவர் என்று உரைப்போர் செயல் உயர்வுடைத்தாகக் காணப்படவில்லை. எல்லாருள்ளும் எல்லாச் செயல்களும் இருக்கின்றன. இம்மூடக் கொள்கைகள் தொலைந்து செயல் கொண்டு சிறப்புப் பேசப்படும் நாள் வந்த அன்றுதான் நமக்கு நல்லகாலம். அக்காலம் வர நாம் அயராது வேலை செய்தல் வேண்டுமன்றோ? நாம் இருவரும் சேர்ந்து அவ்வேலை செய்யவேண்டும். முதலில் காலம் நம்மை ஒன்றாகக் கூட்டவேண்டும். அக்காலம் முதலில் வரல்வேண்டும். பிறகு நமது உழைப்பால் எல்லா நலனும் எய்தல் வேண்டும். பிற பின்னர்.

உங்கள் உண்மைக்காதலி.

....

சிறுவர் பகுதி.

கோழிகூவி, ஒரு நாழிகையிருக்கும். பொழுது புலரும் சமயம். காக்கைகள் கத்தத்துவக்கின. சந்திரன் தூசி படிந்த வெள்ளித்தட்டைப்போல, ஆகாயத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. நீர்க்காற்று இலேசாக வீசிக்கொண்டிருந்தது. ஆதிபுராணர் நெடுநேரத்துக்கு முன்னமேயே, படுக்கையை விட்டு எழுந்திருந்து விட்டார். ஏதோ தியானம் செய்துகொண்டிருந்தார். தியானமும் முடிந்தது. குழந்தைகளை எழுப்பினர். முகற்தடவை கொடுத்த குரல் பயன்படவில்லை. மறுமுறை எழுப்பினர். முருகனும் உமையும் கண்விழித்துக்கொண்டு, தாத்தாவை கூப்பிட்டார்கள். "இதோ இருக்கிறேன். நீரோடைக்குப்போவோம், வாருங்கள்" என்றார் ஆதிபுராணர். குழந்தைகள் சகிதமாக, தாத்தா நீரோடைக்கு வந்துசேர்ந்தார்.

ஆதிபுராணர் கூறுகின்றார்:— சரி, அதிருக்கட்டும். இந்த ஓடையைப் பாருங்கள். இது எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கிறதே! இதற்குச் சலிப்புத் தோன்றுகிறதா?

உமை:— ஆமாம், தாத்தா! நீருக்கு உயிருண்டோ? உயிர் இருந்தால் அதற்கும் சலிப்பு இருக்கும்; அதுவும் சோர்ந்து போகும்.

ஆதிபுராணர்:— உயிருள்ளவைகளுக்குச் சலிப்பு உண்டு, சோர்வு உண்டு. ஆனால் இவ்விரண்டு குறைகளுக்கும் கட்டுப்படாத உயிர்களே உத்தம உயிர்கள்.

உமை:— தாத்தா, பாரதியார் கதையைச் சொல்லுங்கள். அவர் உத்தம உயிர்தானே.

ஆதிபுராணர் கூறுகின்றார்:— பாரதியாரைப்பற்றி பிறகு சொல்லுகிறேன். இன்றைக்கு வேறொரு உத்தம உயிரின் கதையைச்சுருக்கமாகச் சொல்லுகிறேன். தமிழ் நாட்டிலே வில்லிபுத்தூர் என்று ஊர் இருக்கிறது. அந்த ஊரிலே, பெரியாழ்வார் என்ற பக்தர் ஒருவர் இருந்தார். பெரியாழ்வாருக்கு கடவுளினிடம் அளவிடக்கூடாத பக்தி. அவர் நினைப்பு, செய்கை எல்லாம் கடவுள் சம்பந்தமானது. அவர் தினந்தோறும் சுவாமிக்குப் பூமாலை போட்டுப் பூஜைசெய்வார்.

பெரியாழ்வாருக்கு ஒரு பெண். அவளுக்குப்பெயர் ஆண்டாள். நான் கதை சொல்லுகிற காலத்தில், அவளுக்கு, உமை! உன்னைப்போல வயதிருக்கும். எட்டு, ஒன்பது இருக்கும். சுவாமிக்குப் பெரியாழ்வார் கட்டிய மாலையை எடுத்து, தான் அணிந்துகொண்டு, ஆண்டாள் அழகு பார்த்துக் கொள்ளுவாள்.

உமை:— ஆண்டாள் அவ்வாறு செய்யலாமா?

ஆதிபுராணர்:— அவ்வாறு செய்வது தவறு என்று பெரியாழ்வார் ஆண்டாளிடம் சொன்னார்.

உமை:— ஆண்டாள் என்னசொன்னாள்?

ஆதிபுராணர்:— "அப்பா! தவறில்லை; சுவாமி கோபிக்கமாட்டார். என்பேரிலே சுவாமிக்குக் கோபம் வராது. நான் சுவாமியைத்தான் கலியாணம் செய்து கொள்ளப்போகிறேன். பெண்சாதியைக் கோபிக்கிற புருஷனும் இருப்பானா?" என்றாள் ஆண்டாள். பெரியாழ்வார் திகைத்துப் போனார். பெரியாழ்வாரின்பேச்சு எழவில்லை. ஆண்டாளுக்கு எப்பொழுதும் சுவாமியைப்பற்றித்தான் நினைவு. அவள் மனிதர் எவரையும் கலியாணம் செய்துகொள்ளவில்லை. தமிழிலே அழகான கவிபாடியிருக்கிறாள்.

உமை பெரு மூச்செறிந்தாள்

முன்னும் பின்னும்.

இளைஞன் ஒருவன் ஒரு கிழவரிடம் சென்று பின்வருமாறு சொன்னான்:— "இமயமலையின் உச்சி எவ்வளவு உயரத்திலிருக்கிறது? அந்த உச்சிக்குப் போய் ஒருவன் திரும்பிவந்துவிட்டான்." கிழவர்சிரித்துவிட்டு, "என்ன பொய்? இமயமலையின் உச்சியில் கைலாயம் இருக்கிறது. கைலாயத்துக்குப் போனவர்கள் திரும்பி வந்தார்கள் என்று எப்பொழுதேனும் கேட்டதுண்டா" என்று பேச்சை முடித்தார்.

* * *

"நல்ல சாப்பாடு சாப்பிடுவது பிரமானந்தம்" என்றான் ஒருவன். "அதைவிட ஆனந்தமுண்டா" என்று மற்றவன் கேட்டான். "அயர்ந்த தூக்கம்" என்றான் முதலாள். "அதைக்காட்டிலும் உயர்ந்ததுண்டா" என்றான் பின்னையவன். "நிறைந்த சீதனத்தோடு வரும் பெண்" என்றான் முதலாள். "அதைக்காட்டிலும்" என்றான் மற்றவன். "நீதான் சொல்லு, பார்ப்போம்" என்றான் முதலாள். "உன்னையொத்த ஆட்களுடன் பழகாமலிருப்பதே பிரம்மானந்தம்" என்று மற்றவன் முடித்தான்.

* * *

மேடை மீது நின்று, ஒருவர் நகர பரிபாலன சபைகளால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி உருக்கமாகப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். தமது பிரசங்கத்தை முடிக்கையில், "நான் சொன்னதை நன்றாகக் கேட்டிருப்பீர்கள். நகர பரிபாலன சபைகளின் நன்மை யாவை என்று உங்களுக்குத் தெரியும்" என்று உட்கார்ந்தார். கூட்டத்திலிருந்த பையன் ஒருவன் எழுந்து, "இரண்டு சங்கதிகளைவிட்டு விட்டீர்கள். கொசுக்கடியையும் சாக்கடை நாற்றத்தையும் தாங்கள் மறந்துபோனீர்கள்" என்றான்.

* * *

"இளமையில் கல்" என்று உபாத்தியாயர் உரக்க வாசித்தார். "முதுமையில் மண்" என்று ஒரு பையன் மற்றவனிடம் பேசிக்கொண்டான்.

* * *

அழகு என்பது என்ன என்று ஒரு உபாத்தியாயர் பையன்களைக் கேட்டுக்கொண்டுவந்தார். அவரவர்களுக்குத் தோன்றியவாறு பையன்கள் பதில் சொல்லிக்கொண்டு வந்தார்கள். கடைசிப் பையனைக் கேட்டார் வாத்தி. "பையன்களை வாத்திமார்கள் அடிக்காமலிருப்பதே அழகு" என்றான் கடைசிப் பையன்.

* * *

"மெய்வருந்தக்கூலிதரும்" என்ற குறளைக்கேட்ட ஒருவன் தன்னை அடித்துக்கொண்டு, விடாமல் அழுதுகொண்டிருந்தான். "என், அப்பா அழுகிறாய்" என்று அயலான் ஒருவன் கேட்டான். "மெய்வருந்தக் கூலி கிடைக்கும்"; ஆகையால், என்னை அடித்துக்கொண்டு, மெய்வருந்திக்கொண்டிருக்கிறேன் என்றான் மற்றவன்.

* * *

"ஆசைக்கோர் அளவில்லை, அகிலமெல்லாம் கட்டியாளினும்" என்ற பாட்டை இனிமையுடன் பாடி, ஒருவன் பிச்சை கேட்டான். ஒருவர் ஒரு பைசா கொடுக்கப்போனார். "ஒரு தம்பிடிதானா" என்றான் பிச்சைக்காரன். "ஆசைக்கோர் அளவில்லை" என்று பைசாக் கொடுக்க நினைத்த மனிதன், அதையும் கொடுக்காமல், அந்த விடத்தைவிட்டு அகன்றார்.

* * *

மோட்சத்துக்கு வழியாது என்பதைக் குறிப்பிட்டு ஒருவர் நீண்ட பிரசங்கம் ஒன்று செய்தார். அதைக கேட்டுக்கொண்டிருந்த மனிதன், "எனக்கு குறுக்கு வழி தெரியும். கபாலம் திறந்தால் மோட்சம்; மண்டையை உடைத்தால், கபாலம் திறக்கும்" என்றான்.

* * *

பழைய மந்திரி சபை ராஜிநாமா செய்துவிட்டது. புதிய மந்திரி மார்கள் வேலைபார்க்க எத்தனித்து, ஆபீசுக்குள் நுழைந்தார்கள். அங்கிருந்த காவலாளிக்கு புதிய மந்திரிகளை அடையாளம் கண்டுபிடிக்க முடியாமல் "யார்" என்று கேட்டான். "நான் முதல் மந்திரி" என்றார் ஒருவர். "யுத்தத்துக்குப்பின்இவ்வாறு பலர்பையித்தியம் பிடித்து அலைகிறார்கள்" என்று காவலாளி முணுமுணுத்தான்.

* * *

"ஆண்டி பெற்றது ஐந்தும் குரங்குகள்" என்று ஒருவன் சொல்லிக்கொண்டு போனான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு ஆண்டி, "அய்யா! நீங்கள் பெற்ற பூனைகள், நாங்கள் பெற்ற குரங்குகளிடம பஞ்சாயத்துக்கு வந்ததனாலா, இவ்வளவு கோபம் தங்களுக்கு வருகிறது" என்று கேட்டான்.

* * *

ஒரு அரண்மனையில் நல்ல கடிகாரமிருந்தது. அதன்பேரில் ஒருவன் குறி வைத்திருந்தான். அதை எடுக்க, ஒரு ஏணியை வைத்து ஏறினான். ஏறின சமயத்தில், அரசன் வந்துவிட்டான். "ஏணி வழுக்கும்போலிருக்கிறது" என்றான் திருடன். "கடிகாரம் பழுதுபார்க்க எடுத்துச் செல்லப்படுகிறது" என்று நினைத்து, அரசன் ஏணியைப் பிடித்துக்கொண்டான். மறுநாட் காலையில் கடிகாரம் திருட்டுப் போய்விட்டது என்ற செய்தி அரசன் காதில் விழுந்தது. "வெளியே சொல்லாதேயுங்கள். திருட்டுக்கு நான் உடந்தையாயிருந்தேன்" என்று அரசன் நடந்ததைச் சொன்னான்.

* * *

உபாத்தியாயர் கழித்தல் கணக்கு சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தார். "ஐந்திலே ஐந்துபோனால் என்ன" என்றுகேட்டார். "பத்து" என்றான் ஒருவன். "எப்படி" என்று கேட்டார் உபாத்தியாயர். "வயிற்றிலே சாதம் போனால், வயிறும் சாதமும்; அதுபோல, ஐந்திலே ஐந்து போனால், பத்து" என்றான் பையன்.

* * *

"தங்கள் வார்த்தைகள் செல்லாது" என்றார் ஒருவர். "தாங்கள் தவறாகச் சொல்லுகிறீர்கள். என் வார்த்தைகளில் சத்தக்கம்மி கொஞ்சங்கூட இல்லையே" என்றார் மற்றவர்.

* * *

"எங்குவந்தீர்கள்" என ஒருவர் கேட்க, இங்குதான் என்றார் மற்றவர். "அது எனக்குத்தெரியும். எதற்காக வந்தீர்கள்" என்று மீண்டும் கேட்டார். "காரியமாக". "காரியத்தைச் சொல்லுங்களேன்"? "சொல்வதற்குள் அவசரப்படுகிறீர்களே?" "உங்களுக்கு அவசரமில்லையானால் அடுத்த வாரம் பார்த்துகொள்ளுவோம்" என்றார் முதலாமவர்.

* * *

முதலாளி உட்கார்ந்து கொண்டிருந்தார். கையைக் கட்டிக்கொண்டு வேலைக்காரன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். "ஏன் நிற்கிறாய்" என்றார் முதலாளி. "கலியாணம்" என்றான் வேலைக்காரன். "கால்கடுக்க, முதலாளியின் முன் நிற்பது தான் கலியாணமோ! அது எனக்குத்தெரியாது; அப்படியானால், நீண்ட நேரம் நின்று, நன்றாகக் கலியாணம் செய்து கொள்" என்றார் முதலாளி.

மகளிர் கோட்டம்.

சாப்பாடு முடிந்தது. கணவனும் மனைவியும் தாம்பூலம் போட்டுக் கொண்டிருந்தார்கள். இருவருக்கும் மிகுந்த சந்தோஷம். இருவருக்கும் இளவயது. எந்த விஷயத்தைப் பற்றியும் தங்கு தடையின்றி, கூச்சமில்லாமல் பேசும் பருவமாகையால், அவர்களிருவருக்குள்ளும் பேச்சுக்குக் குறைவே ஏற்படவில்லை. சொற்கள் என்ற ஆனந்த ஆற்றில், கரைசேர வேண்டுமே யென்ற ஆவல் சிறிதுமில்லாமல், இவர்களிருவரும் மிதந்து கொண்டு போனார்கள். இடையே மனைவி புன்னகை புரிந்தாள். புன்முறுவலின் காரணத்தை மனைவியிடமிருந்து வேண்டினான்.

மனைவி:— பார்த்தீர்களா? என்ன ஆச்சரியம்!

கணவன்:—உனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டு ஆச்சரியப்படுகிறாயே! அந்த ஆச்சரியம் எனக்கும் தெரியட்டுமே!

மனைவி:—வெற்றிலை இருக்கிறது.

கணவன்:—சரி.

மனைவி:—பாக்கு இருக்கிறது.

கணவன்:—அதுவும்சரி. கதை சொல்ல உன்னைத்தான் விட்டுவிட வேண்டும். சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடுவாய்.

மனைவி:—வெற்றிலை பாக்கு இரண்டும் இருக்கிறதா?

கணவன்:— நான் குறுக்கிட்டது தவறு. உன்னிஷ்டம்போல, உன்னுடைய ஆச்சரியத்தைச் சொல்லு.

மனைவி:—அப்படி வழிக்கு வாருங்கள். நீங்கள் தோற்றுப் போனீர்களா?

கணவன்:—அப்பா, வம்பே!

மனைவி:—சரி. சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். கேளுங்கள். பாக்கு, வெற்றிலையும் இருக்கின்றன. இவைகளோடு சுண்ணாம்பும் சேர்ந்து கொண்டு, வாய்க்குள் போனால் என்ன ஆகிறது? என்ன ஆச்சரியம்? வெற்றிலை பசுமையாக விருக்கிறது. பாக்கு கடிப்பதற்கு கஷ்டமாயிருக்கிறது. சுண்ணாம்பு வெளுப்பாயிருக்கிறது. இவைகளுக்கு சம்பந்தமில்லாத சிவப்பு நிறம் தோன்றுகிறது. இதனால் ஏற்படும் சந்தோஷத்தையோ, சொல்லி முடியாது.

கணவன்:—உண்மை, நீ புத்திசாலி தான்.

மனைவி:—என்ன, கேலி பண்ணுகிறீர்களே!

கணவன்:— நான் காந்தியைப்பற்றி எத்தனை தடவைகள் உன்னிடம் சொல்லியிருக்கிறேன். அப்பொழுது நீ கவனிக்கவில்லை. வெற்றிலை பாக்கு சமயத்தில், நீ கேட்டால், நான் சொல்லுவது உனக்கு விளங்கும்.

மனைவி:—காந்தி என்ன செய்ய வேண்டுமென்கிறார்?

கணவன்: — சுயராஜ்யம் வேண்டுமென்கிறார்.

மனைவி:— சுயராஜ்யம், வெற்றிலை பாக்கு சங்கதியா?

கணவன்:—வெற்றிலை பாக்கு சங்கதிபோலத்தான்.

மனைவி:—எப்படி?

கணவன்:—ஹிந்துக்கள் வெற்றிலையைப்போல; முஸ்லீம்கள் பாக்கைப்போல. இவர்களிருவர்களும் இருக்கிற கேவலமான நிலை சுண்ணாம்பு காரத்தைப்போல. அடிமை என்ற சுண்ணாம்புக்கார உணர்ச்சியைக் கொண்டு, வெற்றிலை பாக்காகிய ஹிந்துக்களும் முஸ்லீம்களும் பாரதமாதா வாயில் அகப்பட்டுக் கொண்டால், சிவப்பு வர்ணம் என்ற கதர் அற்புதமும் சந்தோஷம் என்ற சுயராஜ்யமும் வரும். புரிகிறதா?

மனைவி:—புரிகிறது.

இரண்டாவது பாகம்.

ஏழாவது அத்தியாயம்.

நெட்டாலின்துறைமுகம் டர்பன்; அதற்கு போர்ட் நெட்டால் என்னும் பெயர். எனக்கு நல்வரவுகூற அப்துல்லா சேத் அங்கிருந்தார். கப்பல் துறைமுகத்துக்கு வந்தது. நண்பர்களை சந்திக்க கப்பலில் ஏறுபவர்களை நான் பார்த்தேன். இந்தியர்களுக்கு அங்கு மரியாதை காண்பிக்கப்படவில்லையென்று தெரிந்து கொண்டேன். அப்துல்லாசேத் அவர்களை அறிந்தவர்கள், அவரிடம் பழகும் முறையைக் கண்டேன். அது என் உடம்பில் தைத்தது. ஆனால் அப்துல்லாவுக்கு இது பழகிப் போய்விட்டது. என்னைப் பார்த்தவர்கள் ஓரளவு விநோத நோக்குடன் பார்த்தார்கள். நான் அணிந்து கொண்டிருந்த உடுப்பு என்னை ஏனைய இந்தியர்களிடமிருந்து வேறுபடுத்திக் காண்பித்தது. நான் ஒரு பிராக் கோட்டையும் (சட்டையும்) பங்காளி தலைப்பாகையை ஒத்த ஒரு தலைப்பாகையையும் அணிந்து கொண்டிருந்தேன்.

கம்பெனி விடுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். எனக்காக உள்ள அறை காண்பிக்கப்பட்டது. அது அப்துல்லா சேத்துக்கு அடுத்த அறை. அவர் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் அவரை அறிந்துகொள்ளவும் முடியவில்லை. என் மூலமாய் அவருடைய சகோதரர் அனுப்பிய காகிதங்களைப் படித்தார். திகைத்துப்போனார். ஒரு வெள்ளை யானையை தன் சகோதரர் அனுப்பிவிட்டாரென்று அவர் கருதினார். எனது உடையும் வாழ்க்கையும் ஐரோப்பியர்களைப்போல செலவு பிடிக்கும் என்று அவருக்குத் தோன்றிற்று. எனக்கு கொடுக்கக்கூடிய சிறப்பான வேலை யொன்றும் அப்பொழுது இல்லை. டிரான்சுவாலில் வழக்கு நடந்து கொண்டிருந்தது. அங்கே என்னை உடனே அனுப்புவதில் பொருளில்லை. என்னுடைய திறமையையும் நாணயத்தையும் எவ்வளவு தூரம் அவர் நம்பக்கூடும்? பிரிட்டோரியாவில் என்னுடன்கூட இருந்துகொண்டு என்னை அவர் கவனித்து வரமுடியாது.

பிரதிவாதிகள் பிரிட்டோரியாவிலிருந்தார்கள். அவர்கள் தகாதமுறையில் என்னை தங்களிடம் இழுத்துக் கொள்ளப்பார்க்கலாம். பிரஸ்தாப வழக்கு சம்பந்தமான வேலை யொன்றும் என்னிடம் ஒப்புவிக்கப்படாவிடின், எனக்கு என்ன வேலை கொடுப்பது? ஏனெனின், ஏனைய வேலைகளை திறமையுடன் குமாஸ்தாக்கள் செய்யமுடியும். அவர்கள் தவறு செய்தால், அவர்களைத் தண்டிக்கலாம். நான் தவறு செய்தால், என்னைத் தண்டிக்கமுடியுமா? எனவே, வழக்கு சம்பந்தமான ஒரு வேலையும் எனக்கு கொடுக்கமுடியாவிடின், வீணிலே என்னை வைத்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

அப்துல்லா சேத் அவர்களுக்கு அநேகமாய் எழுத்து வாசனை கிடையாது. ஆனால், அவர் அனுபவக் களஞ்சியம். அவருடைய அறிவு கூர்மையானது. இது அவருக்குத் தெரியும். பழக்க மூலமாய் சம்பாஷணைக்கு வேண்டிய அளவு இங்கிலீஷ் கற்றுக்கொண்டார். இதைக்கொண்டு வியாபாரத்துறையிலும், அவர் வேலை செய்து வந்தார். பாங்க் காரியஸ்தர்கள், ஐரோப்பிய வியாபாரிகள், வக்கீல்கள், இவர்களுடன் எளிதிலே ஆங்கிலத்தில் பேசுவார். இவரிடம் இந்தியர்களுக்கு நல்ல மரியாதை. அவருடைய கம்பெனி, அப்பொழுதிருந்த இந்தியக் கம்பெனிகளில் மிகவும் பெரிது எனச் செல்லலாம். இவ்வளவு நயங்கள் அவரிடமிருப்பினும், அவரிடம் ஒரு குறை இருந்தது. அவர் இயற்கையாகவே சந்தேகக்காரர்.

இஸ்லாமைப்பற்றி அவர் கர்வமுடனிருப்பார். இஸ்லாமிய தத்துவத்தைப் பற்றிப் பேச, அவருக்கு ஆசையதிகம். அவருக்கு அரபிபாஷை தெரியாவிடினும், புனித குர்ஆனிலும், இஸ்லாமிய இலக்கியத்திலும், அவருக்கு நல்ல பழக்கம் உண்டு. கைவசம் எப்பொழுதும் அவர் பலஉபமானங்களை வைத்துக்கொண்டிருப்பார். அவருடையசெயற்கையால், இஸ்லாமைப்பற்றிய அனுபவ அறிவு எனக்குக் கிட்டிற்று. நாங்கள் நெருங்கிப் பழகத் துவக்கியபொழுது, மதசம்பந்தமான விஷயங்களைப்பற்றி, நெடுநேரம் பேசுவோம்.

காந்தியடிகளின் சரிதம்.

அனுபவ மாதிரிகள்.

மகாத்மா அவர்கள் "நவஜீவன்" பத்திரிகையில் எழுதியது.

நான் போய்ச் சேர்ந்த இரண்டாம் நாளோ, மூன்றாம் நாளோ, அவர் என்னைத் தர்பான் நீதிஸ்தலத்துக்கு அழைத்துச்சென்றார். அங்கு பலரை எனக்கு அறிமுகம் செய்வித்து, அவருடைய வக்கீலுக்குப் பக்கத்தில் உட்காரவைத்தார். நீதிபதி, என்னை உற்றுப்பார்த்த வண்ணமாயிருந்து, இறுதியில் என்னுடைய தலைப்பாகையை எடுத்து விடுமாறு சொன்னார். நான் மறுத்துவிட்டேன். நீதிஸ்தலத்தைவிட்டு வெளியே வந்தேன்.

எனவே, இங்கும் எனக்காக போராட்டம் தயாராக காத்துக்கொண்டிருந்தது.

சில இந்தியர்கள், தங்களுடைய தலைப்பாகைகளை எடுத்துவிட ஏன் வற்புறுத்தப்படுகிறார்களென்றும் இஸ்லாமிய உடைதரிப்பவர்கள், தலைப்பாகைகளை வைத்துக்கொள்ளலாமென்றும், ஏனைய இந்தியர்கள், கச்சேரி நுழைந்தவுடன், தங்களுடை தலைப்பாகைகளை பொதுவாக எடுத்துவிட வேண்டுமென்றும், அவர் கூறினர்.

இந்த நயமான வேற்றுமை விளங்கும் பொருட்டு, சில விபரங்களை நான் குறிப்பிடவேண்டும். இந்தியர்கள் இங்கு பல பிளவுகளாக பிரிந்து கிடந்தனரென்று இரண்டு மூன்று நாட்களுக்குள் நான் தெரிந்துகொண்டேன். ஒரு கூட்டத்தார் முஸ்லீம் வியாபாரிகள், அவர்கள் தங்களை அரபியர்கள் என்று அழைத்துக்கொண்டார்கள். வேறொரு கூட்டம் இந்து பார்ஸி குமாஸ்தாக்கள். இந்து குமாஸ்தாக்கள் "அராபிய"ருடன் சேர்ந்துகொண்டாலொழிய, அவர்கள் "இரண்டுங் கெட்டவர்கள்". பார்ஸி குமாஸ்தாக்கள், தங்களை பாரஸீகர்கள் என்று அழைத்துக்கொள்வார்கள். இந்த மூன்று வகுப்பார்களும் சமூக முறையில் கலந்துகொண்டிருந்தார்கள். ஆனால், பெரும்பான்மையான கூட்டத்தார் "கூலிகள்"; தமிழ், தெலுங்கு, வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள். ஒப்பந்தக் கூலிகள், ஐந்து வருஷத்துக்கு நெட்டாலில் வேலை செய்வதாக, ஒப்புக்கொண்டு போனவர்கள். அவர்களுக்கு "கிரிமித்தியர்கள்" என்று பெயர். "கிரிமித்" என்ற சொல், ஆங்கில வார்த்தை "எக்ரிமென்ட்" என்பதன் ஆபாசச் சிதைவாகும். மேலே கூறிய மூன்று கூட்டத்தார்களுக்கும், இவர்களுக்கும் வேலை சம்பந்தமாயல்லாது, வேறு உறவு கிடையாது. இவர்களை ஆங்கிலேயர்கள் "கூலிகள்" என்று அழைத்தார்கள். அங்கிருந்த இந்தியர்களில், பெரும்பான்மையோர் தொழிலாளர்களானதால், இந்தியர்கள் அனைவரும் "கூலிகள்" அல்லது "சாமிகள்" என்று அழைக்கப்பட்டனர். "சாமி" என்பது பல தமிழ்ப் பெயர்களுக்குப் பின்னால் வரும் விகுதியாகும். "சாமி என்பது வடமொழி ஸ்வாமியாகும். அதற்கு எஜமானன் என்று பொருள். எனவே, தன்னை "சாமி" யென்று அழைக்க பொருத இந்தியன் தனது கூரிய அறிவினால், "நீங்கள் என்னை "சாமி" என்று கூப்பிடலாம். சாமி என்றால் எஜமானன் என்பதை நீங்கள் மறந்துவிட்டீர்கள். நான் உங்களுடைய எஜமானன் அல்ல" என்று பதில் சொல்லுவான். சில ஆங்கிலேயர்கள் இதைக்கேட்டு நகைப்பார்கள். மற்றுஞ் சிலர், கோபங்கொண்டு, ஆவேசம் படைத்து, கூடுமானால், இந்தியனை அடித்துவிடுவார்கள். ஏனெனில், "சாமி" என்ற சொல்லை அவர்கள் கேவலமாகவே, உபயோகப்படுத்திவந்தார்கள். அதற்கு எஜமானன் என்று பொருள் கூறினால் அது அவர்களை அவமானம் செய்ததாகாதா?

எனவே, எனக்கு "கூலி பாரிஸ்டர்" என்ற பெயர்கிடைத்தது. வியாபாரிகளுக்கு "கூலி வியாபாரிகள்" என்ற பட்டம். கூலியின் பழைய பொருள் அடிபட்டுப்போய், இந்தியர்கள் அனைவருக்கும் "கூலி" என்ற பெயர் கிடைத்தது. முஸ்லீம் வியாபாரி இதைப்பொறுக்காமல், "நான் கூலியல்ல, நான் அரபியன். அல்லது நான் வியாபாரி" என்று சொல்லுவான். மரியாதையுள்ள ஆங்கிலேயன், மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவான்.

இந்த நிலைமையில், தலைப்பாகை சங்கதி, முதன்மை பெற்றது. இந்தியத் தலைப்பாகையை எடுப்பது அவமானத்தை உட்கொள்ளுவதாகும். இந்திய தலைப்பாகையைவிட்டு விட்டு, ஆங்கிலத் தொப்பியை அணிந்து கொண்டால், அவமானத்துக்கும் இனிப்பில்லாத வாதத்துக்கும், ஆளாகமாட்டேன் என்று எண்ணினேன்.

ஆனால், அப்துல்லாசேத் இந்த யோசனைக்கு இணங்கவில்லை. "நீங்கள் அவ்வாறு செய்தால், அதன் விளைவு தீதாகிவிடும். இந்தியத் தலைப்பாகைகளை அணிந்துகொள்ள வேண்டு என்று வற்புறுத்துபவர்களின் நிலைமையை கேவலமாக்கி விடுவீர்கள். தங்கள் தலைக்கு இந்தியத்தலைப்பாகை அழகாகவிருக்கிறது. ஆங்கிலத் தொப்பி அணிந்துகொண்டால், வேலைக்காரனைப்போல் காணப்படுவீர்கள்" என்று அவர் சொன்னார்.

இந்த யோசனையில் அனுபவ அறிவும், தேசபக்தியும், குறுகிய நோக்கமும், கலந்து நின்றன. அனுபவ அறிவு வெளிப்படை தேசபக்தியில்லாமல் இந்தியத்தலைப்பாகையைப்பற்றி அவர் வற்புறுத்தியிருக்கமாட்டார். வேலைக்காரன் என்ற குறிப்பு அவருடைய குறுகிய நோக்கத்தை வெளிப்படுத்திற்று. ஒப்பந்த இந்தியர்களுள், மூன்று வகுப்பார்களிருந்தார்கள்—இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள். கடைசிக்கூட்டத்தார், ஒப்பந்தக் கூலிகளாய், வந்த கிறிஸ்தவர்கள் ஆனவர்களின் சந்ததியார். கஅகூகம் வருஷத்திலேயுங்கூட, அவர்களுடைய தொகை அதிகம். அவர்கள் ஆங்கிலஉடைதரித்து ஓட்டல்களில் "குசினி" வேலைசெய்து ஜீவனம் நடத்திவந்தார்கள். அப்துல்லா அவர்களின் குறிப்பு இந்த வகுப்பாரைப்பற்றியதாகும். ஓட்டலில் வேலைசெய்வது, இழிவெனக்கருதப்பட்டது. இத்தகைய எண்ணம் இன்றும்பலரிடம் இருந்துவருகிறது. மொத்தத்தில், அப்துல்லாசேத் அவர்களின்

தந்தி.

(ஊழியனுக்காக வந்த தந்தி.)

பிறங்கு ஆனி மீ உகஉ

உண்டியல்விலை நூற்றைம்பத்துநான்கு

ஈயம் விலை நூற்றுநாற்பது

ரப்பர் விலை தொண்ணூறு

ரங்கூன் அருசியலு ஆனி மீ உகஉ

கடப்பு வட்டி	௦—ச—௦
தவணை வட்டி	௦—ச—௦
பவுன் விலை	கங—க—க
மொச்சை	கஎ௦, கடு௦—௦—௦
கடலை	கங௦—௦—௦
சிகப்பு பீனிஸ்	கசடு—௦—௦
வெள்ளை "	க௦௦—௦—௦
உளுந்து	இக௦—௦—௦
தட்டைப்பயறு	இசு௦, இஎ௦—௦—௦
பாசிப்பயறு	எ௦௦—௦—௦
மிம்பு, காசக்கட்டி	கசக—௦—௦
மிளகாய்	சு௦௦—௦—௦
கொத்தமல்லி	இடு—௦—௦
புளி	கடு—௦—௦
கொள்ளு	உக௦—௦—௦
திப்பிலி	எ௦௦—௦—௦
படகு நெல்	உக௦—௦—௦
ரயில் நெல்	உ௦டு, உகடு—௦—௦
ஸ்பெஷல் நெல்	இ௦௦—௦—௦
சிறியமில் அரிசி	இகடு—௦—௦
மீடான் "	இஇ௦—௦—௦
என். க்யூ	இசு௦—௦—௦
புழுங்கல் மில்சார் அரிசி	இசஎ, இஎ௦—௦—௦
நசேன் "	இஉடு—௦—௦
ஏ ஒன் குருணை	இஉஇ—௦—௦
பி. ஒன் "	இக௦—௦—௦
வி. ஒன் "	இ௦௦—௦—௦

தகுதியில்லை.

இந்தியாவில் நடைபெறும் கூட்டங்களில் கலவரங்கள் நேர்ந்தால், இந்தியர்கள் பொறுப்பாட்சிக்கு தகுதியற்றவர்கள் என்று ஆங்கில நாட்டுப் பத்திரிகைகளும் மற்றும் பலரும் என்று இந்திய ராஜபக்தர்களின் உள்ளங்களில் பதியுமாறு புத்தி சொல்வதுண்டு. ஆங்கிலத் தொழிலாளர்கள் நாளொன்றுக்கு எவ்வளவு காலம் வேலைசெய்ய வேண்டும் என்பதைப்பற்றிய ஒரு மசோதா பார்லிமெண்டு சபையில் இப்பொழுது வாதிக்கப்பட்டு வருகின்றது. தொழிற்கட்சி அங்கத்தினர்களிற் சிலர் முதல் மந்திரியை கொலை பாதகன் என்று அழைத்தார்கள். முதல் மந்திரியைச் சேர்ந்த கட்சிக்காரர்களனைவருக்கும் கோழைகள் என்ற பட்டம் கிடைத்தது. பார்லிமெண்டில் கலவரமும், குழப்பமும் நிகழ்ந்திருக்கின்றன. ஆங்கிலேயர்கள் பொறுப்பாட்சிக்குத் தகுதியுள்ளவர்களா என்பதை இந்திய ராஜபக்தர்கள்தாம் சொல்ல வேண்டும்.

யோசனை எனக்குப்பிடித்தது. கச்சேரியில் நடந்த நிகழ்ச்சியைப்பற்றி பத்திரிகைகளுக்கு எழுதினேன். கச்சேரிகளில் தலைப்பாகைகளை அணிந்துகொள்ளலாம் என வலியுறுத்தினேன். பத்திரிகைகளில் இந்த பிரச்னையைப்பற்றி பலமான வாதம் நடந்தது. அவைகள் என்னை "அழையாமல்வந்தவன்" என வருணித்தன.

நான் வந்த சில நாட்களுக்குள், இந்த நிகழ்ச்சியினால் எனக்கு எதிர்பாராத விளம்பரம் உண்டாயிற்று. சிலர் என்னை யாதரித்தார்கள். மற்றும் பலர், எனது துணிவைக் கண்டித்தார்கள்.

தென்னாப்பிரிக்காவில் கடைசி வரையில், என்னுடன் என் தலைப்பாகை தங்கிற்று. தென்னாப்பிரிக்காவில் எப்பொழுது,எக்காரணத்தினால் தலைப்பாகை அணிந்து கொள்வதை விட்டுவிட்டேன் என்பதை பின்பு பார்த்துக்கொள்ளலாம்.

பொருள் அடக்கம்.

ஊழியன்

மன்னவர் தமக்கும் அஞ்சேன்
மாண்பெறும் நாட்டிற் காக
என்னுயிர் தனையும் ஈவேன்
எதற்குமியான் யாண்டும் அஞ்சேன்
பன்னரும் பார தத்தாய்
புண்டைவாழ் வெய்தப் பாரில்
ஒன்னலர்க் கஞ்சா நல்ல
ஊழியம் தலைமேற் கொண்டேன்.

காரைக்குடி
அட்சய-வரு ஆனி-மீ ௨௨-௨

என்னுடைக் — — கொள்கை.

சென்ற கிழமை வெளிப்போந்த "குமரன்" என்னும் பத்திரிகையில் ஸ்தலஸ்தாபன சம்பந்தமாக அண்ணாமலை என்பாருக்கு மறுப்பாகத் தோன்றியிருக்கும் கடிதங்களில் சம்பந்தமில்லாமல் என்னைப்பற்றிச்சில காணப்படுகின்றன. பொதுவாகவே யார் என்ன எழுதினாலும் பதில் வரைந்துகொண்டிருப்பது என்பது என்னனையார்க்கு இயலாத காரியம். அன்றி, அக்கடிதங்களை எழுதியோர் மனித நீர்மையினின்றும் அவற்றை எழுதினரல்லர் என்பதை நான் நவிலாமலே கடிதங்களால் எவரும் எளிதில் உணர்தல் கூடும். எனவே அவற்றைப் பொருளாகக் கொண்டு விடையிறுக்கும் கடமையை நான் பூணவேண்டிய அவசியமின்று. அக்கடிதங்கள் என்னுடைக்கொள்கையல்லாத—என் கொள்கைக்கு முற்றும் முரணான சிலவற்றை என் கொள்கையென என்னையறியார் உணரத்தக்க நிலையில் இயம்புகின்றமையால், அவை சம்பந்தப்பட்டவரை என்னுடைக் கொள்கை இன்னதென அறிவிக்கும் கடமையையே ஈண்டு மேற்கொள்கின்றேனன்றி வேறன்று.

யான் அகத்திற் கொண்ட கொள்கைகளையே செயலிலும் செய்கின்றேனன்றி, அதுவேறு இதுவேறு அன்று. குற்றாலமாமலை இன்பவாழ்வு கூடாதென்று யான் எங்கும் கூறியதில்லை. அது தவறன்று என்றே யான் கருதுகின்றேன். ஊழியம் தலைமேற்கொண்டார்க்கு உடலோம்பலும் உயிரோம்பலும் கூடாவொழுக்கம் என்பது என்னுடைக் கொள்கையன்று. அவை இன்றியமையாமை வாய்ந்தன என்பதே என்னுடைக் கொள்கை.

"தாங்களாவது தங்களை ஆதரிக்கும் ஸ்ரீமாந் சொக்கலிங்கஞ் செட்டியாராவது வோட்டர் வீடுகட்குச் செல்லாமல் வோட் வாங்கமுடியுமா? தவம் பண்ணினாலும் முடியுமா? உங்களை எந்தப் போர்டுக்காவது தெரிந்தெடுக்கக்கூடிய நிலைமையை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா? போய்ப் பார்க்கலாமென்றதைரியமாவது உங்கட்கு இருக்கிறதா? கிடைக்காத பழம் புளிக்குமென்பது சாதாரண வழக்கமல்லவா?"

என்று மும்மலையில் ஒருமலையாகிய சோலைமலை சொல்கிறது. இவ் ஓட்டு வாங்கும்முறையைப்பற்றி ஊழியனில் ஆசிரியன் முறையில் எவ்வளவோ எழுதியிருக்கின்றேன். எந்தஸ்தாபனத்திற்காகட்டும் விடுவிடாகச்சென்றோ, அன்றி வேறுவிதமாகவோ எனக்கு ஓட்டுப்போடுங்கள் என்று கேட்பதும் யாசகம் கேட்பதும் ஒன்று என்பது என்னுடைக் கொள்கை. அக்கொள்கையை இன்று எவர்பொருட்டாகவும் யான் மாற்றிக்கொள்ள முடியாது. சோலைமலை போன்றன சொல்வதைப் பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமின்று. இன்னவற்றைச்செவிக்கொண்டால் பிறகு சங்கடங்கள் பல நேரும். தீவினை பூண்டொழுகும் ஒருவர், "உமக்குத் திறமையில்லையே என்வினையாற்றற்கு? தவம்பண்ணினாலும் என் செயலை நீர் கொள்ளமுடியுமா" என்று கேட்பாரானால் அதற்கஞ்சி அவ்விழிவினையிற் புகலாமோ?

ஆங்கிலமறியாமை இழிவு என்பது என்னுடைக் கொள்கையன்று. இக்கால உலக வாழ்விற்கு ஆங்கிலம் வேண்டுவதே. ஆனால் அது பயிலாதிருத்தல் ஒரு குறைவே, தவிர, அது பயிலாதார் இழிந்தோர், என்று கருதுதல் பிழை. அது பயின்றாருள் சிறியோர் உளர். அது பயிலாதாருள் பெரியோர் உளர். ஆங்கிலக்கடல்குடித்தல் பெருமைக்கும் அக்கடல் அணுகாமை சிறுமைக்கும் இலக்குகளன்று.

சொந்த இயந்திர வண்டியில் சென்றிறங்கினார்களென்று மதிப்பாக எழுதிக்கொண்டதாக வானமாமலை வழுத்துகிறது. நடந்த நிகழ்ச்சியை யெழுதியிருக்கிறதேயன்றி அதில் மதிப்பொன்றுமிருப்பதாக எனக்குப் படவில்லை. இயந்திர வண்டியுடையார் மதிப்புடையார் என்ற கொள்கையாளர்க்கு அது மதிப்பாகத் தோன்றலாம். என்னுடைக் கொள்கை அதுவன்று. இயந்திரவண்டி எத்துணைப் பல வைத்திருந்தபோதினும் அதுபற்றி நான் அவரை இம்மியும் மதிப்பதில்லை. என்னுள்ளம் மதிக்கும் பொருள்களுள் இயந்திரவண்டிகளும் இன்னோரன்னவும் சிறிதும் இடம்பெறா. ஒழுங்கு நேர்மை, அஞ்சாமை, புறங்கூறாமை ஆதியனவே மதிக்கத்தக்கன என்பதே என்னுடைக் கொள்கை.

காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தில் நிர்வாக அங்கத்தினனாகிய நான் ஒரு வேலையும் செய்யவில்லையென்ற உண்மையை நான் ஒப்புக்கொள்கிறேன். என்னுடைக் கொள்கையினைப்பற்றி அச் சங்கம் நடவாது என நான் உணர்கின்றேன். அதை ஈண்டு விரிப்பிற் பெருகும். அச் சங்கம் ஒரு வாசகசாலைபோன்று நடந்து வருகின்றது. அச்சங்கம் இருக்கும் நிலையில் நான் செய்யத்தக்கது எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதில் நான் அங்கத்தினனாக இருப்பதில் என்ன பெரும் பயன் என்று இரண்டுநாட்கட்கு முன்—விராலிமலை என் கட்படுமுன் நானே யோஜித்ததுண்டு. என்னனையார் அத்தகைய சங்கங்களில் நிர்வாகம் பெற்றிருப்பதில் எற்கும் பயனில்லையென்பதை ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் நான் அதை எவர் வீட்டிற்கும் சென்று வருந்திக் கேட்டு வாங்கிக்கொண்டேன் அல்லேன் என்பது அனைவரும் அறிந்தது.

தனவைசிய ஊழியர் சங்கத்தில் இப்பொழுது ஒன்றும் உருவானவேலை செய்வதற்கின்று. வேலையிருந்தபொழுது என் சிறு மதிக்கெட்டியவாறு செய்திருக்கிறேன். அவைகளை ஈண்டுக் கிளத்துதல் வேண்டாம். இந்து மதாபிமான சங்கத்தில் நிர்வாகம் பெற்றிருக்கின்ற இன்றும் ஊழியர் சங்கத்தில் நிர்வாகம் பெற்றிருந்த அன்றும் திருவாளர் சொ. முருகப்ப செட்டியாரவர்கள் செய்த வேலை என்ன என்று கேட்க நான் விரும்பவில்லை.

என்னுடை இக்கொள்கையின் உண்மையை மக்கள் அறிந்துகொள்வதற்காகவே, இக்கட்டுரை எழுதினேன் என்பதை எனது எழுத்தின் போக்கால் அன்பர்கள் அறிவார்கள். அன்றி உருக்காந்து கடிதங்கள் என்ற தலைப்பில், மூன்று மலையாகவும் ஒரு அங்கத்தினாகவும் இருந்து திருவாளர் சொ. முருகப்ப செட்டியாரவர்கள் எழுதிய உரைகட்குப் பதிலாக நான் ஏதும் இயம்பவில்லை. அம்முறையில் எழுதுவதென்றாலும் அன்னார் பயிற்சியும் எனக்குண்டு. ஆனால் எனது அக்காலம் மாறிவிட்டது. அக்கயமைத் துறையில் இறங்குதல் நலமன்று. கடிதங்கள் என்ற தலைப்பில் எழுதியவர் முருகப்ப செட்டியார் என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கலாம். அதற்காதாரம் எனது உளங்கூறும் உண்மையே. காந்தியடிகளையும் கடவுளையும் முன்னிலைப்படுத்தித் தாம் எழுதவில்லை யென்று அவர் மறுக்கமாட்டாரென்று ஒருவாறு நம்பியே இதனைக் கூறினேன். எழுதினது அவர்தாம் என்பது எனக்கு உறுதி.

திருவாளர் சொ. முருகப்ப செட்டியாரவர்கள் ஊழியனின்றும் பிரிந்தது முதல் இன்றுகாறும் ஊழியனுக்கு இயன்றபோதெல்லாம் செய்துவந்திருக்கும் இடையூறுகள் சொல்லிமுடியாது. அவை யாவும் பயன் பெறாதொழிந்தன. "வினையிட்டவன் வினையறுப்பான்; கெடுவான் கேடு நினைப்பான்" என்ற சொற்றொடர்களை எண்ணியே யான் இருந்தேன். அச்சொற்றொடர்கள் பொய்க்காவென்னும் நம்பிக்கை எற்குண்டு. அவர் செயல்கள் எல்லாவற்றிற்கும் எழுத்து மூலமும் தக்கோர் சாட்சி மூலமும் ஆதாரங்கள் இருக்கின்றன. இனி அவை வெளிப்படுங் காலமும் வருமோ என்றையுறுகின்றேன். எவரோடும் வீண் சண்டையிடுதல் என்னுடைக் கொள்கையன்று. அன்னார் பொறாமைப் புண்ணை வைத்து வைத்து மூட எனக்குப் பிரியமில்லை. மூட மூட அது கிளம்பிக்கொண்டேயிருக்கும். அதனை ஒரே வழியாக ஆற்றிவிடுவதே என்றெண்ணுகிறேன். இனி அப்புண் தோன்றுமானால் ஒரே வழியாகச் சரிப்படுத்த இடந்தரவேண்டுவதே.

எவரையும் இழித்தல் என்னுடைக் கொள்கையன்று. எந்த நல்வினைக்கேனும் இடையூறாகப் பொறாமைப் பூதங்கள் தோன்றுமானால் அவற்றைக் கொன்று சாய்த்தாலன்றி அறம் வளராதென்பதே என்னுடைக் கொள்கை.

எனது அன்பர்கள் எவரும் எதற்கும் அவசரப்படுதலாகாது. என்னைப் பற்றிப் புகழ்ந்து எழுதப்படும் எந்த நிரூபத்தையும் இவ் ஊழியன் தாங்கி வரமாட்டான்.

குற்றாலம், அட்சயஆனி ௧௧௨. } ஊழியன், ராய.சொக்கலிங்கன்.

பட்டத் தீர்மானம்.

சென்ற செவ்வாயன்று சென்னையில் நடந்த தமிழ் நாடு காங்கிரஸ் கூட்டத்தில் திரு. கல்யாணசுந்தர முதலியாரவர்களின் பட்டத்தீர்மானம்—அதாவது பட்டங்கூடாது என்ற தீர்மானம் வந்தது. அது நாம் எதிர்பார்த்தபடியே பட்ட தீர்மானமாயது. திரு. சத்தியமூர்த்தி அதில் திருத்தம் என்று சொல்லி ஒன்றைக் கொண்டு வந்தார். அத்திருத்தத்தைத் தீர்மானங் கொணர்ந்த அன்பர் முதலியார் அங்கீகரித்துவிட்டார். பிறகு திருத்தமே தீர்மானமாயது என்று செப்பவும் வேண்டுமோ? தீர்மானத்தின் உள்ளூரைக்கும் திருத்தத்தின் உள்ளக்கிடக்கைக்கும் வேறுபாடு மிகுதியும் உண்டு. தமது தீர்மானத்தைப் பலமாக வற்புறுத்திப் பத்திரிகையில் முன்னரே எழுதிவந்த அன்பர் கல்யாணசுந்தரர் தமது தீர்மானக் கருத்தை நிறைவேற்றாத திருத்தத்திற்குச் சட்டென்று சம்மதித்தது சந்தர்ப்பம் நோக்கிப் போலும்!

முதல் தீர்மானம் பட்டத்தையும் பதவியையும் விட்டுவிட வேண்டுமென்பதும் கதருடையில் பற்றில்லாதார் பற்றுக்கொள்ள வேண்டுமென்பதும். திருத்தம் "அபேட்சகர்களாக நிறுத்தப்பட்டவர்களுள் பட்டம் உள்ளவர் பட்டத்தைவிடுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும்; இனி எதிர்காலத்தில் காங்கிரஸ் அபேட்சகர்கள் பட்டங்களையோ அரசாங்க நியமன பதவிகளையோ ஏற்கக் கூடாது" என்பது. முதல் தீர்மானம் பட்டம் பெற்றவரை அபேட்சகராக ஏற்றுக்கொள்ளாது. திருத்தத் தீர்மானம் அப்படியன்று. பட்டதாரிகளை நன்றாக ஏற்றுக்கொள்ளும். ஆனால் அது வேண்டாம் என்று விளம்பும். அதை யார் கேட்கப் போகிறார்? ஒரு சிலர் தாமேவிடுவதை இலக்காகக் காட்டுதல் ஆகாது. காங்கிரஸ் அபேட்சகர்கள் எதிர் காலத்தில் பட்டம் வாய்க்கக் கூடாதாம்! நியமன பதவி யேற்கக்கூடாதாம். காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த பிறகு அவைகளை எதிர்பார்த்தலே பைத்தியக்காரத்தனமல்லவா? அவருக்குப் பட்டம் எங்கே வரப்போகிறது! நியமன பதவி அவர்கட்கு ஏது? இதற்குத் தீர்மானம் வேண்டுவதில்லையே. எல்லாம் ஏமாற்றல் வித்தையாகவே இருக்கின்றது. சுயராஜ்யக் கட்சியார் தங்கள் சிறுநலனைக் கூட ஒருநாளும் விடப்போவதில்லை.

அன்பர் முதலியார் முதல் தீர்மானத்தில் கதரைப்பற்றிய பகுதி ஒன்றிருந்தது. திருத்தத்தில் அதைத் தேடித் தேடிப்பார்த்தோம். காணமுடியவில்லை. அன்பர் சத்தியமூர்த்தி திருத்தத்தில் அது ஏன் வருகிறது? கதரைப்பற்றி அத்தீர்மானங் குறிப்பதற்கே பொருளில்லை. திருத்தத்தில் அதுவும் ஒழிந்தது. செயலைப்பற்றியதைத் தீர்மானிக்கலாமே ஒழிய உள்ள நிகழ்ச்சியைப் பற்றியதைத் தீர்மானிக்கமுடியாது. அதைத் தீர்மானித்தல் பயன்தராது. கதர்க்கட்ட வேண்டுமென்று தீர்மானித்தால் அதற்குப் பொருளுண்டு. கதரில் பற்றுக்கொள்ள வேண்டுமென்றால் என்ன பொருள்? பற்றில்லாத ஒருவர் உள்ளத்தைத் தீர்மானமூலம் பற்றுக்கொள்ளுமாறு திரும்பும் வழியை நாம் அறிவோம். அரசாங்கத்தார் ராஜபக்தி வேண்டுமென்று தீர்மானிப்பதற்கும் இதற்கும் என்ன வேற்றுமை? கதர்க்கட்ட வேண்டுமென்று தீர்மானித்தல் வேண்டும். அது இந்தச் சட்டசபைக் காங்கிரசில் ஆகக்கூடிய காரியமா? பற்றுக்கொள்ளுதல் என்று சும்மா எழுதிவைக்கும் தீர்மானமே ஆங்கு இடம் பெறவில்லையே. "பற்றுக்கொள்தல் என்றால் கட்டிக்கொள்தல்தான் அதற்கறிகுறியாகலின், பற்றுக் கொள்தல் என்பது கட்டிக்கொள்தலிலேயே முடியும்" எனச் சிலர் வாதிக்கலாம். அது ஏமாற்றும் வாதமாகும். இதில் ஒளிவு என்ன? நோக்கம் அதுவானால், கட்டிக்கொள்தல் ஒன்றே தீர்மானம் இருக்கவேண்டும். அதுதான் போய்விட்டதே. இனி ஏன் அதைப் பேசுதல் வேண்டும்?

ஏதோ ஒருவகையாகக் காங்கிரஸ் சென்று கொண்டிருக்கிறது. சட்டசபை சார்ந்து எல்லாப் படியும் ஏறி முட்டித் திரும்பட்டும்.

இடிமுழக்கம்.

கெட்ட குடியே கெடும்.

தேசபந்து தாஸ் அவர்கள் இறந்து ஒரு வருஷம் பூர்த்தியாவதற்குள், அவருடைய பிள்ளை—ஒரே புதல்வன்—இறந்துபோனதாகச் செய்தி கூறுகின்றது. தேசபந்துவின் மனைவி "பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதை." இந்த உத்தமிக்கு இத்தகைய துயரம் நேர்ந்ததைக் குறித்து வருந்துகிறோம்.

பூமியதிர்ச்சி.

சென்ற வாரத்தில் பல நாடுகளில் சமூக அதிர்ச்சி என்று கூறினோம். இதனுடன் பூமியதிர்ச்சியும் சேர்ந்து கொண்டது. சுமத்திராத்தீவிலும், இத்தாலிய நாட்டிலும் கடுமையான பூமியதிர்ச்சி உண்டாயிற்றாம். சுமத்திராத்தீவு பண்டைக் காலத்தில் இந்தியாவைச்சேர்ந்தது என்பதுகூட நம்மவர் இருக்கும் நிலையில் நினைவுகூட இருக்குமா? இத்தாலிய நாட்டுடன் இந்தியாவுக்கு நல்ல வியாபாரம் அதிகாலத்தில் நடந்து வந்தது. சுமத்திராவில் படாங் நகரம் அடியோடு அழிந்து விட்டதாம். ஜீவகாருண்யம் என்ற உத்தம உணர்ச்சி கொண்டல்லவாயினும், பழைய உறவைக் கருதியேனும், இவ்விரு நாட்டார்களுக்கு நேர்ந்திருக்கும் விபத்து சமயத்தில் அனுதாபம் காட்டுவது நமது கடமையாகும்.

இந்தியர்களுக்கு மட்டும்.

போர்த்துகல் நாட்டில் அரசியல் புரட்சி; ஸ்பெயின் நாட்டில் புரட்சிக்குப் பிரயத்தனம். கிரேக்க நாட்டில் அரசியல் புரட்சி பலித்து விட்டது. போலந்தில் புரட்சி ஒருவாறு வெற்றி பெற்று விட்டது. ஜர்மனியில் புரட்சிக்கு யோசனையும் ஏற்பாடும் நடைபெற்று வருவதாகக் கூறப்படுகிறது. ஆங்கில நாட்டுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்செய்து அரசியல் அமைப்பை மாற்ற எத்தனித்ததாகக் கூறப்பட்டது. சீனாவிலோ, நாளுக்கொரு புரட்சி. மேலே கூறப்பட்ட நாடுகளில் புரட்சி என்றால் விளையாட்டு சங்கதிபோல ஆகிவிட்டது. உடை மாற்றிக்கொள்ளுவதைப்போல அவ்வளவு எளிது புரட்சி எனக் கருதப்படுகிறது. இந்தியாவிலோ அது கூடாது. இந்தியர்களுக்கு மட்டும்—வெறுக்கத்தக்க அச்சம் என்று சொல்லவும் வேண்டுமா? இதை நினைப்பின், தேசபக்தர்களுக்கு உள்ளத்தில் அமைதி இருக்காது.

இலாபமில்லை.

ஸ்ரீமான் ஜி. ஜி. சிம் என்பவர் ரெயில்வே பொக்கிஷ கமிஷனர். ரெயில்வே இலாக்காவை தலைகீழாக்கிவிட்டார். தஞ்சை ஜில்லா போர்டு ரெயில்வேயில் நல்ல இலாபம் இப்பொழுது கிடைக்கின்றது என்பதைக்கண்டு, அதைத் தென்னிந்திய ரெயில்வேக் கம்பெனியாருக்குக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று இந்திய அரசாங்கத்துக்கு கெட்ட யோசனை கூறியவர் இவரே. இவர் தமது பதவியை இராஜிநாமா செய்து விட்டு, ஆர்மஸ்டிராங் விக்கர்ஸ் கம்பெனியில் வேலைக்கு அமர்ந்து விட்டார் என்று அறிகிறோம். இவர் இந்தியாவை விட்டுப் போனதால் நஷ்டம் இல்லை. மேற்கூறிய கம்பெனியார் யுத்தக் கப்பல்கள், போர்த் தளவாடங்கள் செய்வதில் நிபுணர்கள். இனி சிம் அவர்களின் முயற்சியால் இந்திய அரசாங்கத்தார் விக்கர்ஸ் கம்பெனியாரிடம் ஏராளமாக "ஆர்டர்கள்" கொடுப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை நடக்குமா?

1925-ஆம் செப்டம்பர்-மீ இந்திய சட்டசபையில் நாட்டின் பொதுக் கோரிக்கையைக் குறிப்பிட்ட தீர்மானமொன்று நிறைவேறிற்று. அதற்கேற்ற பதில் இந்திய அரசாங்கத்தாரிடமிருந்து, பீப்ரவரி (1926)மாதத்துக்குள் வராவிடின், சட்டசபையை விட்டு விலகுவது என்று சுயராஜ்யக்கட்சியார் தீர்மானித்து, விலகும்பாவனையும் செய்து விட்டார்கள். இதேகோரிக்கைக்குத் தக்க பதில் இந்த ஆண்டு முடிவுக்குள் அரசாங்கத்தாரிடமிருந்து வராவிடின் நபர் சட்ட மறுப்புச் செய்யவேண்டும் என கீழ் கோதாவரி ஜில்லா மகாநாட்டில் தீர்மானம் செய்யப்பெற்றிருக்கிறது. சட்டமறுப்பு தேவாமிருதமாகும். அது இப்பொழுது கிடைக்குமா என்பது தான் நமது சந்தேகம். எப்பொழுதும் கிடைக்காது என்று நாம் ஒருநாளும் எண்ணினதேயில்லை. எண்ணியிருப்பின், சுயராஜ்யத்தைப் பற்றி நாம் ஒருக்காலும் பேசமாட்டோம்.

வேறு எவரும் இல்லையா?

ஸர். சார்லெஸ் டாட்ஹண்டர் என்பவர் ஐ. ஸி. எஸ். கூட்டத்தைச் சேர்ந்தவர். சென்னை அரசாங்க நிர்வாக சபையில் அங்கத்தினராக, டாட்ஹண்டர் அவர்கள் சமீபகாலம் வரையில் இருந்தவர். உபகாரச் சம்பளம் பெற்று, இவர் பதவியினின்றும் நீங்கிக்கொண்டார். மைசூர் மகாராஜா அவர்களின் அந்தரங்கக் காரியதரிசியாக ஸர். சார்லெஸ் அவர்கள் நியமிக்கப் பெற்றிருக்கிறார் என்று அறிகிறோம். ஐ.ஸி. எஸ். காரர்களுக்கு பிரிட்டிஷ் இந்தியா மட்டும் போதாதா? சுதேச சமஸ்தானங்களிலும் இவர்கள் படையெடுத்துச்செல்லவேண்டுமா? இவர்களை நாம் கோபித்துப் பயனில்லை. அந்தரங்கக் காரியதரிசிப் பதவிக்குரிய தகுதி பெற்ற இந்தியன், மகாராஜா அவர்களின் கண்களில் படவில்லையா? இந்தியாவின் நீளம் 1900 மைல்; அகலம் 1400 மைல். இதில் வசிப்பவர்கள் 34 கோடி ஜனங்கள். என்றாலும் தகுதியுள்ள இந்தியன் கிடைக்கவில்லை! என்ன ஆச்சரியம்!

முன் யோசனை.

காங்கிரஸ் காரர்கள் தங்களுக்குள் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் பரஸ்பரம் மண்டையை உடைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தியக் கிருஸ்தவர்கள் இந்த நாடே தங்களுக்குச்சொந்தமல்லவோ என நினைத்துக்கொண்டு, தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். சீக்கியர்களுக்குள் இருந்துவரும் பிளவுகள் இன்னும் தீர்ந்தபாடில்லை. ஆதித்திராவிடர்களை, அவர்கள் இருக்கும் நிலையைக் கருதி, குறைகூறுவது நியாயமாகாது. பார்சிக்காரர்கள் குடிபுகுந்தவர்கள். இவர்கள் யாவரும் இந்தியாவைப்பற்றிக்கவனிக்கவில்லை. ஆனால் அதிகாரவருக்கத்தார் தங்கள் சக்தியை எத்தகைய முன்யோசனை கொண்டு அரண் செய்து வருகிறார்கள் என்பதை நோக்கும் தேசபக்தன் உள்ளம் பதறுவான். இந்தியாவிலே நிலப்படையை அதிகாரவருக்கத்தினர் கோரக அமைத்துக் கொண்டுவிட்டார்கள். கடற்படை ஏற்படப் போகிறது. ஆகாயப்படையைத் திருத்தியமைக்க, புதிய படைத் தலைவரும் நியமனம் செய்யப்பெற்றிருக்கிறார். அதிகார வருக்கத்தினரின் முன்யோசனையைக் கண்டேனும், இந்தியர்களுக்கு நல்ல புத்தி உண்டாகக் கூடாதா?

ஆபத்து.

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாள் என்பது பழமொழி. தங்கள் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று இந்தியர்கள் கிளர்ச்சிசெய்தால், அதற்கு மாறாகச் செய்வது தங்கள் கடமை எனக் கொண்டிருக்கிறார்கள் இந்திய அரசாங்கத்தார். மாறாகச்செய்யவில்லை எனச் சில சந்தர்ப்பங்களில் காணப்பட்டால், உள்ளே ஆபத்துமறைந்திருக்கிறது என்பது உறுதி. இந்தியத் தொழில்களை அரசாங்கத்தார் ஆதரிக்க வேண்டுமென இந்தியர்கள் கிளர்ச்சி செய்தார்கள். இதுவரையிலும் இது சம்பந்தமாக ஒன்றும் செய்யவில்லை. இந்தியத் தொழில்களை இப்பொழுது ஆதரிக்கப்போவதாக வங்காள அரசாங்கத்தார் யோசனை செய்து வருகிறார்களாம். எந்தத் தொழில்களுக்கு? சணல் தொழிலுக்கு. இந்தியாவில் சணல் தொழில் முழுதும் அன்னிய (ஆங்கில) முதலாளிகளின் வயம் இருக்கிறது எனக் கூறலாம். இதனாலே தான், வங்காள அரசாங்கத்தார் இந்தியத் தொழில்களை ஆதரிக்க முன்வந்துள்ளார்கள் போலும்!

மடமைக்கு எல்லையில்லை.

இக்காலில் ஹிந்து முஸ்லீம் கலவரத்தைப்பற்றி சொல்லத் தேவையில்லை. இது தினசரிக் "கோது"வாகும். சமீபத்தில் லக்னோ என்ற லட்சுமணபுரியில் கலவரம் நடந்தது. கலவரம் ஏற்பட்டால், இருதிறத்தார்களும் வழக்குத் தொடராமலிருப்பார்களா? வழக்குகளும் ஏற்பட்டன. இந்த வழக்குகள் முஸ்லீம் அதிகாரிகளால் விசாரிக்கப்படுவதால் தங்களுக்கு நியாயம் கிடைக்காது என லொகி ஹிந்துக்கள் கவர்னர் அவர்களுக்கு மனுப்பண்ணிக் கொண்டிருக்கிறார்களாம்! ஹிந்துக்கள் செய்துகொண்ட மனு நியாயம் கிடைப்பதற்கல்ல. "நாங்கள் முட்டாள்கள். முஸ்லீம்கள் முரடர்கள். ஆகவே நாங்களிருவரும் இந்த தேசத்தை ஆளத்தகுதி பெறாதவர்கள். எனவே கருணை கூர்ந்து அரசியல் பொறுப்பைத் தாங்களே நீடிழி காலத்துக்கு வைத்துக்கொள்ள வேண்டும்" என்று ஹிந்துக்கள் அதிகாரவர்க்கத்தினரான ஐ. ஸி. எஸ். காரர்களுக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவமானம்! அவமானம்!! அவமானம்!!!

பால்ய விவாகம்.

கலியாணம் என்பது யாது என்று அறியக்கூடாத பருவத்திலே மணமுடித்து உடனே புருஷனிறந்தால், அத்தச் சிறு குழந்தையை, அமங்கலப் பெண் எனக் கூறி அவமதிக்கும் கெட்ட வழக்கம் இந்த நாட்டிலே தான் மலிந்து கிடக்கின்றது. கோலாப்பூர் சமஸ்தானத்தில், பத்து வயதுக்குட்பட்ட பெண்ணுக்கும் பதினெட்டு வயதுக்குட்பட்ட ஆணுக்கும் கலியாணம்செய்து வைப்பது குற்றமென ஒரு சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. கோலாப்பூர் சமஸ்தானத்தில் குழந்தைவிவாகம் அதிகம் எனத் தோன்றுகிறது. அதனாலே தான் பத்து வயது எல்லை கோலப்பட்டிருக்கிறது. இந்த சீர்திருத்தத்தையும் கண்டு நாம் மகிழ்ச்சியுறுகின்றோம். பால்ய விவாகம் கூடாது என்று நம்மவர்கள் கண்டு அதை ஒழிக்கின்றார்களோ, அன்றே நமது நாட்டில் உடலுறுதியும் உள்ளத்தின் உறுதியும் கொண்ட குழந்தைகள் பிறப்பது உறுதி. ஆனால் வழக்கப் பேய் நம்மைப் பிடித்து ஆட்டுமளவும், நம்மவர்களுக்கு நல்லறிவு தோன்றுமா?

உள்ளூர்.

நமது நிருபரிடமிருந்து.

ரெங்கூன் உண்டியல் வட்டம்	௧—௦—௦
சென்னை உண்டியல் வட்டம்	௦—௪—௦
பவுன் (பொற்காசு)	௧௩—௧—௬
வெள்ளி ரூபாயிடை	௦—௧௧—௯
சென்னை நடப்புவட்டி(ஆனிமீ)	௦—௧—௦

காலநிலை:—கதிரவனும் வாயுவும் தம் சக்தியைக் காட்டுகிறார்கள். வெப்பத்தின் கொடுமை மிக அதிகம். ஆனல் வாயுபகவானும் தம் சக்தியைக்காட்டி தெருவில் நடப்பார்கள் கண்களில் மண்ணைவாரி இறைக்கிறான்.

கதர்:—இவ்வூர் காங்கிரஸ் கதர்க்கடையில் இம்மதி ௧௪-ம் நாள் முதல் ௨௧-ம் நாள் வரை ரூ ௯௯௯—௧—௯ க்கு கதர் விற்பனையாயிருக்கிறதென அதன் காரியஸ்தர் அறிவிக்கிறார்.

சாக்கடை:—இந்நகரில் சாக்கடை சரியாக எடுக்கப்படாததால் கொசுக்கள் ஸ்திரமாக இந்நகரில் குடியேறி விட்டதெனவே சொல்லலாம். கொசுவலை இல்லாது தூங்க முடியாத நிலையில் இந்நகர் இருக்கிறது. பணக்காரர்கட்கு கொசுவலைகட்கு குறைவில்லை. ஏழைகள் என்செய்வார்கள்!

இயந்திரவண்டி நிலையம்:— மோட்டார் ஸ்டாண்டு எனும் இயந்திரவண்டி நிலையம் கல்லுக்கட்டியிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டுமென வெகு நாட்களாக கிளர்ச்சியிலிருந்தும் இன்னும் மாற்றப்படவில்லை. இதுபற்றி வாளாவிருப்பது முறையல்ல. சீக்கிரம் மாற்ற ஏற்பாடு செய்வார்களென நம்பப்படுகிறது.

இயந்திர வண்டிமோதுதல்:— சென்ற ஞாயிறு அன்று தேவகோட்டையிலிருந்து திருச்சிக்குத் தபால் கொண்டுபோகும் இயந்திரவண்டி இவ்வூர் தபால் நிலயத்தில் தபாலெடுக்க வந்தபோது மிக வேகமாய் வந்ததாலும் பிரேக்பிடிக்காததாலும் தபால் நிலயத்தில் மோதி படிக்கட்டுகள் உடைந்து வேறு சில சில்லரைச் சேதங்கள் விளைவித்து விட்டதுடன், இயந்திரங்கள் டியின் மட்கார்டு, பெட்ரோல்டாங் முதலியனவும் நொருங்கி விட்டன எனச்சொல்லப்படுகிறது. பிரயாணிகட்கும் காயங்கள் உண்டாம். இச்சம்பவம் நடந்ததற்கு முதல் நாள் ஆங்குள்ள வெற்றிலைபாக்குக் கடையில் ஒரு போர்டு கார்மோதி ஆங்குள்ள சோடா பாட்டல்கள் முதலியன சேதமாம். இயந்திர வண்டி யோட்டுபவர்கள் நகருக்குள் முப்பதுமைல் வேகம் வைத்து விடுவது இப்பக்கங்களில் வழக்கமாகிவிட்டது. நகருக்குள் பத்துமைல் வேகத்திற்குமேல் விடக்கூடாதெனச் சட்டம் செய்து அதை அமுலுக்கு கொண்டுவந்தாலல்லாது இது போன்ற சம்பவங்களை ஒழிக்க இயலாது.

பாலம்:— இவ்வூர் போலீஸ் ஸ்டேஷனுக்கருகில் ஒரு பாலம் கட்ட ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. அதனல் கோவிலூர் மார்க்கம் போகும் வரும் வண்டிகள் மேல ஊருணிச் சந்துவழியாக போக்கு வரத்துச் செய்யப்படுகிறது. தாராளமான வண்டிகள் அவ்வழியில் போக்குவரத்து நடப்பதால் அவ்வழியில் சில இடங்களில் பள்ளம் படுகுழிகளாக விருக்கிறது. அவைகளைத் தற்கால எற்பாடாகவாவது செப்பனிட்டாலல்லது பிரயாணிகள் வயிறு குலுங்கிக் குலுங்கிக் கொண்டுதான் பிரயாணம் செய்ய வேண்டியதிருக்கும். ஆதலால் அதைச் செப்பனிட வேண்டியது மிக இன்றியமையாததாகும்.

கப்பல்.

இம்மதி ௨௫-ம் நாள் வெள்ளியன்று ஒரு கப்பல் சென்னையிலிருந்து இரங்கூனுக்குப் புறப்படுகிறது. வழக்கம்போல் தபால்களையும் எடுத்துக்கொண்டு போகும்.

டீல்ட்டா கப்பல் இம்மதி ௩௦-ம் நாள் சென்னையிலிருந்து புறப்பட்டு நாகப்பட்டினத்திற்கு வந்து அங்கிருந்து ஜூடி-மீ ௩-ல் ஞாயிறன்று மலேயா நாட்டிற்குச் செல்கிறது. பிரயாணிகள் ஞாயிறு அன்று காலையிலேயே நாகப்பட்டிணத்தில் கப்பலில் ஏறிவிடவேண்டுமென நாகப்பட்டிணம் ஏஜண்டு அறிவிக்கிறார்.

கடிதங்கள்.

ஆத்தங்குடி, முத்துப்பட்டினம்.

நாவுக்கரசு நற்சபையின் மூன்ருவது மாதக்கூட்டம் இம்மதி பதினொம் நாள் புதன்கிழமை பிற்பகல் ஐந்துமணிக்கு திருவாளர் சுவீர. கதிரேசஞ்செட்டியாரவர்கள் தலைமையில் பிர்மஸ்ரீ. ராமபத்ராச்சாரியார் மு. திருவேங்கிடமய்யங்கார், திருவாளர்களான. அழ. அருணுஜலச் செட்டியார், சித. நாராயணச்செட்டியார், ராமப. சோமசுந்தரச்செட்டியார் முறையே, சத்சங்கம், ஒழுக்கம், ஜீவகாருண்யம், பொறுமை, ஒற்றுமை என்ற விஷயங்களை, அழகுறப் பேசினர்கள். தலைவர் இடை இடையேயும் முடிவுரையாகவும் இனிமையாகப் பேசியபிறகு, புட்பஹாரங்களுடன் வந்தனஞ்சொல்லப்பெற்று சந்தன தாம்பூலாதி கற்கண்டு வழங்கப்பெற்று, இரவு ஏழே முக்கால் மணிக்கு, சபை இனிது நிறைவெய்தியது.

சம்பாவனை.

இச்சபைக்கு ஆ. முத்துப்பட்டினம் திருவாளர். சிராம. நாச்சியப்ப செட்டியாரவர்கள் தமது குமாரன் சிரஞ்சீவி நாச்சியப்பனுக்கு, இம்மதி பதினைன்காம் நாள் நடைபெற்ற, கல்யாணத்திற்காக ரூபாய் பதினைன்று நன்கொடையாக உதவியுள்ளார்கள். அவர்கட்கு மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

சித. நாராயணன் செட்டியார்.
காரியதரிசி.

* * *

ஓர் அரிய தருமம்.

ஆத்தங்குடி திரு. அ. மு. அ. அண்ணாமலைச் செட்டியாருடைய தாயாருடைய முதல் வருட சிரார்த்தத்திற்கு மருதங்குடி காந்தி வித்யாலய மாணவ மாணவிகளுக்கு ஆடையும் அவர்களுக்கும், ஏழைகளுக்கும், உணவும் அளிப்பதற்காக ரூபாய் ௧௦௦ கொடுத்தார். சென்ற வியாழக்கிழமையன்று சிராவயல் காந்தி ஆசிரமத்தில் வைத்து, அன்னவரின் விருப்பப்படி சுமார் ௧௨௦ பேருக்கு உண்டியும்; மாணவ மாணவிகட்கு ஆடையுமளிக்கப்பட்டது. பிராமணர்களுக்கே, சிரார்த்ததானத்தை கொடுப்பதென்ற வழக்கத்துக்கு மாறாக பசியால் வருந்தும் ஏழை மக்கட்கு உணவும், ஆடையுங் கொடுத்தது மிகவும் பாராட்டத் தக்கது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

* * *

ஓர் நன்கொடை.

தேவகோட்டை நாக. அமு. அண்ணாமலை செட்டியாரவர்கள் குமாரர் சிரஞ்சீவி முத்துக்கருப்பனுக்கும் முக. பெரி. மு. கதிரேசச்செட்டியார் குமாரி சௌபாக்கியவதி அழகம்மைக்கும் இம்மதி ௧௪-ம் நாள் நடந்த திருமணத்தில் அன்பர் மு. க. பெரிமு. கதிரேசச்செட்டியார் அவர்கள் நம் ஊழியனுக்கு ரூபாய் பத்து நன்கொடையாகத் தந்துள்ளார்கள். அவர்கட்கு எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

காரியஸ்தர்
ஊழியன்

* * *

"மும்மலைகள்."

பொதுஜன வேலையைச் செய்ய வேண்டியவர்கள், அதைச் செய்யத்தவறிவிட்டார்கள் எனப் பொது நன்மையைக் கருதி, ஊழியனில் நான் எழுத, அதற்கு மறுப்பு எழுதுவதுபோல பாவனைகொண்டு, "குமரன்" பத்திரிகையில், "மும்மலைகள்" என்னைப்பற்றி புன்மொழிகளைப் பெய்திருப்பதைக் கண்டேன். உயிரற்ற "மலைகள்" தோன்றியவகையை அனைவரும் அறிவர். சமயம் வரும்பொழுது, நான் எழுதியதை மெய்ப்பிக்கின்றேன்.

அண்ணாமலை.

காந்தி கிணறு வரவு செலவு கணக்கு.

சிராவயல்-மருதங்குடியில் மகாத்மா காந்தி கிணறு வெட்டிக் கட்டிய வரவு செலவு கணக்கு விபரம் வருமாறு:—

வரவு.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியிலிருந்து ரூ ௨௦௦-௦-௦-ம் திலகர் சுயராஜ்ய நிதியிலிருந்து ரூ ௧௩-அ-௦-ம் திருவாளர் மு. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்களிடமிருந்து ரூ எஅ-௧௩-௦-ம் ஆக ரூ ௨௯௨-௫-௦

செலவு.

வெட்டுக்கூலி	ரூ	௧௩௪—௧௪—௯
செங்கல்கட்டுகூலி	ரூ	௧௧௧— ௧—௦
கல் விலை கூலி	ரூ	௨௯—௧௩—௯
சில்லரை சாமான்	ரூ	௧௬— அ—௦
		௨௯௨—௫—௦

* * *

ஓர் வேண்டுகோள்.

அன்பார்ந்த சகோதரர்களே!

நமது சங்கத்தில் அங்கத்தினர்கட்கு ரூ ௫௦-ம் அபிமானிகட்கு ரூ ௧௫-ம் வருட சந்தாவென இருந்த தீர்மானத்தை முறையே ரூ ௨௫-ம் ௧௦-ம் எனத் திருத்தி ஊழியன் பத்திரிகையை அவரவர்கள் நேரே தருவித்துக் கொள்வதெனத் தீர்மானித்திருப்பதால் புதுவருடத்திற்கு சங்கத்திற்குரிய சந்தாவை மட்டும் இங்கு அனுப்பித்தரும்படியும் ஊழியன் பத்திரிகையை வி. பி. மூலமோ முன் பணம் அனுப்பியோ நேரில் தருவித்துக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

உங்கள் ஊழியன்
மு. சோமசுந்தரம்.
தனவைசிய ஊழியர் சங்கக் காரியாலயம், சிராவயல்.

* * *

தேவகோட்டை டி. மு. கோர்ட்டு.

O. S. No. 6 of 1926.

லேட் வள்ளியம்மை ஆச்சியின் சோத்துக்கள் விபரம்.

மனுதார்கள்:

ரும.சு.அ. அண்ணாமலை செட்டியார் 1.
ரும. சு. ரும. சுப்பிரமணியன் செட்டியார் 2.

எதிர் மனுதார்:

மைனர் M. S. P. கதிரேசன் செட்டியார் ஷையாரின் தாயார் விசாலாச்சி மூலம்.

நோட்டீசு.

ஷை நிம்பரில் 1-வது மனுதாரின் சகோதரி லேட் வள்ளியம்மை ஆச்சியின் வார்சுகளான மனுதார்கள் ஷையார்கள் பேருக்கு R. M. V. A. M. அண்ணாமலை செட்டியாரிடமும் R.M. V. A. M. ராமஸாமி செட்டியாரிடமும் டிபாசிட்டாகயிருக்கிற சுமார் ரூ. 6000 ஐ வசூலிக்கும்படி மனுதார்களுக்கு வார்சு சர்ட்டிபிகேட்டு கொடுக்கும்படி மனுச்செய்துகொண்டு ஷை மனுவும் 8—7—26ல் வாயிதா ஏற்பட்டிருக்கிறது என்றும் அதற்கு ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை கோர்ட்டில் ஷை தேதியில் ஆஜராகி தெரியப்படுத்திக்கொள்ளலாமென்றும் அறிவித்திருக்கிறது.

S. கிருஷ்ணமூர்த்தி அய்யர்,
மனுதார்கள் வக்கீல்.

தமிழ் நாடு.

சென்னைக்கு அருகிலுள்ள திருவள்ளூரில் ஒருவன் ரெயில் ஏறி மாண்டான்.

* * *

மதுரையில் ௨௬௨ தீப்பிடித்து சுமார் ௯௦ வீடுகளுக்கு அதிகமாக எரிந்துபோயினவாம்

* * *

உதகமண்டலத்தில் சீமான் ரெங்கம் செட்டியாரவர்கள் ஏராளமாக கதர்விற்பனை செய்தாரென கூறப்படுகிறது.

* * *

திடீரென காவேரியில் ஜலம்வற்றி ஸ்ரீ அதிகமாக உண்டாகி விவசாய முயற்சிச் தடைபட்டு நிற்கின்றனவாம்.

* * *

தமிழ் பல்கலைக்கழகம் காணும் யோசனை சம்பந்தமாக கோயம்புத்தூரில் ஒரு பெருங் கூட்டம் கூடப்பெற்றது.

* * *

திருவாங்கூர் சமஸ்தான புதிய அச்சுக்கூட ரெகுலேஷனை ஆட்சேபித்து கண்டித்து ஜூன்மீ ௨௯௨ சமஸ்தான முழுதும் துக்கதினமாக கொண்டாடப்பெற்றது.

* * *

அந்தமான் குடியேற்றக் கமிட்டியின் பெரும்பான்மையான அங்கத்தினர்களின் யாதாஸ்தை சென்னை அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறப்படுகிறது.

* * *

லால்குடி தாலூகா பனம்பாளையத்தில் திருச்சி ஜில்லா முத்துராஜ மஹாஜனப் தொன்பதாவது மகாநாடு ஜூன்மீ ௨௯௨ நடைபெற்றது.

* * *

சென்னை நகரில் தேர்தல் சம்பந்தமாக கூடும் காங்கிரஸ் கூட்டங்களில் ஜஸ்டிஸ் கட்சியார் கலவரம் செய்கின்றார்கள் எனக் கூறப்படுகிறது.

* * *

கனம் சர். பி. ராமஸ்வாமி அய்யரவர்கள் தமது நிர்வாக சபைப்பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டார் என்ற வதந்தி ஆதாரமற்றது என "ஹிந்து" பத்திரிகை கூறுகின்றது.

* * *

திருச்சி "பாலசரஸ்வதி விலாச" சபையின் ஆண்டுவிழா சனியன்று நடைபெற்றது என்றும், "ராமன் வனவாசம்" என்ற நாடகம நடிக்கப்பட்டதென்றும் அறிவிக்கப்படுகிறது.

* * *

சென்னை "ஆனந்தபோதினி" பத்திரிகைக்கும், "ஆனந்த குணபோதினி" பத்திரிகைக்கும், வழக்குநேர சென்னை ஹைக்கோர்ட்டார் "ஆனந்தகுணபோதினி"க்குச் சாதகமாக தீர்ப்புச்சொல்லி விட்டார்கள்.

* * *

பங்களூரிலிருந்து ஜூன்மீ ௩௦௨ ரெயிலில் பிரயாணம்செய்துவந்த ஒருவர் திடீரென ரெயில்வண்டியிலேயே இறந்துபோக, அவருடைய சவம் திருவள்ளூர் ஸ்டேஷனில் வண்டியிலிருந்து எடுக்கப்பட்டதாம்.

3-வது வருடம்.

"கிராம வாழ்க்கை"

கிராமவாசிகளின் முன்னேற்றத்தைக் கருதி உழைத்துவரும் தமிழ் மாதப் பத்திரிகை. இதில் பல அருமையான வியாசங்கள் வெளிவரும். மாதிரி பிரதி இனம்.
வருஷ சந்தா உள்நாடு ரூ. 2-0-0
வெளிநாடு ரூ. 2-8-0

தமிழ் சட்ட புஸ்தகங்கள்.

(புதிய பதிப்பு)

பெரிய ஹிந்து லா ரூ. 2, புதிய விவசாய சிந்தாமணி ரூ. 2-8-0, சிவில் புரோஸீஜர் கோட் ரூ. 3, இந்தியன் பீனல் கோட் ரூ. 3, புதிய கிராம பஞ்சாயத்து ஆக்ட் ரூ. 1-2-0, புது கிராம முனிசீப் ஆக்ட் ரூ, 1-8-0, கிரிமினல் புரோஸீஜர் கோட் ரூ. 3, இதர சட்டபுஸ்தகங்களும், நாவல்களும், புராணங்களும், எங்களிடம் கிடைக்கும்.

கிராம வாழ்க்கை ஆபீஸ், மதராஸ்.

வெளி நாடு.

சுமத்ரா தீவில் கடுமையான பூகம்பமாம்.

* * *

கானடா மந்திரி சபையார் தங்கள் பதவி[illegible] ராஜிநாமாச் செய்துவிட்டார்கள்.

* * *

இத்தாலியா தேசத்தில் பூகம்பத்தினுல் [illegible]௦௦ வீடுகளுக்கதிகமாக சேதமுண்டா[illegible]ரும்.

* * *

இந்திய நாணயச் செலாவணி கமிஷ[illegible]டைய யாதாஸ்து ஜூலைமீ ௧௨ லண்டன் [illegible]ரில் பிரசுரிக்கப்பெற்றது.

* * *

[illegible]ஸ்பெயின் நாட்டு அரச தம்பதிகள் ஆங்[illegible] நாட்டுக்கு கடி நாள் ஓய்வு எடுத்துக்[illegible]ண்டு சென்றிருக்கிறார்கள்.

* * *

[illegible]புதிய கருவியமைப்பைக்கொண்டு, செவி[illegible]ளிற் பெரும்பான்மையோருக்கு காதில் [illegible]ரகச் சத்தம் விழச்செய்வதாக (ஆங்கில [illegible]டில்) கூறப்படுகிறது.

* * *

[illegible]பெயின் தேசத்தில் அரசியல் அமைப் [illegible]மாற்ற, அரசியல் புரட்சி சதி நடந்த[illegible]தாகவும் அதை முதல் மந்திரி கண்டு [illegible]ண்டதாகவும் கூறப்படுகிறது.

* * *

[illegible]ழைய மந்திரிக் கூட்டத்தாரின் முறை[illegible]யொட்டியே, காரியம் செய்யப்படும் [illegible] புதிய பிரெஞ்சு மந்திரி சபையார் [illegible]ஸ்து விடுத்திருக்கின்றனர்.

* * *

[illegible]பரோக சிகிச்சைக்காகப் புதிதாக, [illegible]பிரிட்ஜ் ஷயரில் ஏற்படுத்தப்பட்டி[illegible]ரும் ஆஸ்பத்திரியை ஜியார்ஜ் மன்னன் [illegible]வைட்டார்.

* * *

[illegible]புல் அரசன் பாக்தாகைவிட்டு, பாலை [illegible]மோட்டாரில் பிரயாணம் செய்து, ஆங் [illegible]ட்டுக்குச் செல்ல புறப்பட்டுவிட்டன

* * *

[illegible]தாய்க் கட்டப்பெற்ற, இருபதினுயிரம் [illegible]றையுள்ள 'கார்னர்வான்காஸில்' என்ற [illegible]டார் சப்பல், ஜூலைமாதம் ௬-ந்தேதி [illegible]பிரிக்காவுக்கு ஸவுத்தாம்டன் நகரி[illegible] புறப்பட்டுச் செல்லும்.

* * *

[illegible]ம் கோபாம் என்ற ஆகாய[illegible] நிபுணர் லண்டனிலிருந்து ஆஸ்தி[illegible]ாவிலிருக்கும் மெல்போர்ன் நகரத் [illegible] (தூரம் ௨௬௦௦௦ மைல்) ஆகாயவிமா[illegible]ல் பிரயாணம்செய்யப்போகின்றாராம்.

* * *

[illegible]கில பார்லிமெண்டு சபை அங்கத்[illegible]களில் தொழில் கட்சியைச் சார்ந்த [illegible]முதல் மந்திரியையும் அவரைச்சேர்ந்த [illegible]யும் "கொலை பாதகர்கள்" என்று [illegible]த்து, பார்லிமெண்டு சபையில் கூப் [illegible]போட்டார்கள்.

* * *

[illegible]த்த செப்டம்பரில் கூடும் சர்வதேச [illegible]ர் கூட்டத்துக்கு இந்தியாவின் [illegible]திகளாக, ஸர் வின்ஸெண்டு, கபுர்த் [illegible]மகாராஜா, பாரிஸ்டர் கான்பகதூர் [illegible] அப்துல் காதர், மூவரும் நியமனம் [illegible]ப்பட்டிருக்கிறார்கள்.

* * *

[illegible]ாவியத்து (ருஷிய) அரசாங்கத்தார் [illegible]யமாக ஆங்கிலத்தொழிலாளர்களுக்கு [illegible] செய்ததைக் கண்டித்து பார்லி[illegible]டு சபையில் கிளர்ச்சி செய்த அங்கத்[illegible] இனியும் அவ்வாறு நேருகின்றதா[illegible]தைப் பார்ப்பதற்கு ஒரு கமிட்டியைச் [illegible]திருக்கிறார்.

* * *

[illegible] ஜெர்மன் கெய்ஸர் அவர்களுடைய [illegible]தைப் பறிமுதல்செய்வதா என்பதைப் [illegible] "ரீக்ஸ்டாக்" இல் (ஜர்மனி பார்லி[illegible]டு சபை) கட்சிகளுக்குள் அபிப்பிராய[illegible]ருப்பதால், ஜர்மனியின் தற்போ[illegible]திரி சபையாருக்கு பெரும்பான்மை [illegible]ாது எனவும் அவர்கள் ராஜிநாமாச் [illegible]ர்கள் என்றும் கூறப்படுகின்றது.

போர்த்துகல் தேசத்தில் ஏற்படவிருந்த அரசியல் புரட்சி சம்பந்தமாக மாஜி மந்திரிகளில் பலர் கைது செய்யப்பட்டனராம்.

* * *

பாரவீக நாட்டு பொக்கிஷ இலாகா உதவி மந்திரி கொல்லப்பட்டார். கொன்றவன் தற்கொலை செய்து கொண்டான்.

* * *

உலகப்பிரசித்தி பெற்ற "மெஸ்மரிஸ" (வசீகர சக்தி) நிபுணர் டாக்டர் கூ அவர்கள் இறந்து போனர்.

* * *

ரிப் ஜாதியாரின் தலைவரான அப்துல் கரீம் அவர்களின் தலையை வாங்கிவிட வேண்டுமென்று ஸ்பானியர்கள் கூப்பாடு போடுகின்றனராம்.

* * *

கனடாவில் மந்திரிமார்கள் ராஜிநாமா செய்தும், சட்டசபைகளைக் கலைக்க, கனடாவில் கவர்னர் ஜெனரல் பிங் பிரபு இசையவில்லை.

* * *

உலகத்தில் பொது சமாதானத்தை முன்னிட்டேனும் இத்தாலியாவும் ஆங்கிலநாடும் நட்புக்கொண்டு இருக்கவேண்டும் என ஆங்கில அந்நிய நாட்டு மந்திரி கூறுகின்றார்.

* * *

இராக் நாட்டின் பொக்கிஷ மந்திரியான ஸாபி நபாத் என்பார் இராக் நாணயம், ரெயில், விவசாய பாங், சம்பந்தமாக ஆங்கில நிபுணர்களைக்கண்டு கலந்துபேச இங்கிலாந்திற்குச் செல்லுகின்றார்.

* * *

தொழிலாளர்கள் நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் வேலைசெய்ய வேண்டுமென ஆங்கில மந்திரி சபையார் பார்லிமெண்டு மகா சபையில் கொண்டுவந்திருக்கும் மசோதாவை முன்னிட்டு, தொழிற்கட்சியாருக்குள் பிளவு ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

* * *

பிரிட்டிஷ் மண் எண்ணெய்க் கம்பெனிகளுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதாகக் கூறிய ருமேனிய அரசாங்கத்தார், அவ்வாறு கூறி எழுமாதங்களாயினும் இன்னும் நஷ்ட ஈடு கொடுக்கவில்லை என்று ஆங்கில அந்நிய நாட்டு மந்திரி கூறுகிறார்.

* * *

ஆங்கிலநாட்டுக்கு ஈராக் நாட்டார் கொடுக்கவேண்டிய கடன் திருப்பிக்கொடுக்கப் பட்டதா என்று கேட்ட கேள்விக்கு ஆங்கில முசல்போட்டு அமைக்கப்பட்ட ஈராக்கு ரெயில்வேக்கள் ஆங்கில அரசாங்கத்தாரின் பயம்தான் இன்னுமிருக்கிறது என்று குடியேற்ற நாட்டு உதவி மந்திரி பதில் அளித்தார்.

* * *

பாரசீக நாட்டில், சால்மாஸ் என்ற ஊரில் வைக்கப்பட்டிருந்த பட்டாளம் கலகம் செய்து, தன்னுடைய தளகர்த்தனைக் கொன்று விட்டதாம். மற்றும் சில பட்டாளங்கள் மேற்கூறிய பட்டாளத்துடன் சேர்ந்து கொண்டது கண்டு, கலகம் செய்யும் பட்டாளங்களை அடக்க அரசாங்கத்தார் ஒரு சேனை அனுப்பியுள்ளார்கள்.

* * *

புண்ணியகம்பளம் ஜெட்டாவிலிருந்து மெடினுவுக்குப் போகக்கூடாது எனக் கட்டளையிடப்பட்டதாம். புண்ணிய கம்பளத்தை வழிநடத்திச்சென்ற உத்தியோகஸ்தர்களுக்கிடையே பெயர் தெரியாத நோய் பரவியதே இந்தக்கட்டளைக்குக் காரணம் எனக்கூறப்படுகிறது. (முஸ்லீம்களுக்கு புண்ணிய கம்பளம் மிகவும் புனிதயானதாகும்.)

* * *

இத்தாலிய நாட்டின் செல்வ நிலையைக் கருதி, வரும் பன்னிரண்டு மாதகாலத்துக்கு புதிய கட்டிடங்கள் அமைக்கலாகாதெனவும் தினசரிப் பத்திரிகைகள் ஆறுபக்கங்களுக்கு அதிகமாகக்கொண்டு பிரசுரிக்கப்படலாகாதென்றும் நவம்பர் மாதம் ௧-தேதி வரையில் ஆல்கஹால் கலக்காத பெட்ரோல் எண்ணெய் கிடைக்காது எனவும் முதலாளிகள் வேலை நாட்களை அதிகப்படுத்த வேண்டுமெனவும் மந்திரி சபையார் புதிய சட்டம் செய்திருக்கின்றனர்.

தாய் நாடு.

ராஜாங்க சபையும், இந்தியா சட்டசபையும், ஆகஸ்டுமீ ௧௭௨ ஸிம்லாவில் கூடும்.

* * *

டேரா இஸ்மெயில்கான் நகரில் பதினொரு ஹிந்துக்கள் கைது செய்யப்பட்டனர்.

* * *

ரெயில்வே ரேட் கமிட்டியின் தலைவர் ஸர். பி. எஸ். சர்மா அவர்கள் ஜூலைமீ ௧௨ கல்கத்தாவுக்குப் போய்ச்சேர்ந்தார்.

* * *

ஐக்கியமாகாண கவர்னர் ஸர் வில்லியம் வின்கிளேர் மாரிஸ் அவர்கள் மூன்றரை மாதம் ரஜா பெற்றிருக்கிறார்.

* * *

அலிப்பூர் சிறைச்சாலை அப்பீல் வழக்கு ஜூலைமீ அ௨ விசாரிக்கப்படும் எனத் தெரிகிறது.

* * *

ஜூன்மீ ௨௯௨ பிற்பகலில் பூனா நகரத்தின்பேரில் கடுமையான புயல்காற்று வீசிற்று. ஏர்ரவாடா சிறையில் இடிவிழ ஒரு கைதி இறந்துபோனன்.

* * *

கூஜராத் மாகாணத்தில் தண்ணீர்த்தட்டு அதிகமாக ஏற்பட்டிருப்பதால் விவசாயம் சரிவர நடைபெறவில்லையாம். வெப்பத்தின் கொடுமை பொறுக்கமுடியவில்லையாம்.

* * *

இன்னும் ஒருமாதம், லக்னோ நகரில் ௧௪௪-வது பிரிவின் கீழ் தடை உத்தரவு அமுலில் இருக்கும் என்று டெபுடிகமிஷனர் அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்.

* * *

கலவர வழக்குகளில் முஸ்லீம் திறப்பில் டிபன்ஸ் தயார்செய்ய, தில்லி முஸ்லீம்கள், ஒரு கமிட்டியை ஏற்படுத்தியிருக்கிறார்களாம்.

* * *

பண்டிதநேரு முஸ்ஸோரியில் ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும் என அவர்களுக்கு வைத்திய நிபுணர்கள் யோசனை கூறியிருக்கின்றார்களாம்.

* * *

ஜூலைமீ எ௨ பூனா நகரத்துக்கு விஜயம் செய்யும் பணகால் ராஜா அவர்களுக்கு உபசாரப்பத்திரம் படித்துக் கொடுப்பதாக, பூனா நகரத்துக்கு பிராமணரல்லாதார்கள் யோசனை செய்திருக்கின்றார்களாம்.

* * *

சீமான் ஜெயகர் அவர்களுக்கு பம்பாய் ஹைகோர்ட்டு நீதிபதி பதவி அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டதாயும் அதை அவர் ஏற்க மறுத்துவிட்டதாகவும் செய்தி கூறுகின்றது.

* * *

லாகூரில் நடக்கும் "நேஷன்" பத்திரிகையின் ஆசிரியர் வகுப்பு துவேஷத்தை மூட்டும் கட்டுரைகளை எழுதுகின்றார் என்று ஜில்லா மாஜிஸ்ட்ரேட் அவர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

* * *

இந்தியா சட்டசபைத் தலைவர் கனம் படேல் அவர்கள் ஜூலைமீ ௪௨ ஸிம்லாவை விட்டு புறப்பட்டு கல்கத்தாவுக்கு வந்து அங்கு ௬௨ கூடும் வங்காள சட்ட சபையின் நடவடிக்கைகளைக் கவனிப்பாராம்.

* * *

பிரிட்டிஷ் சந்திர நாகூர் (கல்கத்தாவுக்கு அருகிலுள்ளது) என்றும் ஊரில் சூதாட்டம் ஆடினவர்களை அரசாங்கத்தார் கைது செய்து, வலுத்த போலீஸ் பந்தோபஸ்துடன் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிருக்கிறார்கள்.

* * *

பாஸ்பர ஒத்துழைப்பாளர்களின் கூட்டம் முன் கூறியபடி அலகாபாத் நகரில் நடைபெறவில்லை. அந்தக்கட்சியாளர்களுக்கு நகரில் ஆதரவில்லாமையே கூட்டம் நடைபெறாததற்கு காரணம் என கூறப்படுகிறது.

* * *

கிழக்கு வங்காள ரெயில்வேயில் திடீரென டிக்கட்டுப் பரிசோதகர்கள் சில ரெயில் வண்டிகளில் டிக்கட்டுகளைப் பரிசோதிக்க, எல்லா வகுப்புக்களையும் சேர்த்து ௨௦௦ பேர்களுக்கதிகமாக டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தனராம்.

ரெங்கூன், டாலாவில் அரிசியில் தீப்பிடித்து எரிய தீபக்கத்திலும் பரவிவிட்டதாம்.

* * *

தேசபந்துவின் ஏகபுத்திரன் இறந்ததின் பொருட்டு தேசபந்து வாரம் ஜூன்மீ ௨௩௨ ஆரம்பிக்கப்படவில்லை.

* * *

காங்கிரஸ் தலைவர்களின் வங்காளச் சுற்றுப் பிரயாணம் ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

* * *

தேசபந்து தாஸின் ஏகபுத்திரனுன சிரஞ்சன தாஸ் ஜூன்மீ ௨௫௨ கடுகிசியில் இறந்தார்.

* * *

ஹூக்ளி ஜில்லாவிலிருக்கும் உத்தரபாரா என்னும் ஊரில் போலீஸ் காரர்கள் "சதி" சம்பந்தமாக, இரண்டு வீடுகளை சோதனை போட்டார்கள்.

* * *

இலஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பெற்ற பம்பாய் இரகசிய போலீஸ் இன்ஸ்பெக்டர் கவேசுவர் வேலையினின்றும் நீக்கப்பட்டார்.

* * *

சென்னை அரசாங்க நிர்வாக சபையின் மாஜி அங்கத்தினரான சர் சார்லஸ் டாட் ஹண்டர் என்பவர் மைசூர் மகாராஜா அவர்களின் அந்தரங்க காரியதரிசியாக நியமிக்கப்பெற்றிருக்கிறார்.

* * *

கல்கத்தா சர்வகலாசாலைக்கு ஸ்ரீமான் யதுநாத் சர்க்காரவர்கள் உப அத்தியக்ஷராக வங்காள அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பெற்றிருக்கிறார் எனக் கூறப்படுகிறது.

* * *

பம்பாய் மகாண காங்கிரஸ் கமிட்டி அஸ்ஸாமில் கூடும் காங்கிரஸின் தலைவர் பதவிக்கு, சீமான்கள் பரூச்சா, சீனிவாஸ அய்யங்கார், மஸ்ரூல்ஹேக் அவர்களின் பெயர்களைச் சிபார்சு செய்து இருக்கிறது.

* * *

ஜூலைமீ ௧௨ பாட்னா நகரில், கடுமையான ஹிந்து முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது என்றும் அந்நகரில் ௧௪௪ பிரிவின்கீழ் தடையுத்தரவு அமுலில் இருந்து வருகிறது எனவும் அறிவிக்கப்படுகிறது.

* * *

பம்பாய் எஸ்பிளனேட் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து சென்ற ஏப்ரல் மீ தப்பியோடிய பாபுசாய் மவாலா என்ற பயங்கரக் கொள்ளைக்காரனும் அவனது சகாக்கள் பதினேழுபேர்களும் ஜால்கான் என்ற ஊரில் பிடிக்கப்பட்டார்களாம்.

* * *

லக்னோ நகரில் சேர்ந்த கலவர சம்பந்தமான வழக்குகளை ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் விசாரிக்க வேண்டுமென்றும், முஸ்லீம் அதிகாரிகளிடம் தங்களுக்கு நம்பிக்கை யில்லையென்றும் சிகாளி ஹிந்துக்கள் கவர்னருக்கு மனுச் செய்துகொண்டிருக்கிறார்களாம்.

* * *

அகில இந்திய காங்கிரஸ் காரிய கமிட்டியின் கூட்டம் கல்கத்தாவில் ஜூலைமீ ௪, ௫௨களில் கூடும். அச்சமயம் கமிட்டியின் அங்கத்தினர்களான காந்தி, பண்டித நேரு, மௌலானா, மகம்மது அலி, கூட்டத்தில் பிரசன்னமாயிருக்கமாட்டார்கள் என அறிவிக்கப்படுகிறது.

* * *

ஜூன்மீ ௨௯௨ பம்பாய் நகரில் கெய்காம் ரோட்டில் இருந்த ஒரு குடும்பத்தில் எட்டு பேர்கள் ஐஸ்கிரீம் சாப்பிட்டபின் மயக்கமடைந்தார்களாம். ஐஸ்கிரீமில் விஷங்கலந்திருந்ததனுல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட எண்மரில் ஒருவர் இறந்து போய்விட்டனராம்.

* * *

அகில இந்திய ராஜீய சைநிகளின் மகாநாட்டின் திட்டத்தில் அன்னிய ஆடைகள், சர்க்கரை முதலியவைகளை பஹிஷ்காரம் செய்யவேண்டு மென்றும், ஆசியாக்காரர்கள் பரஸ்பரம் தங்களுக்குள் சலுகை காண்பித்துக்கொள்ள வேண்டுமென்றும், தீர்மானம் ஆயிற்றாம்.

தேவகோட்டை
தாலூக்கா போர்டு.

(நமது நிருபரிடமிருந்து.)

இம்மதி கசு-ம் நாள் புதனன்று காலை ஒன்பதுமணிக்குத் தேவகோட்டைத் தாலூக்காபோர்டு கார்யாலயம் கட்டடத்தில் திருவாளர் எம். ஆர். சேஷய்யர் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் நடந்தது.

திருவாளர்களான எம். ஆர். சேஷய்யர் து. வெங்கட்டராமய்யங்கார், சித. நா. ராம. நாராயணன் செட்டியார், சி. மு. அரு. முத்துராமன் செட்டியார், பிரான்மலை சேர்வைகாரர், சௌமிய நாராயண அய்யங்கார், முரு. பழ. அண்ணாமலை செட்டியார், சி. சுந்தரமய்யர், எம். ஆர். பி. செய்து முகம்மது சாகிப், அடைக்கன் கங்காணி, என். எஸ். வெங்கிட்டராமயர் எம். ஆர். சுப்பையா செட்டியார். என். கோயில் பிள்ளை, சிவ. அ. அண்ணாமலை செட்டியார் முதலிய அவயவிகள் ஆஜராகியிருந்தனர். வழக்கம்போல பார்மலாக சுமார் சஉ விஷயங்கள் ஏகோபித்து அனுமதிக்கப்பட்டன.

இரண்டு என்குரோச்சுமெண்டுக்கு நோட்டீஸ் கொடுக்கும்படியும் ஒருஎன்குரோச்சுமெண்டை மேல்நடத்த வேண்டாமெனவும் ஏகோபித்து தீர்மானிக்கப்பெற்றது.

கொண்டபாளையம் கிராமத்தில் இப்போதிருக்கும் சுடுகாடு-இடுகாடு குடிதண்ணீர் ஊருணிக்கு அருகில் இருப்பதால் மூடிவிட வேண்டுமென ஏகோபித்து தீர்மானிக்கப் பெற்றது.

இந்தராஜதானியிலுள்ள யூனானி அல்லது ஆயுர்வேத ஔஷதாலயங்கட்கு நாட்டு மருந்துகள் சப்ளை செய்வதற்கு கவர்மெண்டாரால் ஒரு கோஆபரேட்டிவ் ஸ்டோர் வைக்கவேண்டிய புரோபோசலின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும்படி கேட்டு விடப்பட்டதற்கு இவ்விஷயத்தில் போர்டார் அபிப்பிராயம் சாதகமாயிருப்பதாக ஏகோபித்து தீர்மானிக்கப்பெற்றது.

திருப்பத்தூரிலிருந்து குன்னக்குடிக்கும் கோவிலூருக்கும் போகிற ரோட்டு, தேவகோட்டையிலிருந்து கண்டதேவி மார்க்கமாய் ஆராவயலுக்குப்போகிற ரோடு, இந்த இரண்டு ரோடுகளையும் பரிபாலனம்செய்கிறதற்கு ரூபாய் அஉ௱ கண்டிரிபியூஷன் கொடுகும்படி டிஸ்டிரிக்டு போர்டாரைக் கேட்கும்படி தீர்மானித்ததாயுள்ள க௦—ச—உசுவுள்ள க௦—நிர். தாலூகா போர்டு தீர்மானம். ஷை விஷயமாய் தாலூகா போர்டார் சிராண்டு கொடுக்கும்படி கேட்டதற்குக் காரணம் கேட்டுவரலான இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களின் லெட்டர்.

இதற்கென பிரத்தியேகமாகப் பணம் ஒதுக்கிவைகப்படாததாலும் மிக முக்கியமானதும் நல்ல நிலைமையிலுள்ள ரோடாகவும் சுங்கவரும்படியுள்ளதுமாயிருப்பதாலும் கண்ட்ரிபுஷன் கொடுக்கவேண்டியது அவசியம் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனல் சில அவயவிகள் குன்னக்குடி—கோவிலூர் ரோட்டுக்கு ராவ்பகதூர் ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார் அவர்கள் பொதுஜனங்களிடமிருந்து டணம் வசூல் செய்திருக்கிறாரெனவும் அவர் ரூ. ௪உ௱௦ தந்து ரோட்டை போர்டில் ஒப்புவிப்பதாக ஒப்பந்தம் செய்துள்ளாரென்றும் சொன்னார்கள். அதற்கு தலைவர் சாக்கோட்டை கூட்டத்தில் ரோட்டை ஒப்புக்கொண்டாய் விட்டதெனக் கூறினர்.

காரைக்குடியிலிருந்து புதுக்கோட்டைக்குப்போகும் சக நிர். ரஸ்தாவில் ௦/சு-வது மைல் அல்லது ச/உ-வது மைலில் ஒரு சப்கேட் வைக்கவேணுமென திருப்பத்தூர் டோல்கேட் லெஸ்ஸி மகம்மது இபுராஹிம் ராவுத்தர் மனுவின்மீது தாலூகா போர்டாரின் அபிப்பிராயம் கேட்டு வரலான இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களின் எண்டார்சுமெண்டு.

சப்கேட் ஏற்படுத்துவதை ஆட்சேபித்து திருவாளர்களான சித.நா.ராம. நாராயணன் செட்டியார், து. வெங்கிட்ட ராமய்யங்கார் சி. மு. அரு. முத்துராமன் செட்டியார், பிரான்மலை சேர்வை, சௌமியநாராயண அய்யங்கார், முரு. பழ. அண்ணாமலை செட்டியார், சிவ. அ. அண்ணாமலைசெட்டியார், எம். ஆர். பி. செய்து முகம்மது சாகிப், அடைக்கன் கங்காணி, முதலியோர் பலமாக ஆட்சேபித்தனர். தலைவரும் சி. சுந்தரமய்யரவர்களும் சுங்கக்காரர் கொடுத்துள்ள மனுவை வாசித்து புது ரோட்டின் வழியா இயந்திரவண்டிகள் முதலியன போய் விடுவதாக அதிற் கூறப்பட்டிருக்கிறதெனவும் அப்படிப் போய்கொண்டிருந்தால் சுங்கக்காரருக்கு நஷ்டம்தானே. ஆதலால் சப்கேட் ஏற்படுத்தவேண்டுமென வாதித்தனர். ஆனால் சித. நா. ராம. நாராயணன் செட்டியார் சேமத்தான் பட்டியிலிருந்து மகஜருடன் சிலர் வந்திருக்கின்றனர். அவர்களையும் கூப்பிட்டுக் கேட்கவேண்டுமெனத் தெரிவித்தார். அவர்களும் வந்து புது ரோட் ஒன்றும் இல்லை எனவும் புது ரோட் எனத் சுங்கக்காரர் குறிப்பிடும் ரோட்டு சுமார் ஒன்பது பத்து வருடங்கட்கு முன் போடப்பட்டது எனவும் அதிற் சுமார் ஒன்றறை வருடங்கட்கு முன் ஒரு பாலம் கட்டப்பட்டதெனவும் அதற்கு பிறகு ஒன்றும் நடக்கவில்லை எனவும் சொன்னார்கள். அப்பால் ஜனப் செய்து முகமம்மது சாகிப் அவர்கள் சுங்கக்காரர் கண்ட்ராக்ட் கேட்டு லைசன்ஸ் பெறும்போதே இந்த ரோடு இருந்திருக்கிறதென நன்கு தெரிகிறது. சுயக் குத் தெரியாமல் யாரும் புது ரோட்டுப் போடமுடியாது. சென்ற மார்ச்சுக்குப் பிறகு நாம் அங்கு புதுரோடு போட அனுமதிக்கவில்லை. சுங்கக்காரர் கண்ட்ராக்ட் எடுக்கும்போது இந்த ரோட் வழியாய்ப் போக்குவரத்து நடப்பது தெரிந்து தான் கண்ட்ராக்ட் எடுத்துள்ளார்கள். ஆதலால் இந்த சப்கேட் வேண்டியதில்லை எனப் பொருள்படும்படி கூறினர். பிறகு திரு கோயில்பிள்ளை அவர்களும் சுந்தரமய்யரவர்களும் பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்திற்கு இணங்கி சப்கேட் தேவையில்லை என ஏகோபித்து தீர்மானம் நிறைவேறிற்று.

கம்பவுண்டர்கள் மருத்துவச்சிகள் லீவு அரேஞ்சுமெண்டுகளில் போடுவதற்கு மீ க-க்கு ரூபா ௬௦ சம்பளத்தில் ஒரு ரிசர்வ் கம்பவுண்டரும் ஒரு ரிசர்வு மருத்துவச்சியும் நியமித்து இராமநாதபுரத்திலாவது அல்லது வேறு தகுதியான இடங்களிலாவது வைக்கலாமென புரோபோஸ் செய்துவரலான இராமநாதபுரம் ஜில்லா மெடிகல் ஆபிசரவர்கள் லெட்டர். மேற்படி விஷயமாய் தாலூகா போர்டாரின் அபிப்பிராயம் வாங்கி அனுப்பும்படி வரலான இராமநாதபுரம் ஜில்லா போர்டு பிரசிடெண்டவர்களின் லட்டர்.

கரஸ்பாண்டன்ஸ் செய்து அடுத்த கூட்டத்திற்கு வைக்கலாமென திருவாளர் என். எஸ். வெங்கட்டராமய்யர் யோசனை கூறினர். அப்படியே தீர்மானிக்கப்பட்டது.

தேவகோட்டை எட்வர்டு ஹால் லைப்ரரிக்காக புஸ்தகங்கள் வாங்க கவர்ண்மெண்டு கிராண்டை உபயோகப்படுத்தும் விஷயமாயுள்ள ௬௦-ச-உசும் தேதியுள்ள ௬௦ நிர். தாலூகா போர்டார் தீர்மானமும் லைப்ரரிக்கு புஸ்தகங்கள் வாங்குவதற்கு சாங்கிஷன் செய்யப்பட்ட கவர்ன்மெண்டு கிராண்டுக்கு சமதியாய் தாலூகாபோர்டார் சொந்த பண்டிலிருந்து கொடுக்கவேணும் என்று எழுதிவரலான மதராஸ் கல்வி இலாகா டைரக்டரவர்களுடைய எ-சு-உசும் தேதியுள்ள L Dis No. சகுசகு of உசு லெட்டர்.

கவர்ன்மெண்டு ரூபாய் ஐந்நூறு தந்துள்ளார்கள் அதில் தேவகோட்டை எட்வேர்டு ஹால் லைபேரரிக்கு ரூ. உகுஅ-க்கு புத்தகம் வாங்கியிருப்பதால் நாமும் தாலூக்கா போர்டிலிருந்து ரூ. உகுஅ-க்கு புத்தகங்கள் வாங்கி லைபேரரிக்கு கொடுத்துவிடுவதுடன் கவர்ன்மெண்டுக்கு பாக்கி ரூ. உசுஉ ஐ திருப்பி அனுப்பிவிடுவோம் என திருவாளர் சி. சுந்தரமய்யர் சிபார்சு செய்தார் ஆனல் புத்தகங்கள் ரூ. உகுஅ-க்குத்தான் வாங்கப்பட்டிருக்கிறதென்றும் அதில் பாதி தாலுக்காப்போர்டிலிருந்து ஈடு செய்து கவர்ன்மெண்டுக்கு ரூ. ௬அக ஐ திருப்பிவிடுவதே நியாயமாகுமென்றும் இப்படிச் செய்வதால் ரிவைஸ் பட்ஜெட் போடவேண்டிய சிரமமில்லை என்று திருவாளர்களான என். எஸ். வெங்கிட்டராமய்யர் ம. ரு. சு. சுப்பையா செட்டியார் முதலியோர் அபிப்பிராயப்பட்டனர். ஆனல் மெஜாரிடியரால் திருவாளர் சி. சுந்தரமய்யரின் சிபார்சே ஆதரிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டது. தலைவர் இவை சம்பந்தமாய் மெம்பர்களின் அபிப்பிராயம் கேட்கும்போது சி. சுந்தரமய்யரின் சிபார்சை ஆதரித்தே பேசியதோடு வெளியூர் லைபெரரி விஷயம் அடுத்த தீர்மானத்தில் கவனிக்கப்படுமெனவும் கூறினர்.

ககஉசு-உஎம் வருஷத்தில் லோகல்போர்டார்களால் தங்களுடைய மானேஜ்மெண்டிலிருக்கும் பப்ளிக் லைப்ராரிகளை பரிபாலனம் செய்வதற்கு எவ்வளவு பொருள் வேணும் என்பதற்கு சில கண்டிஷன்களின் பேரில் அப்ளிக்கேஷன் அனுப்பிக்கொள்ளுமாறு வரலான உகு-ச-உசும் தேதியுள்ள சுஅக லா எஜிக்கேஷன் கவர்ன்மெண்டு ஆர்டர்.

தெரிந்தவரையில் காரைக்குடியில் இரண்டு லைபெரரிகள் இருக்கிறதெனவும் தேவகோட்டையில் ஸ்ரீ விவேகானந்த லைபெரரி ஒன்று இருக்கிறதெனவும் இன்னும் சில லைபெரரிகள் இருக்குமெனவும் குறைந்தது ரூ. க௦௦௦ ஒதுக்கிவைக்கவேண்டுமென திருவாளர் என். எஸ். வெங்கிட்டராமய்யர் அபிப்பிராயப்பட்டார். பட்ஜெட்டில் இதற்கு ஒன்றும் காணப்படவில்லை என தலைவர் கூறினர். என். எஸ். வெங்கிட்டராமய்யர் சற்று முன் தேவகோட்டை எட்வேர்டு ஹால் லைபெரரி விடயமாய் வாதம் நடக்கும்போது அடுத்த தீர்மானத்தில் வெளியூர் லைபெரரிகளும் கவனிக்கப்படும் எனச் சொல்லிவிட்டு பட்ஜெட்டில் புரோவிஷன் இல்லையென்பது சரியா எனக் கேட்டார். பிறகு சமாதானமாய் ரூ. உ௱ ஒதுக்கி வைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ககஉசு-உஎ வருஷத்திற்கு பரமக்குடி மாணிக்கம் பிரஸில் அச்சுவேலை செய்வதற்கு இராமநாதபுரம் ஜில்லா போர்டாரால் அப்ரூவ் செய்யப்பட்டிருக்கும் ரேட்டுப்படி இந்தத் தாலூகாபோர்டின் அச்சிடவேண்டியவேலைகளை எடுத்துக்கொள்ள தயாராக இருப்பதாக ஒப்புக்கொண்டு தேவகோட்டை வைசியமித்திரன் பிரஸ் புரோப்ரைட்டரிடமிருந்து வரலான டெண்டர்.

திருவாளர்களான சி. த. நா. ராம. நாராயணன் செட்டியாரவர்களும், என். எஸ். வெங்கிட்டராமய்யரவர்களும் டெண்டர்கள் கேட்டுவிடப்பட்டனவா எனக் கேட்டனர். அதற்குத் தலைவர், இல்லை, தானாக வந்தது ஒரு அப்ளிகேஷன்தான் என பதிலிறுத்தார். வேறு பிரசுகளிடமிருந்து டெண்டர்கள் கேட்டுவிடப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

கொக்கறகோ!

ஞானதிருஷ்டி "சித்த" பயிற்சியால் வியாதிகள்
தந்தி தபால் மார்க்கம் சொஸ்தம்.

குறிப்பு:—பெயர், வயது, வியாதிகளை தந்திமார்க்கம் தெரிவிக்கவும்.
உடனே சொஸ்தம். பதில் தந்தி கட்டவேண்டும்.
தபால்மூலமாயும் தெரிவிக்கலாம்.

Address:—
MURUGANILAI,
Palani.

விலாசம்:—
"முருகநிலை"
பழனி.

ஓர் நல்ல சமயம். கைவிடாதீர்கள்.

இன்றே வாங்குங்கள். **விற்பனைக்குத் தயார்.** விலை சரசம்.

(1) ஓர் அழகிய ஓட்டுவீடும் (2) நஞ்சை நிலமும் புதுக்கோட்டை ஸ்டேட் டவுன் தெற்கு மூன்றும் வீதியில் யூனியன் 378 நிர். உள்ள புதுக்கட்டிடம்.

1. இது வாசத்திற்கு மிகுந்த தகுதியுடையது. நல்ல இடத்தில் எதற்கும் சவுசரியமாக ஊர் மத்தியில் அழகாகவும் நல்ல காற்றோட்டமுள்ளதாகவும் தண்ணீர் சவுக்கியத்துடனும் அமைந்துள்ளது. தனவந்தர்கட்கேற்ற தன்மை உடையது. பங்களாவுக்கு ஏற்றது. பக்கங்களில் மிகுந்த செல்வவான்களின் வீடுகள் நிறைந்துள்ளன. கடைவீதி, கோர்ட்டுகள், சந்தைப்பேட்டை, மார்க்கெட்டு, வைத்தியசாலை முதலிய இடங்களுக்கு மத்தியிலும் சமீபத்திலும் இருக்கிறது.

2. ஷை டவுனுக்கருகில் தாசினிப்பட்டியில் நல்ல விளைவுடன் கூடிய சுமார் குழி உ௦௦௦ உள்ள நஞ்சை நிலம் உள்ளது. நன்றாய்ப் பலன்கொடுப்பது என்பது திண்ணம். நீர்வளமுள்ளது.

இவ்விரண்டு சொத்துக்களையும் நேரில் பார்த்தவர்கள் ஒருபோதும் கைவிடார்.

இவ்விரண்டு சொத்துக்களை வாங்க விருப்பமுள்ளவர்கள் "சி. கே. ஊச்சப்பா அனுமந்தப்பா" காரைக்குடி என்ற விலாசத்துக்கெழுதித் தெரிந்துகொள்ளலாம்.

"இரட்டையாட்சி" ஒழிய

ஸ்ரீமான் ஜே. ஏ. ஸ்பெண்டர் என்ற கீர்த்திபெற்ற பத்திராசிரியர் "வெஸ்ட்மினிஸ்டர் கஜட்" என்ற பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் சில பகுதிகளை இங்கு பிரசுரிக்கின்றோம் (ப-ர்);-

இந்திய அரசாங்கத்தாரும் இந்திய அரசியல் வாதிகளும் ஒரு முடிச்சுக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என எனக்குத் தோன்றுகின்றது. அந்த முடிச்சை விரைவில் அவிழ்த்துவிடவேண்டும். ககஉகூ-ம் ஆண்டு என்பது ஒரு போராட்டக் குறியாகி விட்டது. அந்த ஆண்டிலேதான் சீர்திருத்தங்கள் மீண்டும் கவனிக்கப்படும் என்று அரசாங்கத்தார்கள் கூறுகின்றார்கள். அதற்கு மாறாக இந்திய அரசியல் வாதிகள் கிளர்ச்சி செய்கிறார்கள். இந்தத்தேதியைப்பற்றி தேவையேயில்லை. சில நிபந்தனைகளைக் குறிப்பிட்டு, சீர்திருத்தங்கள் வழங்கப்படும் என்று அரசாங்கத்தாரே கூறுகின்றார்கள். மட்டிமன்யாதாஸ்துப் பிரகாரம், அந்தத்தேதி காயமாகக் கருதப்படுகிறது. இந்தியர்கள் "நல்ல தன்மை" காண்பித்தால், மேமேல செல்லுவோம் என்று யாதாஸ்து கூறுகின்றது.

எனவே, இருகட்சிக்காரர்களும் சக்கரத்தைச் சுற்றிச் சுற்றி வருகின்றார்கள். "நீங்கள் ஒத்துழைத்தால், நாங்கள் மேலே செல்லுவோம்" என்று அரசாங்கத்தார் கூறுகின்றார்கள். "உங்கள் மனம் மாற்றமடைந்தால், நாங்கள் ஒத்துழைப்போம்" என்று இந்தியர்கள் சொல்லிவருகின்றார்கள். இது இருதிறத்தாரின் அகம்பாவத்தையும் வளர்க்கிறது. இதனால் இருதிறத்தாருக்கும் கோபம் மூளப்பெறுகின்றது. தான் குழந்தையாகக் கருதப்படுவதாக இந்தியன் எண்ணுகிறான். "சீர்திருத்தம் இனும் அல்ல; அது தனது பிறப்புரிமை" என்றும், "ஒத்துழைப் புச்சாக்கை வைத்துக்கொண்டு, அரசாங்கத்தார் இந்தியர்களின் சரணாகதியை வேண்டுகின்றார்கள்" என்றும் அவன் கருதுகிறான். நிலை இவ்வாறு மூன்று வருஷகாலம் போய்க்கொண்டிருந்தால், இருதிறத்தாராலும் இறுதியில் விவேகம் பொருந்திய காரியம் எதுவும் செய்யமுடியாது.

ககூஉகூ-ம் வருஷத்தைப் பற்றிய பேச்சு ஒழியவேண்டும். அப்பொழுதுதான் சீர்திருத்தத்தைப்பற்றி யோசிக்கப்படும் என்ற தடைகள் எடுபடவேண்டும். அரசியல் அமைப்பு எப்பொழுது குறை கொண்டதாகக் காணப்படுகின்றதோ, அப்பொழுதே அதைத் திருத்தியமைக்க வேண்டும்.

இந்தியாவில் புதிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அந்த நிலைமைக்கு ஏற்றவாறு வினையாற்ற, இந்திய அரசியல் அமைக்குப் போதிய வசதியில்லை என்று நான் உறுதியாகக் கூறுவேன். இதனால், இந்திய அதிகார வருககத்தினரின் பேரில் நான் பழி சுமத்தினதாக ஆகாது. இந்திய அரசாங்கத்தைச் சார்ந்த அதிகாரிகள் இருவித வேலைகள் செய்யவேண்டியிருக்கிறது. பிரசாரம், அரசியல் நிர்வாகம். ஒன்றைச் செய்யும் பொழுது, மற்றதற்குப் பாதகம் உண்டாகின்றது.

இரட்டையாட்சி முறையை ஒழித்துவிட வேண்டுமென்றும் தகுதியுள்ளவர்களுக்கு எல்லா உத்தியோகங்களையும் கொடுக்கவேண்டும் என்றும் நான் யோசனை கூறுவேன். அரசாங்கத்தை எதிர்ப்பது மட்டும் தங்கள் வேலையெனக் கொண்டிருக்கும் இந்திய அரசியல் வாதிகளை, அரசியல் நிருவாகத்தில் நுழைத்து, நிருவாகத்தின் கஷ்டத்தை அவர்கள் உணரும்படி செய்யவேண்டும். இந்த முடிவுக்கான வேறு வழிகளையும் கருவிகளையும் காணவேண்டும்.

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

பட்டங்களைப் பற்றிய வாதம்.

சென்னை மகாஜனசபை மண்டபத்தில் செவ்வாயன்று (29-6-26) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்தசமயம் ஸ்ரீமான் எஸ். சீனிவாஸய்யங்கார் அவர்கள் தலைமை வகித்தார். தேர்தலில் காங்கிரசின் சார்பாக அபேட்சகர்களாக நிற்பவர்கள் தங்கள்பட்டங்களைத் துறப்பதா, இல்லையா என்ற கேள்வி, பலமாக வாதிக்கப்பெற்றது. பட்டங்களைத் துறக்குமாறு அபேட்சகர்களை வேண்டிக்கொள்ளுவது என்ற தீர்மானம் இறுதியில் நிறைவேறிற்று.

ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் பின்வரும் தீர்மானத்தைப் பிரேரேபித்தார்:—

"காங்கிரசினால் நியமனம் செய்யப்பெற்றிருக்கும் அபேட்சகர்கள் யாவரும் உடனே தங்கள் பட்டங்களைத்—ஏதேனுமிருந்தால்—துறந்து, நியமன மூலமாய்க் கிடைத்திருக்கும்—கிடைத்திருந்தால்—தங்கள் ஸ்தல ஸ்தாபன ஸ்தானங்களைக் காலி செய்யும்படிக்கும் எல்லாக் காங்கிரஸ்காரர்களும் எப்பொழுதும் கதர் உடுத்தும்படிக்கும் இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது." (கட்டளை யிடுகிறது என்ற தொனிப் பொருள், தீர்மானத்தின் ஆங்கிலச் சொற்களில் உண்டு.—ப-ர்.)

தீர்மானத்தைப் பிரேரேபித்த ஸ்ரீமன் முதலியார் அவர்கள் பேசியதன் சாரம்:—ஒத்துழையாமையின் கொள்கைகளின் நலனைக் கருதி, காங்கிரஸ் அபேட்சகர்கள் இந்தக் கொள்கைகளை ஒட்டி நடக்கவேண்டும். கொள்கைகளைத் துறந்து, பட்டங்களுடன் இவர்கள் ஒட்டிக் கொண்டால், நோக்கம் பலிக்காது. மேலும், காங்கிரஸ் அபேட்சகர்களை அவர்களுடைய எதிரிகள் வரும் தேர்தலில் தாக்க இது இடம் தரும்.

ஸ்ரீமான் சொக்கலிங்கம் பிள்ளை அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஆமோதித்தார். ஸ்ரீமான் சிங்காரவேலு செட்டியார் அவர்கள் அவர்கள் இதை ஆதரித்தார்கள்.

ஒரு திருத்தம்.

ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் கீழ்க்காணும் திருத்தத்தைப் பிரேரேபித்தார்.

"பட்ட பகிஷ்காரம் காங்கிரசின் தற்போதையத் திட்டத்தில், வலியுறுத்தப்படவில்லை என்பதை இக்கூட்டம் உணர்ந்திருந்தும், இந்தக் கூட்டத்தார், காங்கிரசின் நலனையும் அதற்கு நாட்டிலிருக்கும் செல்வாக்கையும் கருதி, தங்கள் பட்டங்களைத் துறக்குமாறு, அபேட்சகர்களைவேண்டிக் கொள்ளுகிறார்கள். இனி, காங்கிரஸ்காரர்கள் அரசாங்க பட்டங்களையும் நியமனப்பதவிகளையும் ஏற்கலாகாதென்றும் எப்பொழுதும் காங்கிரஸ்காரர்கள் கதர் உடுத்த வேண்டும் எனவும் கட்டளை யிடுமாறு, இக்கூட்டம், அகில இந்திய வேலைக்கமிட்டியை வேண்டிக்கொள்ளுகிறது".

திருத்தத்தைப் பிரேரேபித்த ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் பேச்சின் சாரம்:—பட்ட பகிஷ்காரத்தை வலியுறுத்த தற்போதைய நிலைமையில் காங்கிரசு கமிட்டிக்கு அதிகாரமில்லை. நேர்மையாக நல்லுறவு கொண்டு காங்கிரஸ் வேலை செய்யவேண்டுமானல், காங்கிரஸ்காரர்களிற் பெரும் பான்மையோரை நம்முடன்கூட இட்டுச்செல்லவேண்டும். எனவே இத்திருத்தத்தை ஏற்குமாறு ஸ்ரீமான் முதலியார் அவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

திருத்தத்தை ஜனப் ஷபி மகம்மது ஆமோதித்தார்.

இதைப்பற்றி சிறிது நேரம் வாதம் நடந்தது. இறுதியில் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் திருத்தத்தை ஒப்புக்கொண்டு கூறியதாவது:—"என்னுடைய நோக்கத்தைக்கொண்டவர்களுக்கு; பட்ட பகிஷ்கார பிரசாரம் செய்ய பூரண சுதந்திரம் அளிக்கப்படவேண்டும். இந்தக் குறிப்புடன், நான் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுகிறேன்."

ஸ்ரீமான் சீனிவாஸய்யங்கார்:—அவர்கள் பிரசாரம் செய்வதில் யாதொரு ஆட்சேபமும் இல்லை. ஆனல் இந்தப் பிரசாரத்தினல் காங்கிரஸ் அபேட்சகர்களுக்குத் தேர்தலில் தோல்வி வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

திருத்தம் கூட்டத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஸ்ரீமான் நாயக்கரின் நிலைமை.

ஸ்ரீமான் ராமஸ்வாமி நாயக்கர் அவர்களின் நிலைமை மாறியதாகக் கூறப்படுவதைப்பற்றி விசாரித்து யாதாஸ்து எழுதியனுப்புமாறு ஒரு கமிட்டியை நியமனம் செய்து, ஒரு தீர்மானம் நிறைவேறிற்று.

"ஸ்ரீமான் நாயக்கர் நிலை மாறியது தெளிவு; அது அவருடைய பிரசங்கங்களினின்றும் எழுத்துகளினின்றும் நன்றாகத் தெரியவருகின்றது. எனவே விசாரிக்க கமிட்டி தேவையில்லை" என அங்கத்தினர்களிற் சிலர் கூறினார்கள். ஆனல் பெரும்பான்மையோர் கமிட்டி வேண்டுமென்றார்கள். இறுதியில் தீர்மானம் நிறைவேறிற்று.

பிரசார வேலை.

காங்கிரசின் சார்பாகப் பிரசாரவேலை செய்ய, கிழ்க்காணும் அங்கத்தினர்கள் கொண்ட சபை ஒன்று நியமனம் செய்யப்பெற்றது. அங்கத்தினர்கள் (க) எஸ். ஸத்தியமூர்த்தி (உ) எம். கே. ஆச்சார்யா (ந) எம். பக்தவத்ஸலு (ச) டி. கே. பாவலர் (ரு) எம். சிங்காரவேலு செட்டியார்.

பொது மேற்பார்வை வேலை செய்ய மற்றொரு கமிட்டி நியமனம் செய்யப்பெற்றது.

ஸ்ரீமான் சத்திய மூர்த்தி அவர்களின் பிரேரேணையின் பேரில், கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறிற்று.

"காங்கிரசால் தேர்ந்தெடுக்கப்பெற்ற அபேட்சகர்கள் யாவரும் எல்லா இடங்களிலும் சேர்ந்து தேர்தல் வேலை (பிரசாரம் முதலியவை) செய்யும்படிக்கும் காங்கிரஸ் அமைப்புகளின் மூலமாய் அவ்வேலையைச் செய்யும்படிக்கும் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்."

ஆதித்திராவிடர்களுக்கு கிணறுகள்

மாம்பலத்திலும் பாலையூரிலும் ஆதித்திராவிடர்களுக்குக் கிணறுகள் வெட்ட, ஊருக்கு ரூ. 200 வீதம் கொடுக்கப்பட்டது. டாக்டர் வரதராஜுலு நாயுடுவை, அவருடைய ராஜீநாமாவை வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதாகவும் ஆதித்திராவிடப் பிரசாரகர்களை நியமிப்பதாகவும் தீர்மானம் செய்யப்பெற்றது.

செங்கற்பட்டு, தஞ்சை, திருச்சி, மதுரை, கோயமுத்தூர், திருநெல்வேலி, சென்னை ஜில்லாக்களில் தேர்தல் பிரசாரவேலை செய்யவும் அதை மேற்பார்க்கவும் கமிட்டிகள் நியமிக்கப்பட்டன.

கூட்டம் கலைந்தது.

"ஹிந்து"

சில குறிப்புகள்.

ஜப்பானிய மொழியில் இந்தியச் சொற்கள்.

இந்தியாவிலிருந்து ஜப்பானியர்கள் எடுத்துக் கையாண்டுவரும் சில சொற்களை ஸ்ரீமான் ஜே. தாகாகூசு என்பவர் "யங் ஈஸ்டு" பத்திரிகையில், விளக்கிக் காட்டுகின்றார் உதாரணமாக:—

ஜப்பானுக்குப் புதிதாய் வரும் அன்னியர்கள் ஒரு சொல்லைக் கேட்பார்கள். அதை ரிக்ஷா கூலிகள், வியாபாரிகள், கீழ் வகுப்பார்கள், ஜப்பானில் சாதாரணமாக உபயோகித்து வருகிறார்கள். "தன்ன" என்பது அந்தச் சொல்லாகும். இந்தச் சொல் இந்திய வார்த்தையாகிய "தனபதி" (வள்ளல்) யின் சிதைவாகும். இந்தியாவில் "சாகிப்" எஜமானன் என்ற சொற்கள் எந்தப் பொருளில்வழங்கப்பெறுகின்றனவோ, அதே அர்த்தத்தில் "தன்ன" என்ற சொல் ஜப்பானில் வழங்கப்பெறுகின்றது.

புத்த கோயில்களுக்குக் கொடுக்கப் பெறும் நன்கொடைக்கு "தஷ்ஷின்" என்று பெயர். இது இந்திய "தட்சிணை" என்ற சொல்லின் சிதைவு.

புத்த கோயில்களுக்கு அல்லது ஷிண்டோ ஆலயங்களுக்குத் தொழச் செல்லும் ஜப்பானியர்கள் வணங்கும் பொழுது "நமோ" என்கிறார்கள். (இந்தியாவில் "நமோ" என்றால் வணக்கம்" என்று பொருள்.)

புத்தக் கோயிலுக்கு ஜப்பானில் "டோா" என்று பெயர். பாலிச் சொல்லாகிய "தோா" (முடியது) வினின்றும் ஜப்பான் "டோா" வந்ததாகும்.

ஹிந்துமுஸ்லீம் ஒற்றுமை.

அமெரிக்கா "கரெண்ட் ஹிஸ்டரி மாகஸின்" என்ற பத்திரிகை. ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப்பற்றி பின்வருமாறு எழுதுகின்றது:—

நிலைமை இன்னும் மீறிப்போகவில்லை. அன்னியர்களான ஆங்கிலேயர்களிடம் தங்களுக்கு இருப்பதைக் காட்டிலும் ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பரஸ்பரம் ஒற்றுமை அம்சங்கள் பல இருக்கின்றன என்று ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆச்சாரியர் நார்மன் பிரௌன் அவர்கள் கூறுகின்றார். அது உண்மையென நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

தற்போது இவர்களுக்குள் முரட்டுத்தனமும் பகைமையும் இருப்பினும், ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே அடிப்படையான வேற்றுமைகள் இல்லை. மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் அவர்கள் ஒன்று சேர்ந்ததுபோல, விரைவில் அவர்கள் ஒன்று சேர்ந்து, பிளவில்லாத ஒரே சமூகத்தாராக ஆகவேண்டும். கொடுமைகொண்டு பரஸ்பரம் தாக்கிக்கொள்ளுவதால் அவர்களுடைய மயக்கம் தெளிந்து, தாங்கள் இருவரும் தற்கொலை செய்துகொள்ளுவது தவறானது என்பதை உணர்ந்துகொண்டு, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் இணைந்து கொள்ளப்போகின்றார்கள். இதைத்தவிர, அவர்களுக்கு வேறு வகையான போக்கே கிடையாது. மூடபக்தி, சகோதரர்களுக்குள் சண்டை என்ற நாய்கள் அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. இவைகளைக் கண்டு நாம் வருந்தினலும், இவைகளின் போக்கை ஆவலுடன் நாம் கவனித்து வருவோம்.

வெளியாகிவிட்டது ! வெளியாகிவிட்டது !!

ஊழியன் அட்சய ஆண்டுத் தினசரி !

எந்த ஆண்டைக்காட்டிலும் இவ்வாண்டு கண்கவர் வனப்புடன் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. முகப்பில் பாரதமாதா படம் அலங்கரித்து நிற்கின்றது. வேண்டுவோர் விரைவில் முந்துக. விலை [illegible] க. தபாற்கூலி வேறு.

காரியஸ்தர்,
வள்ளுவர் நிலையம், காரைக்குடி.

விளம்பரம்.

என்னுடைய ஸ்வீகார அவிபக்தபிதா ஆத்தங்குடி முத்துப்பட்டணம் மகா-ள-ள-ஸ்ரீ அள. பெரி. பெரியகருப்பன் செட்டியார் அவர்கள் சிலகாலமாக என்னுடன் மனஸ்தாபப்பட்டுக்கொண்டு வீணான நடபடிக்கைகள் நடத்திவருகிறார். யாவற்று ஸ்தாவர ஜங்கம சொத்துக்களும் வியாபாரமும் ரொக்கம் நிலுவைகள் உசையரு யாவத்து சொத்துக்களும் எங்களுக்கும் என்னுடைய அவிபக்த குமாரன் மைனர் கோவிந்தன் என்ற பெரியகருப்பனுக்கும் பொதுக்குடும்ப பாத்தியமானது. சிலர்களுடைய துர்ப்போதனையின்பேரில் என் தகப்பனார் வேறு ஒரு ஸ்வீகாரம் செய்துகொள்ளவேணுமென்று பிரயத்தனப்படுகிறதாகத் தெரிகிறது. சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் வழக்கப்படிக்கும் அவருக்கு அவ்விதம் ஸ்வீகாரம்செய்து கொள்ள பாத்தியமில்லை. அவ்விதம் ஸ்வீகாரம் என்று என் தகப்பனார் செய்து கொள்ளும்பக்ஷத்தில் அவ்விதம் பத்திரன் என்று வருகிறவருக்கு அவ்விதமான யாதொரு ஸ்டேடஸும் சொத்தில் யாதொரு பாத்தியமும் ஏற்படமாட்டாது என்பதை இதன்மூலம் யாவருக்கும் தெரிவிக்கலாயிற்று.

அழ. பெரி. அழகப்ப செட்டி (யார்.)
23—6—26.

ஸ்ரீ கௌரி பானம்ருதம்.

காப்பிக்குப்பதிலாக உபயோகிப்பது. நம்தேசத்து மூலிகைகளின் கிழங்குகள், வித்துகள், புஷ்பங்களால் தயாரிக்கப் பெற்றது. காப்பியைப்போலவே ருசியும் மணமும் உள்ளது. ஒருமுறை உபயோகித்தவர்கள், மேலும்மேலும் உபயோகிக்கவிரும்புவார்கள்.

இதன் அரிய குணங்கள்.

இரத்தசுத்தி, பித்தசாந்தி, உஷ்ணசாந்தி, உண்டாக்கி மலச்சிக்கலை நீக்கி பசிதீபனத்தைக்கொடுக்கும். ஞாபகசக்தி ஆரோக்கியம் இவைகளை விருத்திசெய்யும். கணைச்சூடு, மூலச்சூடு, பித்தஎரிச்சல், வாந்தி, மயக்கம், மேக வெட்டை, நீரிழிவு இவைகள் நீங்கும். டின் ஒன்றுக்கு விலை அணா அ. டஜன் ஒன்றுக்குவிலை ரூ. ௫—௧௨—0 வி. பி. சார்ஜ்பிரத்தியேகம். விலாசம்:—

டாக்டர் வி. ஆர். சுந்தரம்,
ஆயுர்வேத வைத்திய மந்திரம், பைகிராப்ட்ஸ் ரோட், ராயப்பேட்டை, சென்னை.

காரைக்குடி ஸ்ரீமீனாக்ஷி சினிமா கம்பெனியாரால்

எந்த ஊர்களுக்கும் கோவில்களின் உத்ஸவங்கள் கல்யாணம் புதுமை முதலிய விசேஷங்களுக்கும் டெம்பரெரியாக எலக்டிரிக் லைட்டுகள் சப்ளை செய்யப்படும்.

தேவையுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்துக்கு தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

N. சிவராம பிள்ளை, புரோப்ரைட்டர்.
ஸ்ரீ மீனாக்ஷி சினிமா, காரைக்குடி.

கவனியுங்கள்.

டிரேட் மார்க்

நம்முடைய நிசவுசாலையில் தற்கால நாகரீகத்துக்குரியதும், நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் உபயோகிக்கக்கூடியதும் நாணயத்திலும் நிசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான டைமன் 3-முழம் முதல் 6-முழம் வரையில் சாதா துண்டுகளும் ஜரிகைகுறி துண்டுகளும் பலவிதமான டவல்களும் ஷர்ட்டிங் பீஸ்களும் வெள்ளை 100-நெ. முதல் 200 நெ. வரயில் துப்பட்டாவகையறுக்களும் பலகலர் ஜரிகை [illegible]களும் விலை சரசமாய் கிடைக்கும். வேண்டியவர்கள் அடியில் கண்ட விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

M. ராமநாதன் & பிரதர்ஸ்,
Weaving Factory, நிசவுசாலை
நறசிங்கன் பேட்டை,
S. I. R. Tanjore Dist.

லக்ஷ்மி கடாக்ஷம்.

திரிமூர்த்திகளில் முக்கியமான மஹாவிஷ்ணுவின் பத்தினியும் சக்தியுமாக விளங்கும் ஸ்ரீ மஹாலக்ஷ்மியே யக்பதேவதையென்றும் அவளுடைய கடாக்ஷ வீக்ஷண்யத்தால் கிடைக்காதது பதினன்கு உலகங்களிலும் கிடையாதென்றும் நமது ஹிந்து மதத்தின் கொள்கை.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி கவசம் (தாயத்து.)

அபூர்வ சக்திவாய்ந்த இக்கவசம் சாஸ்திரயுக்தமாகத் தயார்செய்யப்பட்டு விசேஷமான பலன்கள் வெகு சீக்கிரத்தில் இதையணிந்துகொள்கிறவர்களுக்கு நிச்சமாய்த் தரக்கூடியது. ஆச்சரியமான காரியசித்தியும் விசேஷ திரவியலாபமும், பிரபுக்கள் நேசமும், வியாபார விருத்தியும் உண்டாகும். சர்வசாமான்யமாயுள்ள ஒருவன் மேலானபதவியிலுள்ள ஐஸ்வரியவான்களுடைய அந்தஸ்தும் வாழ்வும் அவசியம் அடையக்கூடும். நியாயஸ்தலங்களில் அனுகூலமும் பரீக்ஷையில் ஜயமும் உத்தியோக உயர்வும் உண்டாகும் ஒருவனுடைய வாழ்நாளில் மேற்படக்கூடிய எல்லாவித ஆபத்துக்களையும் நீக்கி கௌரவம் மரியாதை சந்தோஷமும் ஏற்படும். விரோதிகளால் எவ்விதமான இடைஞ்சல் யேற்படாமல் தடுக்கும். நீடித்த காலமாய் வியாதியும் சிநேகிதர்களோடும் பந்துக்களோடும் மனஸ்தாபங்கள் உண்டாவதும் சதா வியாஜ்யங்களிலேயே மூழ்கிக் கிடப்பதும் வியாபாரத்தில் நஷ்டமும் தாங்கமுடியாத விசனமும் பண நெருக்கடியும், நிலைமை க்ஷீணித்துக் கொண்டுவருவதும், ஓயாதகவலை அனுவசியமான சண்டைகள் சேகரித்துவைத்த பொருளுக்கு நஷ்டம் ஏற்படுவதும் கடனாளியாவதும் மற்றுமிப்பேர்ப்பட்ட கிரக தோஷங்களெல்லாம் அத்யாச்சரியமாய் நிவர்த்திசெய்யக்கூடியது. யந்திரசாஸ்திரத்திலேயே இந்த மஹாலக்ஷ்மி கவசம் ஒரு உயர்ந்த ரத்தினத்தைப்போலுள்ளது.

ஒரு முக்கிய விஷயத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருப்போரும் நெருக்கடியான சமயத்தில் கலக்கப்பட்டிருப்போரும் இதனல் சர்வோத்தமமான பலன்கள் அவசியம் அடைவார்கள்.

மஹா பரிசுத்தமும் அற்புத சக்தியும் வாய்ந்த இச்சிறந்த கவசம் பாலர் புருஷர்கள் ஸ்திரீகள் எல்லோரும் அவசியம் அணியவேண்டியதே. ஸ்ரீமஹாலக்ஷ்மி சதாசர்வகாலமும் அவர்களிடையே சர்வ மங்களகாமாய் வாசமாயிருப்பது நிச்சயம்.

இந்த சாஸ்திரத்தில் மதிப்பும் நம்பிக்கையுமுள்ள சர்வஜனங்களும் பிரமிக்கத்தக்க இதன் சக்தியை பரிக்ஷை செய்துபார்க்கட்டும் உடனே சுப சகுனங்கள் ஏற்படும். பலனில்லையென்போருக்கு பணம் வாபஸ் செய்யப்படும்.

உலக வாழ்க்கையில் உங்களுக்கு உண்மையானவெற்றியும் லக்ஷ்மி கடாக்ஷமும் இதனல் உண்டாவது நிச்சயம்.

வெள்ளிக் கவசம் ரூ. 2—6—0 தங்கக் கவசம் ரூ. 10—0—0 வி. பி. தபால் செலவு வேறு.

Sri Mahalakshmi Nikethanam,
SALEM.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி நிகேதனம்,
சேலம்.

வள்ளுவர் நிலையம், காரைக்குடி.

சாமான் நயம். விலை சரசம்.

உயர்ந்த காகிதங்கள், அழகிய பலவர்ணக் கார்டுகள், பவுண்டன் பேனுக்கள்,
இன்னும் பல ஸ்டேஷனரி சாமான்கள் நயமானதாய்
எங்களிடம் வாங்கலாம்.

பல அறிஞர்களால் வெளியிடப்பட்ட தமிழ்ப் புத்தகங்களும், குறிப்புப்
பேரேடு நோட்டுப் புத்தகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

பிக்பென் கெடிகாரம், பாட்ரியுடன் எலெக்ட்ரிக் விளக்கு, தனியாக பாட்ரி,
பல்ப்முதலியனவும்; கில்லட்டி ரேசர், சோப், வாஸ்லைன், சீப்புமுதலியனவும்,
பொத்தான், தலைபின் ஊகிற நாடா, உல்நூல் முதலியனவும் எங்களிடம் உண்டு.
நயமான பலவித பாட்மிண்டன் பாட்டுகள், பந்துகள்,
வரவழைத்து வைத்திருக்கிறோம்.

இந்தியாவில் செய்யப்பட்ட அழகிய கிளாஸ் ஜாடிகள், செம்புகள் விளக்குகளுக்கு வேண்டிய பலவித கிளாஸ்கள், போகணிகள் இன்னும் பல விதமான சாமான், குழந்தைகளுக்கு வேண்டிய அழகிய விளையாட்டுச் சாமான்கள், பொம்மைகள் அதிகமாய் வந்திருக்கிறது. பலவித அழகிய குடைகள், பல அளவில் மிதியடிக்கட்டைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வருக்கும் அவசியம் வேண்டிய ருக்மணி குக்கர் பல சைசில் தயாராகவிருக்கிறது. வேண்டுவோர் எழுதுக.

காரியஸ்தர்,
வள்ளுவர் நிலையம், காரைக்குடி.

யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி
(லிமிடெட்.)

தலைமை ஆபீஸ்—மதராஸ்.
ஸ்தாபனம் 1906-ம் ௵.
சென்னைமாகாணத்திலுள்ள லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி. இதுவே,
அக்கிராசனர் :—
ஸர். எம். ஸி. டி. முத்தைய்யா செட்டியார் K. T., M. L. A.
சமீபத்தில் 5-வருஷத்திற்கென்று விநியோகிக்கப்பட்ட
போனஸ் அஷ்யூரென்ஸ் தொகை ரூ. 1000-க்கு ரூ. 75.
ப்ரிமியம் மிதமானது நிபந்தனைகள்—சுலபமானவை.
கிரேஸ் டயம் கொடுப்பதை ஒத்திவைப்பது—இதில் ஓர் விசேஷம்.
பாத்யதைகளை உடனே கவனிப்பது—ஓர் முக்கிய அம்ஸமாகும்.

"இந்தியாவிலே மிகவும் உறுதியானதும், பணத்தை யுடையதும், மேலான நிர்வாகத்திறமையுடையதும் மிகச் சிக்கனத்துடன் கூடியதுமான கம்பெனிகளில் இதுவுமொன்று. லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனிகளில் முதன்மையானவற்றில் இது ஒன்றாகும்" என்று "பார்வார்டு" வருஷ அனுபந்தப் பிரசுரத்தில் காணப்படுகிறது.

விவரங்களுக்கு அடியிற் கண்டவருக்கு எழுதவும் :—

எம். ராமமூர்த்தி, சீப் ஏஜெண்டு,
ராமநாதபுரம் அண்டு புதுக்கோட்டை,
காரைக்குடி.

மானேஜர் :—
K. S. கோபாலய்யா.

USE ALWAYS
KUDUMBANJAN
BEST PAIN CURE
AS. 0-8-0 PER BOTTLE

ஸ்ரீ மஹா பிருகு
ஸம்ஹிதை

இது ஒரு நாடி ஜோதிஷம். ஜனனம் [முத]ல் ஆயுள் முழுதும் உள்ள பலன்களை [ஸ]ம்ஸ்கிருத ஸ்லோக ரூபமாக சொல்லி[யி]ருக்கிறது. இதன்படி ஜாதகம் தமிழ் [அ]ர்த்தத்துடன் எழுதிக்கொடுக்க ரூ. 3 [மே]ற்படி பல ஸ்லோகங்கள் மட்டும் [எ]ழுத ரூ. 2 ஜாதககல் அனுப்பவும்:
[ஸ்ரீ] கிருஷ்ணவிலாச ஜோதிஷசாலை
மோகனூர் (Via) கரூர் S. I. R.

எதிர்பார்த்திருந்தது வந்துவிட்டது.
2-வது பதிப்பு அழகியபடத்துடன்
மல்லேச்சுரம் பொய்கை கோலை.
விலை அணா 12.
ராஜாமணி புக்டிப்போ
17 [illegible]

காந்தி பிள்ளைத் தமிழ்.

கலிகோ பயிண்டு ரூ. க ராப்பர் பயிண்டு அணா ௧௦

வள்ளுவர் நிலையம், காரைக்குடி.

ஆங்கிலம் கற்றுக்கொள்ள விரும்பும் அன்பர்களே !
நீங்கள் எளிதில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டுமானல் எமது

ஆனந்த ஆங்கில பாஷா போதினி.

என்னும் நூலை உடனே வரவழைத்துப் படியுங்கள்.
இது 64-பக்கமுள்ள அழகிய முழு கலிகோ பைண்டுள்ளது.
பாரதக் கதைகளும் துரோபதை சுயம்வர ஆப்டோன் படமும் உள்ளது. விலை ரூபாய் 2 தான்.
ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு ரூபாய் 1-8-0

(தமிழ் தெரிந்தவர்கள் அதி சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ளலாம்; ஆசிரியர் தேவையில்லை; பணச்செலவு அதிகமில்லை, இதற்கு முன் பல ஆங்கில போதினிகள் வெளிவந்திருப்பினும் அவை இதற்கிணையாகமாட்டா.)

TRADE MARK

இது இங்கிலீஷ் பாஷையை எவர்க்கும் எளிதில் போதிக்கும் அரிய நூல். இதுவரை வெளிவராத நூதன பாடமுறைகளுடன் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனைப் படிப்பவர் எந்த ஆசிரியருடைய உதவியுமின்றிச் சில தினங்களில் ஆங்கில பாஷையில் தேர்ச்சியடைந்து நன்றாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் தெரிந்து கொள்ளலாம். கிராம முனிசிப்களுக்கும், மணியக்காரர், கர்ணம் முதலிய கிராம உத்தியோகஸ்தர்களுக்கும், பட்லர்களுக்கும், சிலோன், பினங், சிங்கப்பூர் முதலிய விடங்களிலுள்ள தோட்டங்களின் கங்காணிமார்களுக்கும், இங்கிலீஷ் தெரிந்துகொள்ள விரும்பும் மற்ற எல்லோருக்கும் இது மிக்க அவசியமான புத்தகம்.

இப்புத்தகமும் இன்னும் எங்கள் பஞ்சாங்கமும், இதர புத்தகங்களும் எல்லா ஊர்களிலுமுள்ள புத்தக வியாபாரிகளிடத்திலும் விலைக்குக் கிடைக்கும்.

விலாசம்:— ஆனந்தபோதினி ஆபீஸ்,
6, வெங்கடேச நேஸ்திரீ தெரு, மதராஸ்.

ஸ்திரீகளுக்குள்ள சகல
கஷ்டங்களேயும்
நிவர்த்திப்பது எது?
கேஸரியின்

"லோத்ரா"

ஆனல் அவர்கள் என்ன
சோல்லுகிறர்கள்?

ஸ்ரீமதி மிஸர்ஸ் கர்த்தா எழுதுகிறர். "நான் கO-வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ருது சூலே வயிற்றுவலி கேஸரியின் லோத்ராவை உபயோகித்த பிறகு அத்யாச்சர்யமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி மிஸ். கோபால பணிக்கர் எழுதுவதாவது. "லோத்ராவின் உபயோகத்தால் நானும் என் சகோதரியும் ருது சூலே கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்."

இது எங்கு கிடைக்கும்?
எல்லா மருந்து ஷாப்புகளிலும்,

கேசரிகுடீரம்,
ஆயுர்வேத ஔஷதசாலே,
எழும்பூர், மதருஸ்.
என்னுமிடத்திலும் கிடைக்கும்.

அதிக பொருள் செலவின்றி, உபாத்தியாயர் உதவியுமின்றி, தானகவே அதிக பிரயாசையின்றி ஆங்கிலம் கற்றுக்கொள்ளக்கூடிய அரிய புத்தகம்.

இங்கிலீஷ் படிக்க ஆவலுடன் இருக்கும் அன்பர்களே! ஏன் கவலேப் படுகிறீர்கள்.
உங்களுக்குச் சுலபமாகவும், விரைவிலும் சுயமாகவும், பிறர்உதவிஇல்லாமலும், நன்றகஆங்கிலம் சற்பிக்கக்கூடியது.

20,000 ஜனங்களுக்கு ஆங்கிலம் விரைவில் நன்றகச் கற்றுக் கோடுத்தது இப்புத்தகம்ஒன்றே.

இது மிகவும் அருமையானது என்று பல மேதாவிகளால் நன்கு மதிக்கப்பட்டது.
அநேக சர்ட்டிபிகேட்டுகள் வந்துகொண்டிருக்கின்றன. உலகமெங்கும் புகழ்பெற்றது.

700 பக்கங் கொண்ட முழு காலிகோ பயிண்ட் புத்தகம் 1க்கு ரூபாய் 2 தான்.
முதல் முதல் இம்மாதிரி வெளிவந்த புஸ்தகம் இதுதான் கவனிக்கவும்.

ஆங்கில ஆசான்
(அல்லது)
ஆங்கில போதினி.
(7-ஆம் பதிப்பு)

எமது ரிஜிஸ்ட்டர் லேடி டிரேட் மார்க் போட்டிருக்கும் புஸ்தகம் பார்த்து வாங்குங்கள்.

மோசம் போகவேண்டாம்!

இப் புத்தகத்தில் காட்டி யுள்ளதுபோல் சில விஷயம் காட்டியிருக்கிறோம் கவனியுங்கள்.

ஏ A, பி B, ஸீ C, டீ D, இ E.
இம்மாதிரியே கையெழுத்து மாதிரியும் காட்டியிருக்கிறது.
ஏ a, பி b, ஸீ c, டீ d, இ e.

ஸீ எச் ஏ ஐ ஆர்—சேர், Chair—நாற்காலி
ஜீ ஏ ஆர் டி இ என்—கார்டன், Garden—தோட்டம்
யு மே ஸ்டார்ட் You may start நீ புறப்படலாம்
ஓபன் தி டோர் Open the door கதவை திற

இப் புத்தகத்தில் முழுமையும் தமிழினலேயே இங்கிலீஷ் எழுத்திற்கு பதங்களுடன் தெளிவாகக் கற்றுக்கோள்ளும் படிக் காட்டியுள்ளது.

ENGLISH TUTOR ஆங்கில ஆசான்
௬௦ நாளில் கலாமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்

நமது "ஆங்கில ஆசான்" மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தமிழ் உபாத்தியாயர்களுக்கும், கிராம முன்சிபு கர்ணங்களுக்கும், போலிஸ் கான்ஸ்டேபிள்களுக்கும், இலங்கை முதலிய தேயிலே காபி தோட்டங்களிலிருக்கும் கங்காணிமார்களுக்கும் மிகவும் முக்கியமானது. எல்லா புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும். கவனித்து வாங்கவும்.

23000 காப்பிகள் இதுவரையில் செலவழிந்திருப்பதே இப்புத்தகத்தின் பெருமைகளேயும், இன்றியமையா உபயோகத்தையும் விளக்கிக்காட்டும்.

தி. இராஜகோபால் முதலியார், "ஆனந்த குண போதினி" புக் டிபோ,
302, தங்கசாலேத் தெரு, மதராஸ்.

1000 தலைவாங்கிய அதிசய சிந்தாமணி மூன்று அப்டோன் படத்துடன் விலே ரூபாய் 1.

பலரின் வேண்டுகோளின்படி பல பாஷைகளிலும் புத்தகம் தயாராயிருக்கிறது.

இங்கிலீஷ் தமிழ் விலே ரூபாய் 2—0—0	மலேயாளம் இங்கிலீஷ் ரூபாய் 2—0—0
தெலுங்கு இங்கிலீஷ் ,, 2—0—0	இங்கிலீஷ் கன்னடம் ,, 2—0—0

"ஆனந்த குணபோதினி" அக்ஷய வருஷ சித்திரைமீ 1௳ முதற்கொண்டு வெளிவரும். அதற்குச் சந்தா தாரராக ரூபாய் 1. மணியார்டர் மூலம் அனுப்பி சேருகிறவர்களுக்கு நமது "லேடி டிரேட் மார்க்" ஆங்கில ஆசான் ரூபாய் 1—8—0 மொத்தம் ரூபாய் 2—8—0.

இந்த ரகசியத்தை ஒருவரும்
பார்க்கக்கூடாது.

அதிக கஷ்டப்பட்டு கண்டுபிடிக்கப்பட்ட ஜெர்மனி கைத்தொழில் சாத்திரம். முதலில்லாத ஏழைகளே! இதுசமயம் மோசம் போகாதிர்கள். இப்புத்தகம் ஒருவர் கையிலிருந்தால் நாள் 1க்குக் குறைந்தது ரூபாய் ௩ முதல் ௫ வரையில் சம்பாதித்து சுலபமாய் ஜீவிக்கும் அநேக கைத்தொழில் முறைகள் இப்புத்தகத்தில் நிறைந்து கிடக்கின்றன. இதைப்போன்ற சாத்திரம் அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்குத்தான் கிடைக்கும். சொல்ப காப்பிகளே கைவசமிருக்கின்றன. முந்துங்கள்! முந்துங்கள்!! ஏப்ரல்மீ முடிவுக்குள் ஆர்டர் அனுப்புவர்களுக்கு ரூ. 1—8—0.

ஆனந்தா & Co.,
மேலவீதி, சிதம்பரம்.

100-வது காலேண்டர் இனும்!
வெளியாகிவிட்டது

ஆநந்த ராமாயணம்.

9-காண்டங்களுக்கு 109 சருக்கங்கள். 12252 கிரந்தத் தொகையுள்ளது, கிளேஸ் கடிதம் உயர்ந்த பையிண்டுடன் ரூபா 6-0-0 மாதர் நீதி ரூபா 1-0-0.
ஸ்ரீ சாது ரத்ந சற்குரு புத்தகசாலே,
4/34 நயினியப்ப நாயக்கன் வீதி,
பார்க்டவுன், (ஊ) சென்னே.

உழைப்பே சிறப்பானல்!
நீடிய, திருப்தி நிறைந்த உழைப்பே சமையல் அடுக்குக்குச் சிறப்பானல்

ருக்மணி குக்கர்

சமையல் அடுக்குக்கு நிரம்பிய சிறப்பு இருக்கிறது. வாங்கி உபயோகித்தவர்களெல்லாரும் திருப்தியையே அடைந்திருக்கிறர்கள். அதே திருப்தி உங்களுக்குக்கிடைக்கும்.

1, 2, 4, 6, 8 பேர்களுக்குரிய 5 அளவுகளில் ரூபாய் 13, 18, 22, 27, 33-ல் கிடைக்கும். தபாற்கூலி வேறு. விபர புத்தகம் இனும்.

ஏஜண்டுகள் தேவை.

ருக்மணி குக்கர் கம்பேனி,
19 மேலண்டை மாதாகோவில் வீதி,
இராயபுரம், சென்னேப்பட்டணம்
காரைக்குடி வள்ளுவா நிலேயத்திலும்,
கிடைக்கும்.

ஏஜண்டுகள் தேவை.

ஊழியனுக்குச் சந்தாச் சேர்க்கவும் விளம்பரங்கள் சேர்க்கவும் ஏஜண்டுகள் ஆங்காங்கு தேவை தக்க கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விபரங்கட்குக் காரியஸ்தருக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

காரியஸ்தர், "ஊழியன்"
காரைக்குடி.

லாபம் பெறவேண்டுமானல்
'ஊழியனில்' விளம்பரம் செய்யுங்கள்.

பெட்டர் இயந்திரங்கள் (Engines.)

PETTERS LIMITED YEOVIL

பெட்டரின் தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களும், விவசாயத்திற்கு உதவும் இயந்திரங்களும், மின்சார வெளிச்ச இயந்திரங்களும் விலே குறைக்கப்பட்டிருக்கின்றன. பயிர்களை இருமடங்கு செய்யுங்கள்.
விலே குறைவு. சாதாரணம். நம்பிக்கையுள்ளது.

ஏஜெண்ட்ஸ்:—பெஸ்ட் அண்டு கோ. லிமிட்டெட்,
இஞ்சினீயர்ஸ், போஸ்ட் பாக்ஸ் No. 63, சென்னே.

ராய. சொக்கலிங்கனல் காரைக்குடி ஊழியன் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

END OF
ISSUE